2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 மே 6 வெள்ளிக்கிழமை

# தினகரன்


THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 105 | Friday 06,May, 2022 | 16பக்கங்கள் | 40/-

## இணையத்தில் உலாவரும் மோடியின் பேசும் படம்

30 வருடங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்டதாம்



ஐரோப்பிய நாடுகளுக்கு இந்தியப் பிரதமர் மோடி சுற்றுப் 06

## இந்தியா வழங்கிய கடனுதவியை அரசு தவறாக பயன்படுத்தவில்லை

பரப்பப்படும் தகவல் பொய் என்கிறார் அலி சப்ரி



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**


அத்தியாவசிய உணவுப் பொருட்களை கொள்முதல் செய்வதற்காக இந்தியா வழங்கிய 750 மில்லியன் அமெரிக்க டொலர்களை இரும்பு கொள்வனவு செய்வதற்காக செலவிட்டதாகப் பரப்பப்படும் தகவல் முற்றிலும் பொய்யானதென நிதி மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நிலையியற் கட்டளை 27 (2) இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 06

பிரதி சபாநாயகர் தெரிவுக்கான வாக்களிப்பு

## நிலையியற் கட்டளைக்கு அமையவே நடைபெற்றதாக சபாநாயகர் அறிவிப்பு

எதிர்க்கட்சி கிளப்பிய சர்ச்சைக்கு பதிலளிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம் ஷம்ஸ் பாஹிம்**

பாராளுமன்றத்தில் நிலையியற் கட்டளைக்கமையவே பிரதி சபாநாயகரை தெரிவு செய்யும் வாக்களிப்பு நடைபெற்றதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் தெரிவித்தார்.

வாக்குச் சீட்டில் வாக்களித்து விட்டு கையொப்பமிட 06

## எரிபொருளுக்கான விலை சூத்திரம் அடுத்தவாரம்

அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



எரிபொருளுக்கான வெளிப்படையான விலைச் சூத்திரத்தை அடுத்த வாரம் அமைச்சரவைக்கு அறிமுகப் படுத்தவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர நேற்று (வியாழக்கிழமை) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்படுவது இலாபம் ஈட்டுவதற்காக அல்ல என்றும் நட்டத்தைக் குறைப்பதற்காகவே என்றும் அமைச்சர் 06

மீண்டும் பெரும்பான்மையை நிரூபித்தது அரசாங்கம்

# புதிய பிரதி சபாநாயகராக ரஞ்சித் சியம்பலாபிட்டிய

83 மேலதிக வாக்குகளால் மீண்டும் தெரிவானார்



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் புதிய பிரதி சபாநாயகராக பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய 83 மேலதிக வாக்குகளால் நேற்று (05) மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்.

பிரதி சபாநாயகரைத் தெரிவுசெய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பு நேற்று நடத்தப்பட்டது.

ஆதரவாக – 148 எதிர்த்துப் போட்டியிட்ட இம்தியாஸுக்கு 65
03 வாக்குகள் செல்லுபடியாகவில்லை

சம்பந்தன், சீ.வி, வினோ, இம்ரான்,ஜோன், விமல், மயந்த, உதித்த வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை

இதில் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுக்கு ஆதரவாக 148 வாக்குகள் அளிக்கப்பட்டதுடன், இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கு ஆதரவாக 65 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதில் செல்லுபடியாகாத 03 வாக்குகளும் பதிவாகியிருந்தன. 06

இரகசிய வாக்கெடுப்பு சீட்டை காண்பித்தமை

## எதிர்க்கட்சித் தலைவரது தவறான செயற்பாடு

சபாநாயகர் மஹிந்த யாப்பா தெரிவிப்பு



பிரதி சபாநாயகர் தெரிவுக்கான வாக்களிப்பு நேற்று (05) பாராளுமன்றத்தில் இடம்பெற்றபோது, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, தனது வாக்குச்சீட்டை எதிர்க்கட்சி அணியின் முன்வரிசையில் அமர்ந்துள்ளவர்களுக்கு காண்பித்தார்.

இதன்போது எதிர்க்கட்சி தலைவரின் செயற்பாடு முற்றிலும் தவறானது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

வாக்களிப்பவர்களின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படும். அதற்கு பாராளுமன்ற செயலாளர் நாயகம் பொறுப்பு என சபாநாயகர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வாக்களிக்கும்போது முஜிபுர் ரஹ்மான், ஹர்ஷன ராஜகருண ஆகியோர் அதனை தொலைபேசியில் புகைப்படம் எடுத்தார்கள். சபாநாயகர் ஹர்ஷன ராஜகருணவின் பெயரை குறிப்பிட்டு புகைப்படம் எடுப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள், இரகசியத் தன்மை பற்றி பேசிக் கொண்டு இவ்வாறு செயற்படுகின்றீர்கள் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

## இ.போ.சபை பஸ்கள் இன்று சேவையில் ஈடுபடும்

கிங்ஸ்லி ரணவக்க தெரிவிப்பு



அனைத்து இலங்கை போக்குவரத்து சபை பஸ்களும் இன்று வழமை போன்று இயங்குமென இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

அனைத்து தொழிற்சங்கங்களுடனும் கலந்துரையாடியதன் பின்னர் 06

## சஜித்தின் தாயார் நடேசன் வீட்டில் யாரை சந்தித்தார்?

அதன் பின்னரே பொது உடன்பாட்டில் குழப்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்**



திருக்குமார் நடேசனின் வீட்டில் சஜித் பிரேமதாசவின் தாயார் யாரை சந்தித்தார்? இந்த டீலின் பின்னரே பொது உடன்பாடு குழம்பியதாக சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் 06

நுரைச்சோலை இயந்திர பழுதின் எதிரொலி

## மின் துண்டிப்பு நேரத்தை மேலும் அதிகரிக்க வாய்ப்பு





நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் மின் உற்பத்தி இயந்திரமொன்று செயலிழந்துள்ளதால் மின்தடை அமுலாகும் காலப்பகுதியை நீடிக்க வேண்டுமென இலங்கை மின்சார 06

## அரசுக்கு ஆதரவாக 148 MPக்கள் உள்ளனர்

மக்கள் பக்கம் 65 பேர் மட்டுமே



பாராளுமன்றில் 65 பேர் மட்டுமே மக்களுக்காக உள்ளதாகவும் 148 பேர் ராஜபக்ஷக்களுடன் அரசுக்கு ஆதரவாக தற்போதும் உள்ளனர் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் 06



## SLFPயும் ஏனைய சில எம்பிக்களும் அரங்கேற்றிய நாடகம் அம்பலம்

டுவிட்டரில் பதிவினை வெளியிட்ட சுமந்திரன் 03



கணனி கட்டமைப்பில் மீண்டும் கோளாறு

## கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது இடைநிறுத்தம்

03



## பலத்தை காட்டும் சந்தர்ப்பத்தை காட்டிக் கொடுத்தது எதிர்க்கட்சி

பிரதி சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்ட ரஞ்சித் சாடல் 03

## ஸ்ரீலங்கன் விமானங்களின் கொள்வனவு நிறுத்தம்!

03 மாதங்களுக்கு ஒத்திவைப்பு – சரித்த ஹேரத் MP



ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு புதிய விமானங்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் மூன்று மாதங்களுக்கு ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று இது தொடர்பான அறிவித்தலை பாராளுமன்ற உறுப்பினர் சரித்த ஹேரத் தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் இந்த விமானக் கொள்வனவுகளை மேற்கொள்ளக்கூடாது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட்ட பலரும் கோரிக்கையை விடுத்து 06

## டீசல் விநியோகத்தில் தாமதம் ஏற்படலாம்

03 நாட்களில் பெற்றோல் வழமைக்கு வரும்



டீசல் விநியோகத்தில் சற்று தாமதம் ஏற்படலாம் என வலுசக்தி மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று(05) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன், பெற்றோல் விநியோகம் மூன்று நாட்களுக்குள் சீராகும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

## நெருக்கடிக்கு தீர்வுகாண்பதற்கு ஒன்றிணைந்த கலந்துரையாடல்

அனைத்து கட்சிகளுக்கும் – ரணில் MP அழைப்பு



நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைக்கு தீர்வுகாண அனைவரும் இணைந்து கலந்துரையாடவேண்டும். பிளவுகளை விட ஒன்றிணைந்து செயற்படுவதே இன்றைய முக்கிய தேவையாக உள்ளதென தெரிவித்த முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, வரவு – செலவு திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் தேவையற்ற செலவுகளை குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவது அவசியம் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (04) இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல் 06





## இலங்கை மக்களுக்கு உதவ திமுக ரூ. 01 கோடி நிதியுதவி

முதலமைச்சரிடம் வழங்கினார் டி.ஆர்.பாலு

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



இலங்கை மக்களுக்கு உதவிடும் தமிழக முதல்வர் பொது நிவாரண நிதிக்கு தி.மு.க பொருளாளர் டி.ஆர். பாலு, பொதுச்செயலாளர் துரைமுருகன் ஆகியோர் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து திமுக சார்பில் வழங்கப்படும் ஒரு கோடி ரூபாய் நிதிக்கான காசோலையை 06

## தேயிலை ஏற்றுமதியில் பாரிய வீழ்ச்சி

23 வருடங்களின் பின் குறைந்த மட்டம்



உரத்தடை மற்றும் உக்ரைன் போரினால் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி 23 வருடங்களில் மிகக் குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

நாட்டின் மிகப்பெரிய 06

அலி சப்ரி ரஹீம் MPயின்

## வாகனத்தில் மோதுண்டு நபர் ஒருவர் பலி!

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீமின் வாகனத்தில் மோதுண்டு நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாலாவி கற்பிட்டி பிரதான வீதியில் நேற்று முன்தினமிரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் புத்தளம் பகுதியைச் சேர்ந்த 44 வயதுடையவர் என தெரிய வந்துள்ளது.

விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில், பாராளுமன்ற 06

## பிலிப்பைன்ஸில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம்



தெற்கு பிலிப்பைன்ஸில் உள்ள டாவோ ஓரியண்டல் மாகாணத்தில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டதாக பிலிப்பைன்ஸ் எரிமலை மற்றும் நில அதிர்வு ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. 06



2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# சர்வதேச செய்திகள்

## பாக். முதலீட்டாளர் அச்சம்



கொவிட்– 19 தொற்று மற்று ம் உக்ரைன்–ரஷ்யப் போரின் உலகளாவிய சவால்களால் மோசமடைந்த பாகிஸ்தானின் பொருளாதாரத்தின் பலவீனமடைந்த நீண்டகால கட்டமைப்பு, நாட்டின் முதலீட்டாளர்களை அச்சமடையச் செய்திருப்பதாக கூறப்படுகிறது.

பாகிஸ்தான் அபிவிருத்தி தொடர்பான உலக வங்கியின் அண்மைய அறிக்கையும், குறைந்த முதலீடு, குறைந்த ஏற்றுமதி மற்றும் குறைந்த உற்பத்தித் திறன் வளர்ச்சி உட்பட பாகிஸ்தான் பொருளாதாரத்தின் கட்டமைப்பு பலவீனம் பற்றி சுட்டுக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், உச்ச உள்நாட்டு கேள்வி அழுத்தங்கள் மற்றும் உலகளாவிய பொருட்களின் விலை அதிகரிப்பு நாட்டில் இரட்டை இலக்க பணவீக்கத்தை ஏற்படுத்தி இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இறக்குமதிகளின் வேகமான அதிகரிப்பு பாகிஸ்தான் ரூபாயில் பாதிப்பை ஏற்படுத்தும் நிலையில் நெருங்கிய எதிர்காலத்தில் நாட்டின் வளர்ச்சி வேகம் அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பு இன்றி உள்ளது.

நிதித் துறையின் பற்றாக்குறைக்கு இந்த குறைவான வளர்ச்சியும் ஒரு காரணம் என்று உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

## புழுதிப்புயல் தாக்கி ஈராக்கில் 1000 பேர் மருத்துவமனையில்



ஈராக்கில் கடந்த ஒரு மாதத்தில் ஏழாவது முறையாகவும் தாக்கிய புழுதிப் புயல் காரணமாக சுவாசப் பிரச்சினையால் 1,000க்கும் அதிகமானவர்கள் மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஈராக்கின் 18 மாகாணங்களில் தலைநகர் பக்தாத் மற்றும் பரந்த மேற்குப் பிராந்தியமான அல் அன்பார் உட்பட ஆறு மாகாணங்களைச் சேர்ந்த மக்கள் வானத்தை சூழ்ந்த அடர்ந்த தூசி மேகத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மக்களை வீடுகளில் இருக்கும்படி தலைநகரின் வடக்கில் உள்ள கிர்குக் மற்றும் அல் அன்பார் மாகாண நிர்வாகங்கள் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளன.

ஈராக் மோசமான காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளில் அங்கு குறைந்த மழைவீழ்ச்சி மற்றும் அதிக வெப்பநிலையை எதிர்கொண்டுள்ளது. இது போரால் பாதிக்கப்பட்ட அந்த நாடு சமூக மற்றும் பொருளாதார பேரழிவை எதிர்கொள்ளும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி இருப்பதாக அவதானிகள் எச்சரித்துள்ளனர்.

காலநிலை மாற்றத்தால் 2050 ஆம் ஆண்டாகும்போது ஈராக்கின் நீர் வளங்கள் 20 வீதம் வீழ்ச்சி அடைய வாய்ப்பு இருப்பதாக உலக வங்கி கடந்த நவம்பரில் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உகண்டா பஸ் விபத்தில் இருபது பேர் உயிரிழப்பு



மேற்கு உகண்டாவில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் இருபது போர் பலியாகியுள்ளனர். உயிரிழந்தவர்களில் குறைந்தது ஆறு சிறுவர்கள் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போர்ட் போர்டல் நகரில் இருந்து தலைநகர் கம்பாலாவை நோக்கி சென்று கொண்டிருந்த இந்த பஸ் வண்டி நெடுஞ்சாலையில் இருந்து விலகி தேயிலை தோட்டம் ஒன்றில் விபத்துக்குள்ளாகி உள்ளது.

இதன்போது பஸ் வண்டியின் முன்பக்க டயர் வெடித்ததை அடுத்து வீதியில் தறிகட்டு ஓட்டிய நிலையில் தேயிலைத் தோட்டத்துக்குள் பாய்ந்து பலமுறை உருண்டதாக சம்பவத்தை பார்த்த அந்தத் தேயிலைத் தோட்டத்தில் தேயிலை பறிப்பவர் ஒருவர் கூறியுள்ளார்.

சேதமடைந்த பஸ் வண்டிக்குள் இருக்கும் உயிர்தப்பியவர்களை அவசர சேவை பிரிவினர் மீட்க முயற்சிப்பது சமூக ஊடகத்தில் வெளியான படங்களில் தெரிகிறது.

உகண்டாவில் அண்மைய ஆண்டுகளில் இடம்பெற்ற மிக மோசமான வீதி விபத்துகளில் ஒன்றாக இது உள்ளது.

எனினும் குறுகிய மற்றும் குழிகளை கொண்ட உகண்டா வீதிகளில் விபத்துகள் இடம்பெறுவது வழக்கமானதாக உள்ளது.

## சுவீடனின் மருத்துவரை துக்கிலிட ஈரான் திட்டம்



உளவுபார்த்ததாக குற்றங்காணப்பட்ட சுவீடன் மற்றும் ஈரான் நாட்டு மருத்துவர் மீது ஈரான் மரண தண்டனை நிறைவேற்ற திட்டமிடுவது தொடர்பில் சுவீடன் வெளியுறவு அமைச்சர் கடும் கவலையை வெளியிட்டுள்ளார்.

50 வயதான அஹமது ரேசா டிஜலாலி மீது வரும் மே 21 ஆம் திகதி மரண தண்டனை நிறைவேற்றப்பட வாய்ப்பு இருப்பதாக ஈரானின் அரச சார்பு இஸ்னா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சுவீடன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் இந்த மரண தண்டனையை கண்டிப்பதாகவும் டிஜலாலியை உடன் விடுவிக்க வேண்டும் என்றும் சுவீடன் வெளியுறவு அமைச்சர் ஆன் லின்டோ, ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

2016 ஆம் ஆண்டு வர்த்தகப் பயணம் ஒன்றாக ஈரான் சென்றிருந்த போது அவசர மருத்துவ நிபுணரான டிஜலாலி கைது செய்யப்பட்டார். அவர் இஸ்ரேலுக்காக உளவு பார்த்ததாக குற்றஞ்சாட்டப்பட்டார்.

டெஹ்ரானில் உள்ள புரட்சிகர நீதிமன்றம் 217ஆம் ஆண்டில் அவர் மீது மரண தண்டனை விதித்தது.

## 22 ஆண்டுகளில் முதல்முறை அமெ. வட்டி வீதம் அதிகரிப்பு



வேகமான விலை அதிகரிப்பை கட்டுப்படுத்தும் முயற்சியாக கடந்த 22 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அமெரிக்க மத்திய வங்கி வட்டி வீதத்தை அதிகரித்துள்ளது.

கடந்த மார்ச்சில் சிறிய அளவு அதிகரிப்பைச் செய்த நிலையில் முக்கிய வட்டி வீதத்தை அரைப் புள்ளி அதிகரித்திருப்பதோடு அது 0.75 மற்றும் ஒரு வீதத்துக்கு இடைப்பட்டு இருக்கும் என்று மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவில் பணவீக்கம் 40 ஆண்டுகளில் இல்லாத உச்சத்தை தொட்டிருப்பதோடு அது மேலும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகெங்குமுள்ள வீட்டுடைமையாளர்கள் நெருக்கடியை சந்தித்திருக்கும் வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்தும் புதிய முயற்சியாகவே இது உள்ளது.

இந்திய மத்திய வங்கி எதிர்பாராத விதமாக அண்மையில் வட்டி வீதத்தை அதிகரித்த அதே நேரம் அவுஸ்திரேலிய மத்திய வங்கியும் கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலான காலத்தில் இந்த நடவடிக்கையை எடுத்தது.

இங்கிலாந்து வங்கியும் தனது வட்டி வீதத்தை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மரியுபோல் உருக்காலையில் ரஷ்யா போர்நிறுத்த அறிவிப்பு

### பொதுமக்கள் தப்பிக்க வாய்ப்பு



பேரழிவை சந்தித்துள்ள உக்ரைனிய நகரான மரியுபோலில் இருக்கும் முற்றுகையில் உள்ள உருக்காலையில் ரஷ்யப் போர் நிறுத்தம் ஒன்றை அறிவித்துள்ளது.

இங்கு சிக்கியுள்ள உக்ரைனிய படையினர் தொடர்ந்து போராடப்போவதாக கூறியிருக்கும் நிலையில் பொதுமக்கள் வெளியேறுவதற்கு வழிவகுக்கும் வகையிலேயே நேற்று தொடக்கம் இந்தப் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளது.

இந்த அசோவ்ஸ்டால் உருக்காலையில் மூன்று நாட்களுக்கு ரஷ்யாவின் தாக்குதல் நிறுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது. ரஷ்ய எண்ணெய் மீது தடை விதிப்பது குறித்து ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள் விவாதிக்கும் நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இவ்வாறான ஒரு தடை ரஷ்யாவுக்கு எதிராக இதுவரை கொண்டுவரப்பட்ட மிகக் கடுமையான தடையாக அமையும் என்று கூறப்படுகிறது.

மூலோபாயம் மிக்க தெற்கு துறைமுக நகரான மரியுபோலில் ரஷ்யா உக்கிர தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் பெரும் உயிரிழப்புகள் மற்றும் அடிப்படை விநியோகங்கள் துண்டிக்கப்பட்டு பெரும் அழிவை சந்தித்துள்ளது.

இங்கிருக்கும் உக்ரைனிய படையினர் அசோவ்ஸ்டால் உருக்காலையை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இங்கு கடந்த புதன்கிழமையும் கடும் சண்டை இடம்பெற்றதாக மரியுபோல் மேயர் வடிம் பைசென்கோ தெரிவித்தார்.

ரஷ்யா பீரங்கிகள், டாங்கிகள், விமானங்கள் மற்றும் கடற்கரைக்கு அப்பால் இருக்கும் கப்பல்களைக் கொண்டு கடுமையாக தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

“உள்ளூர் குடியிருப்பாளர்கள், பொதுமக்கள் என்று நூற்றுக்கணக்கானவர்கள் அங்கு உள்ளனர். சிறுவர்கள் மீட்கப்படும் வரை காத்திருக்கின்றனர். அங்கு 30க்கும் அதிகமான குழந்தைகள் உள்ளன” என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் இங்குள்ள பொதுமக்களை வெளியேற்றும் முயற்சியாகவே ரஷ்யா மூன்று நாள் போர் நிறுத்தத்தை அறிவித்திருப்பதாக ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

எனினும் ரஷ்யா போர் நிறுத்தத்தை அறிவித்த பின்னரும் தொடர்ச்சியாக தாக்குதல்களை நடத்துவதாக அமெரிக்க இராஜாங்க திணைக்கள பேச்சாளர் நெட் பிரைஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மரியுபோல் நகரில் இருந்து வெளியேற்றப்பட்ட 300க்கும் மேற்பட்ட உக்ரைனியர்கள் சபோரிஜியா நகருக்கு அழைத்துச் செல்லப்படுவதாக அந்நாட்டு ஜனாதிபதி செலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ரஷ்யப் படைகளால் முற்று கையிடப்பட்ட மரியுபோலில் உள்ள உருக்காலையில் பதுங்கி இருந்த 344 பொதுமக்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

அங்கு மேலும் பலர் சிக்கியிருப்பதாக கூறப்படும் நிலையில், மீட்கப்பட்டவர்கள் உக்ரைனின் கட்டுப்பாட்டில் இருக்கும் சபோரிஜியா நகருக்கு அழைத்துச் செல்லப்படுவதாக செலென்ஸ்கி கூறியுள்ளார்.

அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் எனவும் நாட்டு மக்களிடம் நிகழ்த்திய உரையில் உக்ரைன் ஜனாதிபதி செலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

## பெரு நாட்டில் இருமுறை மரணித்தவரால் பரபரப்பு



பெரு நாட்டில் வீதி விபத்தில் உயிரிழந்ததாக கூறப்பட்ட பெண் ஒருவர் தனது இறுதிக் கிரியையில் விழித்துக் கொண்டதை அடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

நம்பயாகு நகரில் ஏற்பட்ட விபத்தில் ரொசா அசபெல் காஸ்பெடெஸ் கலகா உயிரிழந்ததாக மருத்துவர்களாக தவறுதலாக கூறப்பட்டது. இந்த விபத்தில் அவரது மைத்துனர் ஒருவர் கொல்லப்பட்டதோடு மேலும் மூவர் படுகாயம் அடைந்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இறுதிக் கிரியையில் ரொசா சவப்பெட்டியில் மூடப்பட்டிருந்தார். எனினும் சவப்பெட்டிக்குள் இருந்து தட்டும் சத்தம் கேட்டு அதனை திறந்து பார்த்த உறவினர்கள் ரொசா கண்கள் திறந்து வியர்த்திருந்ததை கண்டனர்.

அவர் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். ஆனால் சில மணி நேரத்திலேயே அவர் மீண்டும் உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

சீனாவில் நோயாளி ஒருவரை பிணப் பையில் இட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## ஒமிக்ரோன் துணைரகத்தால் தொற்று சம்பவம் அதிகரிப்பு



கொரோனா தொற்றின் ஒமிக்ரோன் திரிபைச் சேர்ந்த இரண்டு துணைரகங்கள் தொடர்பில் தென்னாபிரிக்காவில் தொற்றுச் சம்பவங்கள் கணிசமாக அதிகரித்துள்ளன.

பி.ஏ.4, பி.ஏ.5 ஆகிய துணைரகங்கள் தொடர்பில் பெரும்பாலான சம்பவங்கள் பதிவானதாகக் கூறப்பட்டது. மற்ற துணைரகங்களுடன் ஒப்பிடுகையில், அவற்றின் பாதிப்பு மோசமானதா என்பது குறித்து அவ்வளவாகத் தெரியவில்லை.

உருமாற்றம் பெற்றுள்ள துணைரகங்களின் தன்மைகள் வேறுபடலாம் என்று அண்மையில் தெரியவந்துள்ளது.

இருப்பினும், தடுப்புமருந்து மோசமான பாதிப்பிலிருந்து பாதுகாப்பை வழங்கக்கூடும் என்று முதற்கட்ட ஆய்வுகள் கூறுவதாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் கேப்ரியேசஸ் தெரிவித்தார். உலகளவில் பி.ஏ.2 துணைரகம் தொடர்பில் பெரும்பாலான தொற்றுச் சம்பவங்கள் பதிவாகின்றன.

இந்நிலையில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதும் மாதிரிகள் ஆராயப்படுவதும் முக்கியம் என்று டெட்ரோஸ் வலியுறுத்தினார்.

அதன்மூலம் தென்னாபிரிக்காவில் புதிய துணைரகங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய அவர், பல நாடுகளில் நடைமுறை நிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறினார்.

நாடுகளில் வைரஸ் பெரும் உருமாற்றத்தைக் கண்காணிக்கமுடியவில்லை என்று டெட்ரோஸ் குறிப்பிட்டார்.

## ஆப்கான் மழை வெள்ளத்தில் 22 பேர் பலி: 40 பேர் காயம்



ஆப்கானிஸ்தானில் பெய்த கடும் மழையால் பெருகிய வெள்ளத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். வெள்ளத்தில் நூற்றுக்கணக்கான வீடுகளும் விவசாய நிலங்களும் அழிக்கப்பட்டன.

தலிபான் அரசாங்கம் இயற்கைப் பேரிடரின் பின்விளைவுகளைச் சமாளிப்பதில் சிரமத்தை எதிர்நோக்குகிறது. அது சர்வதேச நிவாரண அமைப்புகளிடமிருந்து உதவி நாடும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெள்ளத்தில் ஆப்கானிஸ்தானின் 12 மாநிலங்கள் பாதிக்கப்பட்டன. அதில் 40 பேர் காயமுற்றனர்.

இதில் 500 வீடுகள் அழிந்திருப்பதோடு மேலும் 2,000 வீடுகள் சோதமடைந்துள்ளன. சுமார் 300 கால்நடைகள் கொல்லப்பட்டு 3,000 ஏக்கர் பயிர் நிலம் சேதமடைந்திருப்பதாக ஆப்கான் தேசிய அனர்த்த முகாமைத்துவ அதிகார சபையின் தகவல் தொடர்பாடல் தலைவர் ஹசிபுல்லா ஷெகானி தெரிவித்துள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாகப் பஞ்சத்தில் வாடும் ஆப்கானிஸ்தானில் பருவநிலை மாற்றத்தால் உணவுப் பற்றாக்குறை நிலவுகிறது. இந்நிலையில் அங்கு வெள்ளமும் சேர்ந்து நிலைமையை மேலும் சிக்கலாக்கியுள்ளது.

## பெண் ஓட்டுநர் உரிமத்தை நிறுத்தியது தலிபான் அரசு



ஆப்கான் தலைநகர் காபுல் மற்றும் ஏனைய நகரங்களில் பெண்களுக்கு வாகன ஓட்டுநர் உரிமம் வழங்குவதை அந்நாட்டின் தலிபான் அரசு நிறுத்தி இருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

தலிபான் ஆட்சிக்கு வரும் முன், காபுல் உட்பட பிரதான நகரங்களில் பெண்கள் வாகனம் ஓட்டுவதை காண முடிந்தது. எனினும் தற்போது பெண்களுக்கு ஓட்டுநர் உரிமம் வழங்குவதை தலிபான்கள் நிறுத்தி இருப்பதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

“பெண்களுக்கு ஓட்டுநர் உரிமம் வழங்குவதை நிறுத்தும்படி எமக்கு வாய்மொழி மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. ஆனால் பெண்கள் நகரில் வாகனம் ஓட்டுவதை நிறுத்தும்படி எமக்கு அறிவுறுத்தப்படவில்லை” என்று ஓட்டுநர் பயிற்சி கல்லூரிகளை மேற்பார்வையிடும் ஹெரட் நகர போக்குவரத்து முகாமை நிறுவனத் தலைவர் ஜான் அகா அசக்சாய் தெரிவித்துள்ளார்.

கடந்த ஓகஸ்டில் தலிபான்கள் மீண்டும் ஆட்சிக்கு திரும்பியது தொடக்கம் ஆப்கானில் மனித உரிமை நிலை மோசமடைந்திருப்பதாக கூறப்படுகிறது. குறிப்பாக பெண்களுக்கு எதிரான உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
2022 மே 6 வெள்ளிக்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 04.37
லுஹர் - 12.09
அஸர் - 03.27
மஃரிப் - 06.19
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 23
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



நாட்டின் நெருக்கடி நிலைக்கு

# தீர்வு காணும் பொறுப்பை அரசு ஒருபோதும் கைவிட்டு விடாது



## அமைச்சர் ரமேஷ் பதிரண

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

நாட்டின் நெருக்கடி நிலைக்கு தீர்வு காணும் பொறுப்பை அரசாங்கம் ஒரு போதும் கைவிட்டு விடாதென அமைச்சர் ரமேஷ் பத்திரண பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது என்றும் அவர் நேற்று சபையில் தெரிவித்தார். நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு ஜனாதிபதி விடுத்த அழைப்பை குறுகிய அரசியல் காரணங்களுக்காகவே எதிர்க்கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர் அனைவரும் இணைந்து பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியது அவசியம் என்பதையும் சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

அரசாங்கம் கொரோனா வைரஸ் சூழ்நிலையில் மக்களுக்கு வழங்கக்கூடிய நிவாரணமாகவே வரி குறைப்பை மேற்கொண்டது. அது மட்டுமன்றி பெருமளவு நிவாரணங்களை மக்களுக்கு வழங்கியதுடன் பல்வேறு கடன்களை 06

கணனி கட்டமைப்பில் மீண்டும் கோளாறு:

# கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது இடைநிறுத்தம்

## வழமைக்கு திரும்பியதும் அறிவிப்பதாக தெரிவிப்பு




கணனி கட்டமைப்பில் மீண்டும் கோளாறு ஏற்பட்டதன் காரணமாக கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் செயற்பாடு நேற்று (5) தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கணனி கட்டமைப்பில் ஏற்பட்ட திடீர் செயலிழப்பு காரணமாக, செவ்வாய்க்கிழமை (3) அத்தியாவசியமற்ற சேவைகளுக்காக குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு விஜயம் செய்வதை தவிர்த்து கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக திணைக்களத்தின் ஒரு நாள் சேவையில் தாமதம் ஏற்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது.

இருப்பினும், இந்த திடீர் செயலிழப்பு சரிசெய்யப்பட்டு வழமையான சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நேற்றுமுன்தினம் (4) குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்தது.

இந்நிலையில், நேற்றைய தினம் கணனி கட்டமைப்பில் மீண்டும் கோளாறு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# SLFPயும் ஏனைய சில எம்பிக்களும் அரங்கேற்றிய நாடகம் அம்பலம்

## டுவிட்டரில் பதிவினை வெளியிட்ட சுமந்திரன்



பிரதி சபாநாயகர் தெரிவு விடயமானது அரசாங்கத்தில் இருந்து வெளியேறி விட்டதாக கூறியவர்களின் நாடகத்தை அம்பலப்படுத்தியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று டுவிட்டரில் அவர் வெளியிட்ட பதிவிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த பதிவில் “பிரதி சபாநாயகர் பதவிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் முன்மொழியப்பட்டுள்ள ரஞ்சித் சியம்பலாபிட்டியவுக்கு ஆதரவு வழங்குவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஏனைய சிலர் அரசாங்கத்திலிருந்து விலகிவிட்டதாக அண்மைய நாட்களில் அரங்கேற்றிய நாடகத்தை இது அம்பலப்படுத்தியுள்ளது” எனப் பதிவிட்டுள்ளார்.

இலங்கை அரசின் வேண்டுகோள்

# மருந்துகள், மருத்துவ உபகரணங்கள்; இந்தோனேசிய அரசு நன்கொடை

## 08 ஆம் திகதி 02 ஆவது தொகுதி வருகிறது

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, இலங்கை மக்களுக்கான மனிதாபிமான உதவியாக 1.5 மில்லியன் டொலர் பெறுமதியான 11 வகையான மருந்துகளையும் 08 வகையான மருத்துவ உபகரணங்களையும் இந்தோனேசிய அரசாங்கம் நன்கொடையாக வழங்கியுள்ளது.

இதன் முதற்தொகுதி கடந்த 28 ஆம் திகதி இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் ஏனைய தொகுதி மருந்துப்பொருட்கள் நாளை மறுதினம் 08 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.




மனிதாபிமான உதவிகள் வழங்கும் நிகழ்வு கடந்த 28ஆம் திகதி சோகர்னோ ஹட்டா சர்வதேச விமான நிலையத்தின் கபுரா ஏற்றுமதி களஞ்சிய கட்டடத்தில் நடைபெற்றது. இந்தோனேசியா மற்றும் ஆசியான் நாடுகளுக்கான இலங்கைத் தூதுவர் யசோஜா குணசேக்கரவிடம் இந்தோனேசிய சுகாதார அமைச்சின் செயலாளர் நாயகத்தினால் நன்கொடை கையளிக்கப்பட்டது.

# பலத்தை காட்டும் சந்தர்ப்பத்தை எதிர்க்கட்சி காட்டிக் கொடுத்துவிட்டது

## பிரதி சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்ட ரஞ்சித் சாடல்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



எதிர்கட்சிகளின் பலத்தை காட்டும் சந்தர்ப்பத்தை எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, காட்டிக் கொடுத்து விட்டதாக பிரதி சபாநாயகராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ள ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

நேற்று காலை வரை தம்மை பிரதி சபாநாயகராக தெரிவு செய்வது என்ற முடிவுக்கு எதிர்க்கட்சியும் இணக்கம் வெளியிட்டிருந்தது

எனினும் இறுதி நேரத்தில் எதிர்கட்சி காட்டிக் கொடுத்துவிட்டதாகவும் இதன் மூலம் வெளியில் இடம்பெறும் போராட்டங்களை எதிர்க்கட்சி காட்டிக்கொடுத்து விட்டதாகவும் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய குறிப்பிட்டார். அரசாங்க கட்சி தமது தெரிவுக்கு விருப்பம் வெளியிட்டபோதும், பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் 06

நெருக்கடியை தீர்க்கக்கூடிய:

# முதுகெலும்புள்ள எதிர்க்கட்சி தலைவர்கள் இருந்தால் முன்வரட்டும்

## முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன சபையில் சவால்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

நாட்டின் தற்போதைய அனைத்து நெருக்கடிகளுக்கும் எம்மால் தீர்வு பெற்றுக் கொடுக்க முடியும் எனக் கூறும் முதுகெலும்புள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் எவராவது இருந்தால் முன் வரட்டும் என முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன பாராளுமன்றத்தில் சவால் விடுத்தார்.

அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்திலேயே பாராளுமன்றத்தை கலைக்கக் கூடிய அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது என்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர், அதற்கு முன்னர் பாராளுமன்றத்தை கலைப்பதானால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமானால் அதில் முதலாவது கையொப்பத்தை இடுவதற்கு தாம் தயார் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



சபையில் தொடர்ந்து உரையாற்றிய அவர்:

அரசாங்கமும் சுயாதீனமாக செயற்படும் பாராளுமன்ற குழுவினரும் சந்தித்து சர்வ கட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர். அதற்கு அனைத்து கட்சிகளதும் ஒத்துழைப்புக்கள் கோரப் பட்டுள்ளன.

நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்து அதன் மூலம் அரசாங்கத்தை அமைப்பதற்கு எதிர்க்கட்சியினர் எடுத்துள்ள நடவடிக்கைக்கும் நாம் இடமளித்துள்ளோம்.

தத்தமக்குத் தேவையான விடயங்களை நிறைவேற்றுவது மற்றும் அரசியல் ரீதியான குரோதம் என பல்வகை நிகழ்ச்சி நிரல்கள் காணப்படுகின்றன. எனினும் நாட்டுக்கு தற்போது அதுவல்ல அவசியம் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். 06

# நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண எந்த திட்டமும் இல்லை

## ரவூப் ஹக்கீம் எம்.பி தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

அரசாங்கம் செய்த தவறுக்காக மன்னிப்பு கோரிய போதும் நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்கு தீர்வுகாண எந்த வேலைத்திட்டமும் முன்வைக்கப்படவில்லையென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல் தொடர்பில் நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.



அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாங்கள் கடந்த 02 வருடங்களாக தெரிவித்து வருவதையே நிதி அமைச்சர் நேற்று சபைக்கு அறிவித்திருந்தார். நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்கு எந்த தீர்வும் அவரது பேச்சில் இருக்கவில்லை. இதன் மூலம் நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்கு தீர்வுகாண அரசாங்கத்திடம் எந்த வேலைத்திட்டமும் இல்லையென்பது தெளிவாகின்றது. நிதி அமைச்சர் தனது உரையில் அரசாங்கம் செய்த தவறுக்காக மன்னிப்பு கோரினாரே தவிர வேறு எதனையும் தெரிவிக்கவில்லை. பிரச்சினைக்கு தீர்வுகாண எதிர்க்கட்சி சார்பில் பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டன. காலி முகத்திடலிலிருந்து மக்களின் கோஷம் இவர்களுக்கு 06

# முறிகண்டி செல்வபுரம் பகுதியில் பாரிய விபத்து; ஒருவர் தெய்வாதீனமாக தப்பிப்பு

**பரந்தன் குறூப் நிருபர்**



முறிகண்டி திசையிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த ஜீப் ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதி அருகில் உள்ள மரங்களுடன் பலமாக மோதியுள்ளது.

விபத்தில் தெய்வாதீனமாக வைத்தியர் ஒருவர் சிறு காயங்களுடன் தப்பித்துள்ளார். முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முறிகண்டி செல்வபுரம் பகுதியின் A9 வீதியில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

வாகனம் மரங்களுடன் மோதியமையால் வர்த்தக நிலையத்தில் சிறு சிறு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. எனினும் பாரிய விபத்திலிருந்து மக்கள் குறித்த மரங்களால் தப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 06

# மக்களின் குரலை பிரதிநிதித்துவப்படுத்தும் இடமாக பாராளுமன்றம் அமைய வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



மக்களின் குரலை பிரதிநிதித்துவப்படுத்தும் இடமாக பாராளுமன்றம் அமைய வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் தெரிவின் பின்னர் சபையில் கருத்துத் தெரிவித்த அவர்,

எதிரணி சார்பில் என்னை பிரதி சபாநாயகர் பதவிக்கு பிரேரித்தமைக்கு நன்றி தெரிவிக்கிறேன். எனக்கு வாக்களித்த வாக்களிக்காத அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன். மக்களின் குரலை பிரதிநிதித்துவப்படுத்தும் இடமாக பாராளுமன்றம் அமைய வேண்டும்.

நம்பகத்தன்மையை பாதுகாக்க முடியாமல் போவது சிக்கலானது. ஆட்சிக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கியுள்ளனர். மக்களின் கருத்தை மதித்து தைரியமாக வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன். 06

# பிரதி சபாநாயகர் தெரிவு: ஆளும் தரப்பு வாழ்த்து

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



ஜனநாயக ரீதியான வாக்கெடுப்பினூடாக ரஞ்சித் சியம்பலாபிட்டிய பிரதி சபாநாயகராக தெரிவாகியுள்ளார். அவருக்கு பிரதமர் மற்றும் ஆளும் தரப்பு சார்பில் வாழ்த்துவதாக சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் தெரிவு தொடர்பில் எதிரிணியின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்த அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

பிரதி சபாநாயகராக ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவாகியுள்ளார். அவர் எந்தக் கட்சியை சேர்ந்தவர் என்பது முக்கியமல்ல. இதற்கு முன்னரும் எதிரணியில் இருந்து உயர்பதவிகளுக்கு தெரிவாகியுள்ளனர். வெற்றி தோல்வி இரண்டையும் ஏற்க வேண்டும். ஜனநாயக ரீதியில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அவர் தெரிவாகியுள்ளார். பெரும்பான்மை வாக்குகள் அவருக்கு கிடைத்துள்ளது. மக்கள் கோரும் மாற்றங்களுக்கமைய ஜனாதிபதியும் 06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 249.07 | 260.33 |
| கனடியன் டொலர் | 273.95 | 285.05 |
| யூரோ | 373.83 | 383.45 |
| ஜப்பான் யென் | 2.7067 | 2.8119 |
| சிங்கப்பூர் டொலர் | 255.10 | 263.99 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 440.04 | 455.34 |
| சுவிஸ் பிராங்க் | 359.43 | 373.10 |
| அமெரிக்க டொலர் | 350.05 | 362.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 901.77 | கட்டார் ரியால் | 92.56 |
| குவைத் டினார் | 1,108.57 | சவூதி ரியால் | 90.64 |
| ஓமான் ரியால் | 883.08 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 23ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷவ்வால் பிறை 04

### குறள் தரும் சிந்தனை



தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னுஞ் செருக்கு

*பிறருக்கு உதவி புரியும் பெருமித உணர்வு, விடாமுயற்சி மேற்கொள்ளக் கூடிய உயர்ந்த இயல்புடையவர்களிடம் நிலை பெற்றிருக்கும்.*

# அரசின் அழைப்பை புரிந்து கொள்ளத் தவறிய எதிரணி

தற்போது நாடு பொருளாதார ரீதியில் முகம் கொடுத்திருப்பது ஒரு தேசிய நெருக்கடியே அன்றி வேறில்லை. இது மிகவும் தெளிவான விடயம். இந்நெருக்கடியின் தாற்பரியத்தை உணர்ந்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம், நாட்டு மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதைக் குறைப்பதற்கும் தவிர்ப்பதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருந்தும் கூட இப்பொருளாதார நெருக்கடிக்கு அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கி தீர்வு தேட வழிவகை செய்யும் வகையில் அமைச்சரவை அமைச்சர்கள் தமது பதவிகளை இராஜிநாமா செய்தனர். அதனை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளுக்கும் ஜனாதிபதி பகிரங்கமாக அழைப்பு விடுத்தார். இவ்வழைப்பை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஏனைய எதிரணிக் கட்சிகளும் நிராகரித்தன.

இடைக்கால அரசாங்கமொன்றை அமைக்கும் வரை ஜனாதிபதி நால்வரை அமைச்சர்களாக நியமித்தார். இச்சந்தர்ப்பத்தில் ஸ்ரீ.பொ.பெரமுன தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகித்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட சில கட்சிகள் தாம் பாராளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படப் போவதாக அறிவித்தன.

இருப்பினும் ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கான பேச்சுவார்த்தையை முன்னெடுக்க இக்கட்சிகள் இணக்கம் தெரிவித்து பேச்சுவார்த்தைகளையும் முன்னெடுத்து வந்தன. இவ்வாறான சூழலில் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார இராஜாங்க அமைச்சுப் பதவியை ஏற்றார்.

இதனைத் தொடர்ந்து இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கான பேச்சுவார்த்தையை இக்கட்சிகள் இடைநிறுத்திக் கொண்டன. இந்நிலையில் ஜனாதிபதி புதிய அமைச்சரவையை நியமித்தார். இவ்வாறான சூழலில் பிரதி சபாநாயகர் ரன்ஜித் சியம்பலாப்பிட்டிய பதவி விலகப் போவதாக அறிவித்தார். இவர் ஸ்ரீ.ல.சு. கட்சி சார்பு ஸ்ரீ.ல.பொ. பெரமுனவின் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சில பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்து விட்டதாகவும், எதிரணிக்கு 120 ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் சில தினங்களுக்கு முன்னர் வெளிப்படையாகக் கூறினர்.

இவ்வாறான பின்னணியில் ஸ்ரீ.ல.பொ. பெரமுனவின் பாராளுமன்ற பலத்தை உரசிப் பார்க்கும் வகையில் பிரதி சபாநாயகர் தெரிவு பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றது. இப்பதவிக்கு ஏற்கனவே பிரதி சபாநாயகராக பதவி வகித்த பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய மீண்டும் போட்டியிட்டார். இந்நிலையில் ஆளும் ஸ்ரீ.ல. பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம், தமது கட்சி ஸ்ரீ.ல.சு. கட்சி சார்பு பாராளுமன்ற உறுப்பினரான ரன்ஜித் சியம்பலாப்பிட்டிய எம்.பிக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக நேற்றுக் காலையில் அறிவித்தார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் பிரதி சபாநாயகர் பதவிக்கு போட்டியிட்டார். இதனடிப்படையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில் 148 வாக்குகளை ரன்ஜித் சியம்பலாபிட்டியவும், 65 வாக்குகளை இம்தியாஸ் பாக்கீர் மாக்கரும் பெற்றுக் கொண்டனர். இதன் ஊடாக ரன்ஜித் சியம்பலாப்பிட்டிய மீண்டும் பிரதி சபாநாயகரானார்.

இவ்வாக்கெடுப்பின் ஊடாக ஸ்ரீ.ல.பொ. பெரமுன தமது பாராளுமன்ற பெரும்பான்மையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு ஒன்றுபட்டு தீர்வு தேட அரசாங்கம் முன்னெடுத்து வரும் முயற்சிகளை தவறாகவும் பிழையாகவும் எதிரணியினர் புரிந்து கொண்டதன் வெளிப்பாடே இது.

அரசாங்கம் பலவீனமாக இல்லை. அறுதிப் பெரும்பான்மையை இழக்கவும் இல்லை என்பதற்கு பிரதி சபாநாயகர் தெரிவில் ஸ்ரீ.ல. பொ. பெரமுன ஆதரவு நல்கிய ரன்ஜித் சியம்பலாப்பிட்டிய எம்.பி பெற்றுள்ள 148 வாக்குகள் நல்ல சாட்சியமாகும். ஆகவே மக்கள் முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளை உரிய முறையில் புரிந்து கொண்டு ஒத்துழைப்புடன் செயற்பட இனியாவது எதிரணியினர் முன்வர வேண்டும். அதுவே நாட்டுக்கும் மக்களுக்கும் அவர்கள் அளிக்கும் சேவையாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# கச்சதீவை மீட்டெடுப்பதற்கு முயற்சிக்கின்றதா இந்தியா?

இலங்கையின் கட்டுப்பாட்டில் இருக்கும் கச்சதீவை மீட்பதற்கான முயற்சிகளில் இந்திய மத்திய அரசு தற்போது முயற்சி மேற்கொண்டு வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஆனாலும் உரிய ஆதாரங்களை மேற்கோள் காட்டாமல் இச்செய்திகளை அந்த ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக இந்திய ஊடகங்களில் செய்தி ஒன்று உலவத் தொடங்கி உள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நடத்திய மேதின விழாவில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாடு பா.ஜ.க தலைவர் அண்ணாமலை கடந்த 30 ஆம் திகதி இலங்கை வந்திருந்தார். இலங்கையில் உள்ள சீதா கோயில் உட்பட இந்து கோயில்கள் பலவற்றில் அண்ணாமலை சந்திப்புகள் நடத்தினார்.

இலங்கையில் மலையகத் தமிழர்கள், வடபகுதி தமிழ் அமைப்புகள், மீனவர்களுடன் அண்ணாமலை சந்திப்புகள் நடத்தியிருந்தார். இலங்கையில் இவருக்கு பெரிய அளவில் வரவேற்பு கொடுக்கப்பட்டது. இலங்கையில் பல்வேறு பகுதிகளில் தமிழர்களைச் சந்தித்து அவர்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நடத்திய உழைப்பாளர் தின நிகழ்விலும் அண்ணாமலைக்கு சிறப்பு வரவேற்பு கொடுக்கப்பட்டது.

சென்னைக்குத் திரும்பிய அண்ணாமலை கச்சதீவு பற்றி பேசினார். யாழ்ப்பாணத்தில் தமிழர்களுக்காக பிரதமர் மோடி 5 ஆண்டுகளாக செய்திருக்கும் சாதனை அளப்பரியது.




தமிழக அரசியல் கட்சிகள் கோரிக்கை முன்வைத்து வரும் நிலையில், கச்சதீவை 99 வருடங்களுக்கு குத்தகைக்கு எடுக்க மத்திய அரசு முயற்சி செய்வதாக இந்திய ஊடகங்களில் தகவல் உலவுகின்றது. இன்றைய பொருளாதார நெருக்கடி வேளையில் இலங்கைக்கு செய்யப்படும் பொருளாதார உதவிக்கு கைமாறாக கச்சதீவை 99 வருடங்களுக்கு குத்தகைக்கு எடுக்க மத்திய அரசு முயற்சி செய்யலாம் என்று செய்திகள் உலவுகின்றன. ஆனால் எந்தவொரு உத்தியோகபூர்வ ஆதாரங்களும் இச்செய்திகளுக்கு மேற்கோள் காட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அண்ணாமலையின் இலங்கை பயணமும் இதற்கான திட்டமா இருக்கலாம் என்று அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. சீனா இத்தனை ஆண்டுகள் இலங்கைக்கு கடன் கொடுத்து அதை கட்டுப்படுத்தி வந்தது. இப்போது இலங்கைக்கு உதவுவதன் மூலம் இந்தியா இலங்கையை தனது பக்கம் இழுக்கப் பார்க்கிறது. இந்திய பெருங்கடலில் அதிகம் செலுத்த கச்சதீவு இந்தியாவிற்கு பாதுகாப்பு ரீதியாக உதவியாக இருக்கும். இதை கருத்தில் கொண்டு கச்சதீவை மீட்கும் காரியத்தை இலங்கை கையில் எடுக்கலாம் என்று தகவல்கள் வருகின்றன. இதன் காரணமாகவே இலங்கை செல்லும் முன் அண்ணாமலை உள்துறை அமைச்சர் அமித் ஷா, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரை சந்தித்தார் என்றும் அச்செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## அண்ணாமலையின் இலங்கை விஜயத்தையடுத்து இந்திய ஊடகங்களில் உலவும் பரபரப்பு செய்திகள்!

அத்துடன் கச்சதீவு திருவிழாவுக்கு செல்வதற்கு தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு இலங்கை அரசு இலவச விசா வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததாக சென்னை திரும்பிய அண்ணாமலை தெரிவித்தார். ஆனால் கச்ச தீவிற்கு செல்ல தமிழர்களுக்கு விழாவின் போது விசா கேட்கப்படுவது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அண்ணாமலையின் இந்த பேட்டியைத் தொடர்ந்து இலங்கையின் கட்டுப்பாட்டில் இருக்கும் கச்சதீவை மீட்பதற்கான முயற்சிகளில் மத்திய பா.ஜ.க அரசு களமிறங்கி உள்ளதாக ஊடகங்களில் செய்தி ஒன்று உலவத் தொடங்கி உள்ளது.

கடந்த 1974 இல் கச்சதீவை மத்திய அரசு இலங்கைக்குக் கொடுத்தது. கச்சதீவை மீட்க வேண்டும் என்று பல்வேறு


# தண்ணீரும் அருந்தாமல் உண்ணாவிரதம்; ஐந்தாவது நாள் மயங்கி வீழ்ந்த முருகன்!

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட முருகன் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார். இந்த வழக்கில் பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேர் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

பேரறிவாளனுக்கு 'பரோல்' வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டது. அதேபோல் முருகனின் மனைவி நளினிக்கும் 'பரோல்' வழங்கப்பட்டது. நளினிக்கு தொடர்ந்து 4வது மாதமாக 'பரோல்' நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், முருகன் தனக்கு பரோல் வழங்கக் கோரி வேலூர் சிறையில் உண்ணாவிரதம் இருந்து வருகிறார். 5 ஆவது நாளான நேற்று முருகன் மயக்கமடைந்துள்ளார்.

தனது தாயைக் கவனித்துக் கொள்ள 30 நாட்கள் பரோல் வழங்குமாறு தமிழக முதல்வருக்கு நளினி கடிதம் எழுதினார். அதேபோல அவரது கணவர் முருகன், "எனது தந்தை வெற்றிவேல் கடந்தாண்டு இறந்த போது இறுதிச்சடங்கு செய்வதற்காக பரோலில் செல்ல



அனுமதி கேட்டும் வழங்கப்படவில்லை. தற்போது தந்தை இறந்து ஓராண்டு ஆகிறது. எனவே அவருக்குச் சடங்குகள் செய்ய 30 நாட்கள் பரோல் வழங்க வேண்டும்" என முதல்வருக்கு கடிதம் எழுதினார்.

ஆனால், நளினிக்கு மட்டும் பரோல் வழங்கப்பட்ட நிலையில், முருகனுக்கு பரோல் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இதனால் கடும் விரக்தியில் இருந்து வந்துள்ளார் முருகன். இந்நிலையில், தனக்கு 30 நாட்கள் பரோல் வழங்க வேண்டும் எனக் கோரி முருகன் வேலூர் சிறையில் உண்ணாவிரதம் இருந்து வருகிறார். 5 ஆவது நாளாக தண்ணீர் கூட அருந்தாமல் உண்ணாவிரதம் இருந்து வருகிறார் முருகன். இதனால் முருகன் நேற்றுக் காலை மயக்கமடைந்துள்ளார். இதனையடுத்து மருத்துவர்கள் அவருக்கு உடனடியாக பரிசோதனை மேற்கொண்டுள்ளனர். முருகன் மயக்கமடைந்ததால் அவருக்கு சிறை மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாக அவரது வழக்கறிஞர் புகழேந்தி தெரிவித்துள்ளார்.

முருகன் சிறையில் உண்ணாவிரதம் இருப்பது இது முதல்முறை அல்ல. சில ஆண்டுகளுக்கு முன்னர் சிறையில் நடத்திய திடீர் சோதனையில் முருகன் அறையில் செல்போன் கண்டுபிடிக்கப்பட்டதாக கூறப்பட்டு அவர் தனி அறைக்கு மாற்றப்பட்டார். இதனால் அவருக்கு சிறையில் வழங்கப்படும் சலுகைகள் ரத்து செய்யப்பட்டன. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, முருகன் 16 நாட்களுக்கு மேலாக உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டார். இதனால் அவரது உடல்நிலை மோசமாகி மயக்கமடைந்தார்.

2020 இல் தனது குடும்பத்தினருடன் 'வீடியோ கோல்' பேச அனுமதி அளிக்காததால் தொடர் உண்ணாவிரதத்தில் இருந்தார். இந்நிலையில்தான் தற்போது 5வது நாளாக தண்ணீர் கூட அருந்தாமல் தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த நிலையில் நேற்றுக் காலை மயங்கி விழுந்துள்ளார். அவருக்கு சிறை மருத்துவமனையிலேயே பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# தாயாரின் பிறந்த தினத்தன்று தனது இலக்கிய நூலை வெளியிட்ட வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரன்

தனது தாயார் திருமதி பாலநாகம்மா இராசரெத்தினம் அவர்களது 75 ஆவது பிறந்த நாளில் தனது இலக்கிய நூலை வெளியிட்டு வைத்துள்ளார் வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரன். அதுமட்டுமன்றி தனது முதலாவது நூலை அனைவருக்கும் இலவசமாக அன்பளிப்பாக வழங்கி வைத்தார்.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராகப் பணியாற்றுகின்றார் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன். அவர் எழுதிய கன்னி இலக்கியப் படைப்பான 'ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாட்கள்' என்ற கவிதை நூல் வெளியீடு மட்டக்களப்பு பிள்ளையாரடி தமிழ்ச்சங்க கலையரங்கத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில், தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு முன்னிலை அதிதியாக கிழக்குப் பல்கலைக் கழக மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் செ. யோகராசா கலந்து கொண்டார்.

முதன்மை அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் வைத்திய கலாநிதி.வே.விவேகானந்தராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நூலாசிரியரின் தாயாகிய திருமதி பாலநாகம்மா இராசரெத்தினம் அவர்களது 75வது பிறந்த தினத்தை முன்னிட்டு அவரை தமிழ்ச் சங்கத்தினர் மேடையில் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.



ஆணையாளர் சட்டத்தரணி மு. கணேசராசாவினால் வரவேற்புரையும், கலைக்கோகிலம் நாட்டியப்பள்ளியினால் வரவேற்பு நடனமும் நிகழ்த்தப்பட்டன.

ஏற்புரையை நூலாசிரியர் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் முரளீஸ்வரன் நிகழ்த்த நன்றி உரையை துணை செயலாளர் திருமதி பிரியா கருணாகரன் நிகழ்த்தினார்.

வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் சிறந்த மருத்துவ நிருவாகி மட்டுமல்லாமல், ஓர் உன்னத இலக்கியப் படைப்பாளியுமாவார். 1976 இல் யாழ்ப்பாணம், நெல்லியடியில் பிறந்து, 1985 ஆம் ஆண்டுகளின் பின்னர் மட்டக்களப்பில் வாழ்ந்து வரும் இவர், தனது கல்வியை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும், மருத்துவ பட்டப்படிப்பை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும், மருத்துவ நிர்வாக முதுமாணியை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் பெற்றுள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மருத்துவராக 2005 ஆம் ஆண்டிலிருந்து கடமையை தொடங்கி 2013 ஆம் ஆண்டு கல்முனை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகராகி தற்போதுவரை அங்கு தொடர்ந்து பணிபுரிகின்றார். மருத்துவ அனுபவங்களும் கவிதை அனுபவமும் இணைந்த மருத்துவமனை நாள்களைப் பற்றிய கவிதைகள் சேர்ந்த கவிதைத் தொகுப்பாக இந்நூல் வெளியிடப்பட்டது.



அறிமுக உரையை மு.செல்வராசா நிகழ்த்த, நூல் வெளியீட்டு உரையை வி.ரி. சகாதேவராஜா நிகழ்த்தினார்.

நயவுரையை அருட்தந்தை அ.அ.நவரெத்தினம் நிகழ்த்த, வாழ்த்துரைகளை டொக்டர்களான புஷ்பலதா லோகநாதன், பா.யூடி ரமேஷ் ஜெயகுமார் ஆகியோர் நிகழ்த்தினார்கள். மேலும் இந்நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.கலாரஞ்சனி, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி குண.சுகுணன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நூலின் முதல்பிரதியினை மட்டக்களப்பு தமிழ்ச் சங்க பொருளாளர் செல்வராசா பெற்றுக் கொண்டார்.

கதிரவன் த.இன்பராசாவின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில், உள்நாட்டு இறைவரித் திணைக்கள சிரேஷ்ட

**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# கடன்பொறியாக உலகினால் சந்தேகிக்கப்படும் சீனாவின் The Belt and Road Initiative திட்டம்!

**இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சிக்கல் அந்நாடுகளை அரசியல் நெருக்கடியை நோக்கிக் கொண்டு செல்லும் நிலையில், இதன் பின்னணியில் சீனாவின் 'பெல்ட் அண்ட் ரோட்' திட்டமும், அதன் மூலம் கொடுக்கப்பட்ட கடன்களும் மிக முக்கிய காரணமாகக் கூறப்படுகின்றன. பிற நாடுகளை கடன் வலையில் சிக்க வைக்கும் சீனாவின் இராஜதந்திர நடவடிக்கை உலகம் முழுவதையும் தற்போது திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.**

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் 2013 ஆம் ஆண்டு 'பெல்ட் அண்ட் ரோட்' திட்டத்தை செயல்படுத்துவதாக அறிவித்தார். ஆசிய நாடுகளுக்கும், மேற்கத்தேய நாடுகளுக்கும் வரலாற்று ரீதியாக இருந்து வரும் வர்த்தக பாதையை மேம்படுத்துவதே இந்த திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும் என சீனாவினால் சொல்லப்பட்டது.

இந்தத் திட்டத்தின் மூலம் உலக நாடுகளை சீனா தங்கள் நாட்டுடன் போக்குவரத்து மூலம் இணைக்கும். சீனாவிற்கும் பிற நாட்டுகளுக்கும் இடையில் வீதிப் போக்குவரத்தை ஏற்படுத்தும். அதேபோல் கடல் வழியே போக்குவரத்தை ஏற்படுத்தி சீனாவில் இருக்கும் துறைமுகங்களை உலகில் இருக்கும் பிற துறைமுகங்களுடன் இணைக்கும். இதுதான் 'தி பெல்ட் அண்ட் ரோட் இனிஷியேட்டிவ்' (The Belt and Road Initiative) திட்டம் ஆகும்.

அதாவது துறைமுகங்கள், விமான நிலையங்கள், ரயில் நிலையங்கள், சரக்கு முனையங்கள், போன்றவற்றை வீதி மார்க்கமாகவும், கடல் வழியாகவும், வான் வழியாகவும் இணைப்பதே இந்தத் திட்டம். இதன் மூலம் எளிதாக பொருட்கள் போக்குவரத்து செய்யப்படுவதுடன், உலகம் முழுவதும் உள்ள

கிழக்கு ஆசியாவில் இருந்து மேற்காசியா வழியாக ஆபிரிக்க நாடுகளைக் கடந்து ஐரோப்பிய நாடுகளையும் சீனாவுடன் கடல் போக்குவரத்து மூலம் இணைக்கும் 'மேரிரைம் சில்க் ரோட்' (Maritime Silk Road) திட்டம் இரண்டாவதாக செயல்படுத்தப்படுகிறது.

அடுத்ததாக ரஷ்யாவுடன் இணைந்து சீனா மேற்கொள்வது 'ஐஸ் சில்க் ரோட்' (Ice Silk Road) திட்டம். இதன்படி ரஷ்யா வழியாக ஆர்டிக் கடல் பகுதியில் இருக்கும் நாடுகளையும் இணைக்க முடியும்.

உலகின் நன்மைக்காக இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுவதாக ஜி ஜின்பிங் நம்ப வைத்தாலும் அதன் பின்னணியில் சீனாவின் பொருளாதார மற்றும் அரசியல் அதிகாரத்தை விரிவுபடுத்துவதே முக்கிய நோக்கம் என்ற அச்சம் அப்போதே எழுந்தது.

**சீனாவின் இராஜதந்திரம்:**

இந்தத் திட்டத்தை செயல்படுத்த ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உள்ள சில நாடுகளுக்கு கடன் அளிப்பதாக சீனா உறுதியளித்தது. எடுத்துக் காட்டாக இலங்கையில் வர்த்தக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகங்களை மேம்படுத்தவும், அங்கு உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், மற்றைய துறைமுகங்களுடன் வர்த்தக ரீதியாக இணைக்க




உள்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான தொழில்நுட்பம், மனிதவளம் போன்றவற்றையும் சீனா வழங்கி வருகிறது. ஆனால் இதில் செய்யப்படும் ஒப்பந்தங்கள் எதுவும் வெளிப்படையானவை அல்ல. இதற்கான வட்டி வீதங்களும் மிக அதிகம்.

**கொரோனாவால் திசைமாறிய பொருளாதாரம்:**

இந்தச் சூழலில்தான் உலகம் முழுவதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய கொரோனா தொற்று, இந்தத் திட்டத்தில் இணைந்த நாடுகளிலும் பெரும் பொருளாதாரச் சிக்கல்களை ஏற்படுத்தியது. ஏற்கனவே அதிகமான வட்டிக்கு கடன் பெற்று, கையில் இருந்த அந்நிய செலாவணியையும் இதுபோன்ற உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு செலவிட்டு விட்ட இலங்கை, பாகிஸ்தான், போன்ற நாடுகள் செய்வதறியாது திகைத்தன. கொரோனா காலத்தில் மருத்துவம், உணவு போன்ற அத்தியாவசிய தேவைக்கே பெரும் நிதி தேவைப்படும் நிலையில் உள்கட்டமைப்பு பணிகளை தொடர்ந்து செய்ய கூடுதல் கடன்கள் பெற வேண்டிய நிலைக்கு இந்த நாடுகள் தள்ளப்பட்டன. அதிலும் சுற்றுலா போன்ற வருவாயை நம்பியிருந்த இலங்கைக்கு கொரோனா காலத்தில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது.

இதனால் கடன் மேல் கடன் வாங்க வேண்டிய கட்டாயமும், அதற்காக வட்டி கட்ட வேண்டிய கட்டாயமும் அந்த நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளன.

**எதிர்க்கும் இந்தியா:**

பெல்ட் அண்ட் ரோட் திட்டம் அறிவிக்கப்பட்டது முதலே இந்தியாவும், அமெரிக்காவும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. அதேசமயம் ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் சீனாவின் திட்டத்தை ஆதரித்தன. சீன அரசு முன்வைத்துள்ள இந்தத் திட்டம் பிற நாடுகளை கடன் வலையில் சிக்க வைக்கும் இராஜதந்திர நடவடிக்கை என விமர்சனங்கள் எழுந்தன. சீனா இந்த முதலீட்டுத் திட்டங்கள் மூலம் வறிய நாடுகளைத் தொடர்ந்து சீனா தனது கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வருகிறது என உலக நாடுகள் சீனாவை குறை கூறி வருகின்றன. வறிய நாடுகளில் இந்த மாபெரும் கட்டுமானத் திட்டங்களைச் செயல்படுத்தும் போது அந்த நாடுகளின் கடன் சுமை பெரியதாக உயரும். இதன் மூலம் சீனா பிற நாடுகளில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கும் என எச்சரிக்கை மணி அப்போதே அடிக்கப்பட்டது. இப்போது அது மீண்டும் உண்மையாகி வருகிறது.

**பாதிக்கப்பட்டுள்ள நாடுகள்:**

சீனாவிடம் அதிக வட்டிக்கு வாங்கிய கடன்களால் சிக்கிக் கொண்ட இலங்கை மற்றும் பாகிஸ்தான் நாடுகளில் தற்போது அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இருநாடுகளிலும் பொருளாதார நெருக்கடிக்கு மிக முக்கிய காரணம் சீனாவிடம் இருந்து அதிக வட்டிக்கு கடன் வாங்கியதுதான் எனச் சொல்லப்படுகிறது.

பாகிஸ்தானில் பலுசிஸ்தானில் உள்ள குவாடர் துறைமுகத்தையும் வளைக்க சீனா அந்நாட்டுக்கு அதிகளவில் கடன் வழங்கியது. இப்போது அந்தத் துறைமுகத்தை வைத்து பெரிய கடன் பெற்ற பாகிஸ்தானும் விழிபிதுங்கி நிற்கிறது. தெற்காசிய நாடுகளுக்கு சீனா வழங்கியுள்ள கடன் அளவு 4.7 பில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து

40 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளது. பாகிஸ்தானின் வெளிநாட்டுக் கடனில் 10 சதவீதத்திற்கும் அதிகமாக சீனாவால் கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தற்போது எரிபொருள் மற்றும் மசகு எண்ணெயை வாங்குவதற்கு அந்நிய செலாவணி கையிருப்பு இல்லாமல் பொருளாதாரச் சிக்கலை சந்தித்து வருகிறது. உள்கட்டமைப்பு மேம்பாடு என்ற பெயரில் சீனாவிடமிருந்து அதிக வட்டிக்குக் கடனைப் பெற்று நாட்டை கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் கொண்டு வந்து விட்டதாக எதிர்க்கட்சிகள் புகார் கூறுகின்றன.

இலங்கை மற்றும் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள நிலையை புரிந்து கொண்டுள்ள நேபாளம், அண்மையில் சீனா பெருந்தொகையை கடனாக வழங்க முன்வந்த போது அதனை வேண்டாம் என மறுத்துள்ளது. 'உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி வேண்டாம், மானியம் வேண்டுமானால் தாருங்கள்' என நேபாளம் கூறி விட்டது.

விமர்சனங்கள் பல எழுந்தாலும் சீனா தனது 'பெல்ட் அண்ட் ரோட்' திட்டத்தின் மூலம் பல நாடுகளில் அதிகப்படியான முதலீட்டில் பல கட்டுமான திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் தனது நாட்டின் வர்த்தகத்தையும் வருமானத்தையும் தொடர்ந்து அதிகரித்து பெரிய அளவில் ஆதிக்கம் செலுத்த முயன்று வருகிறது என்ற விமர்சனம் தற்போது உண்மையாகி வருகிறது.

## இலங்கை, பாகிஸ்தான் உட்பட பல நாடுகளில் இன்று நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிக்கான மறைமுகக் காரணம் அதிக வட்டியுடன் பெற்றுக் கொண்ட கடன்!

## பட்டுப்பாதை திட்டத்தின் கீழ் சுமார் 1,872 கிலோ மீற்றர் தூரத்திற்கு ரயில் பாதைகளை அமைப்பதே சீனாவின் இலக்கு!

தொழில் முனையங்கள் ஒன்றிணைக்கப்படும். நாடுகளை வீதி வழி மூலம் இணைப்பதால் சர்வதேச அளவில் சரக்கு போக்குவரத்துக்கு வழி ஏற்படும் என சொல்லப்பட்டது.

'பெல்ட் அண்ட் ரோட்' என்று இந்தத் திட்டம் பொதுப் பெயரில் சொல்லப்பட்டாலும் 3 இலக்குகளுடன் சீனா இதனை செயல்படுத்துகிறது. வீதிகள் மூலம் ஆசியாவில் உள்ள முக்கால்வாசி நாடுகளை சீனாவுடன் இணைப்பதற்காக 'சில்க் ரோட் எக்கனாமிக் பெல்ட்' (Silk Road Economic Belt) திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் உலக நாடுகளை வீதி வழியாக இணைப்பது மட்டுமின்றி, அதனை தங்கள் கட்டுப்பாட்டில் வைக்கவும் முடியும் என்று சீனா நம்புகிறது.

வும் தேவைப்படும் பணத்தை சீன வங்கிகள் கடனாக வழங்கும்.

இதற்காக தங்க பத்திர உத்தரவாதத்தில் கையெழுத்திட வேண்டும். இதன் மூலம் பெரும் பணம் வழங்கப்படும். இதுபோலவே மேற்காசிய நாடுகளை இணைக்கும் நுழைவு வாயிலாக உள்ள பாகிஸ்தானுக்கும் பெல்ட் அண்ட் ரோட் திட்டத்தில் இணைத்து பெரும் தொகை கடனாக வழங்கப்பட்டது.

ஆப்கானிஸ்தான், கஜகஸ்தான் வழியாக இந்தத் திட்டம் மேற்கு நோக்கியும், மலேசியா, ஹொங் கொங், வடகொரியா என கிழ க்கு நோக்கியும் விரிவடைந்தது. அதுபோலவே தென்கிழக்கில் இலங்கை வழியாக பயணத்தைத் தொடங்கியது.

இந்தத் திட்டத்தில் இணையும் நாடுகளில்

---

# அக்கரைப்பற்றில் நான்கு மதங்களைச் சேர்ந்தோரை ஒரே குடையின் கீழ் ஒன்றிணைக்க வைத்த நிகழ்வு

**மனித வாழ்வில் ஐக்கியம், புரிந்துணர்வு, நல்லிணக்கம் என்பன அவசியம். இனங்களுக்கிடையில் ஐக்கியம், சமாதானம், புரிந்துணர்வு, நல்லிணக்கம் என்பவற்றை ஊக்குவிக்கும் வகையிலான செயற்பாடுகள், நிகழ்வுகள் தற்பொழுது மீண்டும் துளிர்விடத் தொடங்கியுள்ளன. இது வரவேற்கத்தக்கது.**



அந்த வகையில் அக்கரைப்பற்று– கல்முனை மாவட்ட சாரணர் சங்கம் மற்றும் அம்பாறை மாவட்ட சமாதான நீதவான் சங்கம் என்பனவற்றின் இணை ஏற்பாட்டில் நல்லிணக்க நோன்பு துறக்கும் இப்தார் நிகழ்வு அக்கரைப்பற்றில் அண்மையில்நடைபெற்றிருந்தது. இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம் ஆகிய நான்கு சமயங்களைச் சேர்ந்த மக்கள் ஒரேகூரையின் கீழ் அமர்ந்திருந்து, அன்பு பாராட்டியமை காண்பவர் மனங்களை நெகிழச் செய்தது. காலத்தின் தேவைக்கேற்றாற் போல் நிகழ்வை வடிவமைத்து, நடைமுறைப்படுத்திய ஏற்பாட்டாளர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அக்கரைப்பற்று– கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்

## பிட்டும், தேங்காய்ப்பூவும் போன்று வாழ்ந்த இனங்களை மீண்டும் ஐக்கியப்படுத்தும் முயற்சி




தலைவரும், சம்மாந்துறை பிரதேச செயலாளருமான எஸ்.எல்.எம்.ஹனிபா, அக்கரைப்பற்று – கல்முனை மாவட்ட சாரணர் சங்கம் இவ்வாறான நிகழ்வுகளினூடாக இனஉறவுப் பாலமமைக்கும் எனவும் அதன் எதிர்காலப் பணிகள் அதற்கேற்ற வகையில் நன்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

உயர் பண்பாட்டு விழுமியங்களுடன் மிளிரும் அக்கரைப்பற்று– கல்முனை மாவட்ட சாரணர் சங்கம் கடந்த காலங்களில் பல்வேறு பொது நிகழ்வுகளை நடத்தி இனஉறவை வலுப்படுத்தியமை வரலாறாகும். கடந்த காலங்களில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக எமது சங்கத்தின் செயற்பாடுகளில் சற்று தளர்வேற்பட்டது. ஆனால் தற்போது நாம் உத்வேகத்துடன் பயணிப்போம் என்றார் அவர்.

அம்பாறை மாவட்ட சமாதான நீதவான் சங்கத் தலைவரும், ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளருமான யூ.எல்.எம்.ஹாசிம் தனதுரையில், "ஒரு இனத்தை மற்றொரு இனம் சந்தேகக் கண்கொண்டு பார்க்காத இன உறவே காலத்தின் தேவையாக உள்ளது. அதன் காரணத்தினாலயே இரு சங்கங்கள் இணைந்து, நான்கு சமயத்தவர்களை ஒன்றிணைத்து இவ்வாறான நல்லிணக்க நிகழ்வை நடத்தக் காரணமாகும். எதிர்காலத்தில் எங்களது பயணம் தடையின்றித் தொடரும்" என்றார்.

சமயங்கள் மக்களை நல்வழிப்படுத்துகின்றன. அந்த வகையில் இஸ்லாத்தின் நான்காவது கடமையான றமழானின் உள்ளார்ந்த தத்துவங்களை பிற சமயத்தவர்கள் தெளிவாக தெரிந்து கொள்வதற்கு இந்நிகழ்வு அடிப்படையாக அமைந்துள்ளது. இப்பணி தொடர வேண்டும் என்று நிகழ்வில் உரையாற்றிய தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

மௌலவி என்.ரி.சர்ஜூனின் விஷேட றமழான் சிந்தனை, இறை பிரார்த்தனை, அதிதிகள் உரை, நோன்பு துறக்கும் இப்தார் என நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. சாரணர் சங்கப் பணியில் நீண்டகாலமாக தம்மை அர்ப்பணித்துள்ள உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.அப்துல் வாஹித், அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எஸ்.எம். சதாத் ஆகியோர் அக்கரைப்பற்று – கல்முனை மாவட்ட சாரணர் சங்க இணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டு, அவர்களுக்கான நியமனக் கடிதங்களை அக்கரைப்பற்று – கல்முனை மாவட்ட சாரணர் சங்கத் தலைவரும், சம்மாந்துறை பிரதேச செயலாளருமான எஸ்.எல்.எம்.ஹனிபா வழங்கி வைத்தார்.

பிட்டும், தேங்காய்ப்பூவும் போன்று இரண்டறக் கலந்து, ஒற்றுமையாக வாழ்ந்து வந்த சமூகங்களுக்கிடையில் திட்டமிட்டு அரங்கேற்பட்ட குறித்த சில அருவருக்கத்தக்க சம்பவங்களினால் ஒரு இனத்தை மற்றொரு இனம் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் நிலையேற்பட்டமை துரதிஷ்டமே. இந்நிலை மிகவும் ஆபத்தானது. அந்த இருளை சமூகத்திலிருந்து முற்றாக அகற்றி, இளந்தலைமுறையினர் மத்தியில் ஒளியேற்றுவதற்கு மேற்கொண்ட முயற்சி வரவேற்கத்தக்கது எனலாம்.

**முகம்மட் றிஸான்...**
**(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)**

---

# பேரறிவாளனை நாடு கடத்த வேண்டும்; சுப்பிரமணியன் சுவாமியின் ஆக்ரோஷம்!

**ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் பேரறிவாளனை உச்சநீதிமன்றம் விடுதலை செய்தால், அவரை இலங்கைக்கு நாடு கடத்த வேண்டும் என்று பா.ஜ.க எம்.பியான சுப்பிரமணியன் சுவாமி வலியுறுத்தியுள்ளார். அவரது இந்தப் பதிவை தமிழக மக்கள் கடுமையாக விமர்சித்து வருவதுடன், ராஜீவ் காந்தி படுகொலையில் சுப்பிரமணியன் சுவாமிக்கு உள்ள தொடர்பு குறித்து ஜெயின் கமிஷன் எழுப்பிய சந்தேகங்களையும் பட்டியலிட்டு விமர்சித்து வருகின்றனர்.**

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வருகிறார்கள் பேரறிவாளன் உட்பட ஏழு தமிழர்கள். ராஜீவ் கொலை வழக்கில் 7 தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பது தமிழக அரசின் நிலைப்பாடு. ஆனால் தமிழக ஆளுநரோ இதனை ஏற்க மறுத்து ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அனுப்பி வைத்து விட்டார்.



இந்நிலையில் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் இருந்து தம்மை விடுதலை செய்யக் கோரி பேரறிவாளன் உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார். இம்மனு மீது நடைபெற்ற விசாரணையின் போது பேரறிவாளனை பிணையில் விடுதலை செய்தது உச்சநீதிமன்றம். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணைகளில் 30 ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை, நன்னடத்தை உள்ளிட்டவைகள் அடிப்படையில் பேரறிவாளனை விடுதலை செய்ய வேண்டும் என்கிற நிலைப்பாட்டை உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் பேரறிவாளன் விடுதலைக்கு மத்திய அரசு முட்டுக்கட்டையாக இருக்கிறது. இதனை சுட்டிக்காட்டி கேள்வி எழுப்பிய நீதிபதிகள், பேரறிவாளன் விடுதலை விவகாரத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதிக்குள் முடிவெடுத்தாக வேண்டும். இல்லையேல் உச்சநீதிமன்றம் பேரறிவாளனை விடுதலை செய்து உத்தரவிடும் எனவும் நீதிபதிகள் திட்டவட்டமாக தெரிவித்தனர்.

மேலும் மாநில அரசின் முடிவுகளை தடுத்து வைக்கும் ஆளுநரின் செயல்பாடுகளுக்கு எதிராக முடிவு எடுக்க வேண்டிய தருணம் வந்துள்ளதாகவும் நீதிபதிகள் தெரிவித்தனர். இதன் மூலம் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் இருந்து பேரறிவாளன் விடுதலை செய்யப்படுவது உறுதியாகி இருக்கிறது.

இந்த பின்னணியில் பா.ஜ.க எம்.பி சுப்பிரமணியன் சுவாமி ஒரு ட்விட்டர் பதிவை இட்டுள்ளார். அதில், "பேரறிவாளனுக்கு உச்சநீதிமன்றம் கருணை அளித்தால் அவரை இலங்கைக்கு நாடு கடத்த வேண்டும். 1999 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பேறறிவாளன் இணைந்ததாக கூறப்பட்டுள்ளது. ஏற்கனவே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு கருணை காட்டப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றம் மேலும் ஒரு கருணை காட்டி பேரறிவாளனை விடுதலை செய்யப் போகிறதா?" என கேள்வி எழுப்பியுள்ளார்.

சுப்பிரமணியன் சுவாமி நேற்றுக் காலை இந்த பதிவை போட்டது முதலே கடுமையான விமர்சனங்களை அவர் எதிர்கொண்டு வருகிறார். ராஜீவ் கொலை குறித்து விசாரித்த ஜெயின் கமிஷன் ஆணையம், சுப்பிரமணியன் சுவாமி மீது சந்தேகம் எழுப்பியிருக்கிறது; இஸ்ரேலின் மொசாத் உளவு அமைப்புக்கும் சு.சுவாமிக்குமான தொடர்பு குறித்து கேள்வி கேட்டுள்ளது என பதிவிடப்பட்டுள்ளது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# மின் உற்பத்திக்கு டீசல் வழங்கலில் முன்னுரிமை

## எரிசக்தி அமைச்சர் கஞ்சன தெரிவிப்பு

நுரைச்சோலையில் மின்உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட பழுதினால் மின் உற்பத்திக்கு டீசல் வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, போதுமான ஒக்டென் 92 பெற்றோல் மற்றும் சூப்பர் டீசல் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டுக்கு நாளொன்றுக்கு 4000 மெட்ரிக் டன் டீசல் தேவைப்படுவதாகவும் ஆனால் தற்போது ஒரு நாளொன்றுக்கு1000 1500 மெட்ரிக் டன் டீசல் மட்டுமே விநியோகிக்கப்படுவதாகவும் மின் உற்பத்திக்கு தேவையான டீசல் ஒதுக்கீடுகளை வழங்குவதே இதற்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஒக்டேன் 95 பெற்றோலுக்கு மாத்திரம் நாட்டில் சிறியளவு தட்டுப்பாடு நிலவுகிறது. ஒட்டோ டீசல் வரையறையுடன் விநியோகிக்கப்படுகிறது. மசகு எண்ணெய் மற்றும் ஒக்டேன் 95 பெற்றோல் துறைமுகத்தில் தரையிறக்க தயார் நிலையில் காத்திருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த டீசல் இறக்குமதி மே 11 ஆம் திகதி நாட்டை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, எனினும், அது 2 நாட்கள் தாமதமாகக்கூடும் என்றும் அமைச்சர் கஞ்சன விஜேசேகர கூறினார்.

நாளாந்தம் ஏறக்குறைய 3000 மெட்ரிக் டன் பெற்றோல் விநியோகிக்கப்படுவதாக தெரிவித்த அமைச்சர் விஜேசேகர, மற்றுமொரு தொகை பெற்றோல் நேற்றிரவு நாட்டை வந்தடைந்ததாக தெரிவித்தார்.

## பிரதி சபாநாயகர்.... (03 ஆம் பக்கத் தொடர்)

பிரதமரும் தெரிவித்துள்ள விடயங்களை முன்னெடுக்க இருக்கிறோம் என்றார்.

## மக்களின் குரலை... (03 ஆம் பக்கத் தொடர்)

இனியாவது மக்களின் குரலை புரிந்து செயப்படுவோம். சபையில் எத்தகைய நடிப்பை வெளிப்படுத்தினாலும் மக்களின் குரலை புரிந்து கொள்ளாவிட்டால் பயனில்லை என்றார்.(பா)

## பலத்தை காட்டும்... (03 ஆம் பக்கத் தொடர்)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லையென்றும் சியம்பலாப்பிட்டிய குறிப்பிட்டார்.

## முதுகெலும்புள்ள எதிர்க்கட்சி... (03 ஆம் பக்கத் தொடர்)

அனைத்து மக்களும் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள்,அத்தியாவசியப் பொருட்கள் விலை அதிகரிப்பு , எரிவாயு பிரச்சினை என அத்தனை பிரச்சினைகளையும் எம்மால் தீர்க்க முடியும் என கூறுகின்ற முதுகெலும்புள்ள தலைவர்கள் உள்ளார்களா? அவ்வாறானவர்கள் இருந்தால் முன்வரட்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## நாடு எதிர்கொண்டுள்ள... (03 ஆம் பக்கத் தொடர்)

கேட்பதில்லை. வீதித்தடைகளை ஏற்படுத்திக்கொண்டு பதுங்கு குழியில் இருந்துகொண்டு இந்த பயணத்தை செல்ல முடியாது.

அதேபோன்று எதிர்க்கட்சிக்கும் பொறுப்பு இருக்கின்றது. 20ஆவது திருத்தத்தை வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாமலாக்க வேண்டுமென நாங்கள் கோருக்கின்றோம்.

எமது நிபந்தனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாட முடியும்.

## முறிகண்டி செல்வபுரம்... (03 ஆம் பக்கத் தொடர்)

விபத்துடன் தொடர்புடைய வாகனத்தில் இருவர் பயணித்த நிலையில் வாகனத்தை செலுத்திய வைத்தியர் சிறு காயங்களிற்குள்ளான நிலையில் அவசர உதவி அம்புலன்ஸ் ஊடாக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியரின் தனிப்பட்ட வாகனமே விபத்துக்குள்ளானது என்பதுடன், அக்கராயன் பிரதேச வைத்தியசாலையில் கடமையாற்றி வருபவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

A9 வீதியோரங்களில் வர்த்தக நிலையங்கள் அனுமதியற்ற நிரந்தர கட்டடங்களாக காணப்படுகின்றமை தொடர்பில் பல்வேறு தடவை புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும், தொடர்ச்சியாக வியாபார அனுமதிகள் பிரதேச சபையினால் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான விபத்து சம்பவங்கள் இடம்பெறுகின்ற பொழுது மக்கள் உயிர் ஆபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படின் புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரும், வீதி அபிவிருத்தி அதிகார சபையினருமே பொறுப்புடையவர்களாவர் என பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.

## தீர்வு காணும் பொறுப்பை... (03 ஆம் பக்கத் தொடர்)

மீளச் செலுத்துவதற்கான சலுகைகளையும் வழங்கியது.

எமது துரதிஷ்டம் கொரோனா வைரஸ் சூழ்நிலைக்கு பின்னர் ரஷ்ய, உக்ரைன் மோதல் தொடர்ந்து பல்வேறு நெருக்கடி நிலை உருவாகக் காரணமாகியது.

ஜனாதிபதி பதவியேற்ற உடனேயே இனிமேல் வெளிநாட்டு கடன்களை பெற்றுக்கொள்ளப் போவதில்லை. தேவையற்ற விதத்தில் இறக்குமதிகளை மேற்கொள்ளப் போவதில்லை என்ற தீர்மானத்தை மேற்கொண்டார்.

அதன் ஒரு அம்சமாகவே வாகன இறக்குமதியை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும் நிலைமை முற்றாக மாறி நெருக்கடி நிலை அதிகரித்துள்ளது என்றார்.

## நெருக்கடிக்கு தீர்வுகாண்பதற்கு...

தொடர்பில் நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், நாடு பாரிய பிரச்சினைக்கு ஆளாகி இருக்கும் நிலையில் இடைக்கால அரசாங்கமா அல்லது தனியான அரசாங்கத்தை அமைப்பதா என்பது தொடர்பிலும் ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலக வேண்டும் என்றும் குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. எனினும் இத்தகைய சூழ்நிலையில் தேவையற்ற செலவுகள் நிறுத்தப்பட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் வீழ்ச்சி அடையாமல் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கன் விமான சேவை 25 எயார் பஸ்கள் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் தொடர்பில் பேசப்படுகிறது. எவ்வாறெனினும் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி எயார் பஸ்களை கொள்வனவு செய்ய அனுமதிக்க வேண்டாம். கோப் குழுவும் அது தொடர்பில் முடிவுகளை அறிவித்துள்ளது. அத்துடன் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அவசியமற்ற செலவுகளை நீக்க வேண்டும். நீக்கக்கூடிய அனைத்தையும் நீக்கி, மக்களுக்கு நிவாரணம் வழங்க முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

நம்பிக்கையில்லா பிரேரணை, புதிய அரசியலமைப்பு தொடர்பில் பேசப்படுகிறது. அதனைப் பேசலாம். ஆனால், தற்போதைய நிலையில் பிளவுகளுக்கு முன் இணைந்து செயற்படுவதிலேயே கவனம் செலுத்த வேண்டியுள்ளது. நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைக்கு தீர்வுகாண அனைவரும் இணைந்து கலந்துரையாட வேண்டும் என்றார்.

## இலங்கை மக்களுக்கு உதவ...

வழங்கினர். இலங்கை மக்களுக்காக தி.மு.க. எம்.பி.க்கள் தங்கள் ஒரு மாத ஊதியத்தை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்குவதாக திமுக அறிவித்திருந்த்து. பொருளாதார நெருக்கடியால் வாடும் இலங்கை மக்களுக்கு உதவ தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனை தொடர்ந்து, இலங்கை மக்களுக்கு உதவ அனுமதி கோரி, ஒன்றிய அரசுக்கு தமிழக முதல்வர் கடிதம் எழுதியிருந்தார்.

இதற்கு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் அனுமதியளித்திருந்தார்.

இதனை தொடர்ந்து, பொருளாதார நெருக்கடியிலுள்ள இலங்கை மக்களுக்கு நேசக்கரம் நீட்டும் விதமாக, முதற்கட்டமாக, 40,000மெ.தொன் அரிசி, 500 மெ.தொன் பால் மா மற்றும் உயிர்காக்கும் மருந்துகளைத் தமிழ்நாடு அரசின் சார்பில் ஒன்றிய அரசின் அனுமதியுடன் விரைவில் அனுப்பவுள்ளதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இலங்கை மக்களுக்கு உதவிட முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு 01 கோடி ரூபா வழங்கப்படமென மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இத்துடன், திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்களின் ஒரு மாத ஊதியமும் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கப்படமென திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் (03) அன்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

திராவிட முன்னேற்ற கழக பாராளுமன்ற மக்களவை – மாநிலங்களவை உறுப்பினர்களும் தங்கள் ஒரு மாத ஊதியத்தை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்குவார்களென தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வர் பொது நிவாரண நிதிக்கு திமுக சார்பில் ஒரு கோடி ரூபாய் வழங்கப்படுமென அக்கட்சியின் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். அதன்படியே, டி.ஆர்.பாலு, துரைமுருகன் ஆகியோர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து ஒரு கோடி ரூபாய் நிதிக்கான காசோலையை வழங்கினர்.

## புதிய பிரதி சபாநாயகராக...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தவிர்ந்த பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 224 எம்பிக்களுக்கு வாக்களிப்பில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருந்த போதும் நேற்றைய இந்த வாக்களிப்பின் போது பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், சி.வி. விக்கினேஸ்வரன், வினோ நோகராதலிங்கம்,இம்ரான் மஹ்ரூப், ஜோன் செனவிரட்ண, விமல் வீரவன்ச, மயந்த திஸாநாயக்க, உதித்த பிரேமரத்ன ஆகிய 08 பேரும் நேற்று வாக்களிப்பின் போது சபையில் சமுகமளித்திருக்கவில்லை.

இதற்கமைய 83 மேலதிக வாக்குகளால் புதிய பிரதி சபாநாயகராக ரஞ்சித் சியம்பலாபிட்டிய மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார். அதனையடுத்து ரஞ்சித் சியம்பலாபிட்டிய பிரதி சபாநாயகராக நியமிக்கப்படுவதாகவும் சபாநாயகர் சபையில் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றம் கூடிய போது, பாராளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படுவதாக அறிவித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு புதிய பிரதி சபாநாயகர் பதவிக்கு ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் பெயரை முன்மொழிந்தனர். பாராளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால. டி.சில்வா இதனை முன்மொழிந்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த இதனை வழிமொழிந்தார். இதற்கு ஆளும் கட்சியின் ஒத்துழைப்பை வழங்குவதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அதேநேரம், எதிர்க்கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாகீர் மாக்காரின் பெயரை பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார முன்மொழிந்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல இதனை வழிமொழிந்தார்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய இவ்வாறு புதிய பிரதி சபாநாயகர் தெரிவு நடைபெற்றது. நிலையியற் கட்டளை 06(1) இற்கு அமைய பிரதி சபாநாயகர் பதவி அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளர் பதவி வெற்றிடம் ஏற்பட்டால் அதனையடுத்து நிகழும் முதலாவது கூட்டத்தின் பொது அலுவல்கள் ஆரம்பத்தின்போது, சந்தர்ப்பதத்துக்கமைய பிரதி சபாநாயகர் ஒருவரை அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளர் ஒருவரை தேர்வு செய்வதற்குப் பாராளுமன்றம் முற்படும்.

பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியம்பாலபிட்டிய பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து விலகுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அறிவித்திருந்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதியின் பதில் தனக்குக் கிடைத்திருப்பதாக ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று முன்தினம் (04) பாராளுமன்றத்தில் அறிவித்தார். இதனையடுத்து புதிய பிரதி சபாநாயகரைத் தெரிவு செய்வதற்கு பாராளுமன்றம் நடவடிக்கை எடுத்தது.

இதன்போதே பிரதி சபாநாயகராக ரஞ்சித் சியம்பலாபிட்டிய மீண்டும் தெரிவானார்.

## நிலையியற் கட்டளைக்கு...

வேண்டும் என சபாநாயகர் அறிவித்தபோது அதற்கு எதிராக எதிர்க்கட்சியினர் கருத்துக்களை முன்வைத்த போதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்றுக்காலை 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் தலைமையில் கூடியது.

வழமையான பணிகளைத் தொடர்ந்து புதிய பிரதி சபாநாயகர் தெரிவு நடைபெற்றது.

பிரதி சபாநாயகர் பதவிக்கு இரு வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளமையால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென சபாநாயகர் அறிவித்தார்.அத்துடன் வாக்களிக்கும் போது, வாக்களிக்கும் உறுப்பினரின் பெயரை குறிப்பிட்டு வாக்குச்சீட்டில் வாக்களிப்போர் கையொப்பத்தை இட வேண்டுமெனவும் அவர் அறிவுறுத்தினார்.

எனினும் அதனை எதிர்கட்சியினர் எதிர்த்தனர்.அரசாங்கத்தில் உள்ளவர்கள் பலர் தமது வேட்பாளருக்கு வாக்களிக்க காத்திருப்பதாகவும் அதனால் வாக்குச் சீட்டில் கையொப்பமிடுதல் நிறுத்தப்படவேண்டும் என்றும் எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

எனினும் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின்படி முறையை மாற்ற வாய்ப்பில்லையென்றும் வாக்குச் சீட்டுக்களின் இரகசியம் பாராளுமன்ற செயலாளரால் பாதுகாக்கப்படுமென்றும் சபாநாயகர் உறுதியளித்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேக்கர, கடந்த 2015ஆம் ஆண்டும் இந்த முறைமையிலேயே இரகசிய வாக்கெடுப்பு நடைபெற்றதென சுட்டிக்காட்டினார்.

அதன்போது சபையில் சிறு சர்ச்சை ஏற்பட்ட து.எனினும் சபாநாயகர் அறிவித்ததன்படி வாக்குச் சீட்டில் கையொப்பமிடவேண்டுமென்பது முடிவானது.

சபை நடுவே வாக்குச் சாவடி அமைக்கப்பட்டு காலை 11 மணிக்கு இரகசிய வாக்கெடுப்பு ஆரம்பமானது. பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அழைக்கப்பட்டு அவர்களுக்கு வாக்குச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு வாக்களிப்பு ஆரம்பமானதுடன் முதல் வாக்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அளித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் பெயர் அழைக்கப்பட்டபோது அரச தரப்பினர் கரகோஷம் எழுப்பி எதிர்க்கட்சித் தலைவர் , ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவுக்கு வாக்களிக்கப்போவதாக கூறினர்.

பிரதமரும் சஜித்திடம் சிரித்தவாறு ஏதோ கூறினார். இந்நிலையில் வாக்குச் சீட்டில் புள்ளடி போட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வாக்குச்சீட்டை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் காண்பித்து, எந்த இரகசியமும் இல்லையென்றார்.அதனை எதிர்க்கட்சியினர் தமது கையடக்கத் தொலைபேசியில் படம் பிடித்தனர்.

இதன்போது ஆளும் தரப்பின் சில எம்.பி.க்கள் , "எதிர்க்கட்சியினர் இரகசியம் பற்றி பேசுகின்றனர் எனினும் அவர்களுக்கு இரகசியத்தை பாதுகாக்க தெரியவில்லை" என்று தெரிவித்தனர்.

முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமான இரகசிய வாக்கெடுப்பில் 11.40 மணிவரை 85 எம்.பி க்களே வாக்களித்திருந்தனர். அதனையடுத்து சபைக்கு நடுவே இரண்டாவது வாக்குச் சாவடி அமைக்கப்பட்டு வாக்களிப்பு துரிதப்படுத்தப்பட்டது. வாக்களிப்பை எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சிலர் படம்பிடித்த போது படம் பிடிக்க வேண்டாமென படைக்கல சேவிதர் அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

## ஸ்ரீலங்கன் விமானங்களின்...

வந்தனர். இதனையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற கோப் குழுவின் தலைவர் சரித்த ஹேரத் தெரிவித்தார்.

## எரிபொருளுக்கான விலை...

தெரிவித்தார். பெரும்பாலான எரிபொருளை ரயிலில் கொண்டு செல்லும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும், தற்போது இலங்கையில் போதியளவு பெற்றோல் இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். மூன்று நாட்களில் பெற்றோல் நிலைமையை வழமைக்கு கொண்டுவர முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

## வாகனத்தில் மோதுண்டு...

உறுப்பினர் அலி சப்ரி ரஹீமும் அந்த வாகனத்தில் பயணித்ததாக பொலிஸாரின் முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்தநிலையில், எம்பியின் வாகனத்தை செலுத்திய சாரதி கைது செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தேயிலை ஏற்றுமதியில்...

ஏற்றுமதிப் பொருளாக தேயிலை உள்ளது. தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு முன், ஆண்டுக்கு 1.3 பில்லியன் அமெரிக்க டொலரை இது ஈட்டி வந்தது.

எனினும் தற்போது 1948 இல் சுதந்திரத்திற்குப் பிறகு மிக மோசமான வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

## இணையத்தில் உலாவரும்...

பயணம் மேற்கொண்டு இருக்கும் நிலையில் பிரதமர் நரேந்திர மோடியின் ஜெர்மனியில் சுமார் 30 வருடங்களுக்கு முன் எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்று தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

இந்தப் புகைப்படம் 1993ஆம் ஆண்டு நரேந்திர மோடி அமெரிக்காவுக்குப் பயணம் செய்துவிட்டுத் திரும்பியபோது ஜெர்மனியின் பிராங்பேர்ட்டில் தங்கியிருந்தபோது எடுக்கப்பட்டது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

## மின் துண்டிப்பு நேரத்தை...

சபை பொறியிலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது 3 மணித்தியாலங்களும் 20 நிமிடங்களுக்கு மின்தடை அமுல்படுத்தப்படுகின்ற நிலையில் , மின்தடை அமுலாகும் காலப்பகுதியினை 5 மணித்தியாலங்களுக்கு நீடிக்க வேண்டியுள்ளதாகவும் மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் நேற்று மூன்று மணித்தியாலங்களும் 20 நிமிடங்களும் மின் விநியோகத்தடை அமுல்படுத்தப்பட்டதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

## இ.போ.சபை பஸ்கள்...

இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதன்படி இன்றைய தினம் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபை பஸ்களுக்கு தேவையான பாதுகாப்பை வழங்குமாறு பாதுகாப்பு தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்படி இன்று (06) வழமை போன்று 5,200 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுமென அவர் தெரிவித்தார்.

இவற்றில் சுமார் 1,500 துாரசேவை பஸ்கள் உள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க மேலும் தெரிவித்தார்.

## அரசுக்கு ஆதரவாக...

இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், பாராளுமன்றில் நடத்தப்பட்ட, நடத்தப்படும் நாடகங்கள் இன்று வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

ஏனென்றால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவை தெரிவு செய்வார்களென தான் நினைத்திருக்கவில்லை. ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவிற்கு வாக்களித்து, அவரை பிரதி சபாநாயகராக தெரிவு செய்த 148 பேரும் தற்போகும் ராஜபக்ஷக்களுடனேயே இருக்கின்றனர் என்றார்.

எனவே, அவரை எதிர்த்து போட்டியிட்ட இம்தியாஸ் பாக்கிர் மார்க்கருக்கு வாக்களித்த 65 பேர் மட்டுமே மக்கள் பக்கம் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## பிலிப்பைன்ஸில்...

அந்நாட்டு நிலவரப்படி நேற்று வியாழக்கிழமை அதிகாலை 5:41 மணிக்கு பிலிப்பின்ஸின் தாவோ ஓரியண்டல் மாகாணத்தின் தர்கோனா நகரத்திலிருந்து தென்கிழக்கே 136 கிலோமீற்றர் தொலைவில் 96 கிமீ ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக நில அதிர்வு ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் முதலில் ரிச்டர் அளவுகோலில் 6.2 என்று அறிவித்தது, பின்னர் 5.7 ஆகக் குறைத்தது.

இந்த நிலநடுக்கம் மிண்டனாவ் தீவில் அருகிலுள்ள மாகாணங்களிலும் உணரப்பட்டது. டெக்டோனிக் நிலநடுக்கம் அதிர்வுகளைத் தூண்டும் ஆனால் சேதத்தை ஏற்படுத்தாது என்று நில அதிர்வு ஆய்வு நிறுவனம் கூறியுள்ளது.

பிலிப்பைன்ஸ் பசிபிக் எரிமலைப் பகுதியில் (ரிங் ஆஃப் ஃபயர்) அமைந்துள்ளதால் அடிக்கடி நில அதிர்வு நடவடிக்கைகளைளுக்கு உள்ளாகிறது.

இந்த நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த தகவல் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

## சஜித்தின் தாயார் நடேசன்...

முஸம்மில் தெரிவித்தார். பிரதி சபாநாயகர் தெரிவின் பின்னர் கருத்துத் தெரிவித்த அவர்,

02 வாரங்களாக பேச்சு நடத்தினோம். எந்த பேச்சிலும் இறுதி முடிவு எட்டப்படவில்லை. அனைத்து கட்சிகளும் அடங்கிய சர்வகட்சி அரசு அமைக்க யோசனை முன்வைக்கப்பட்டது. எதிர்க்கட்சியோ அரசோ அதற்கு உடன்படவில்லை. நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவந்து அரசை கவிழ்த்தால் ஆட்சியை ஏற்க ஐ.ம.ச தயாரா? இவர்கள் அரசியல் விளையாட்டு விளையாடுகிறார்கள்.

திருக்குமார் நடேசனின் வீட்டில் நேற்று உங்கள் தயார் யாரை சந்தித்தாரென எதிர்க்கட்சித் தலைவரிடம் வினவுகிறோம். எதிர்க்கட்சி இணைந்து உருவாக்கிய ஒற்றுமையை குழப்பியது யார்? இவ்வாறு டீல் வைத்துக் கொண்டு பொதுவான உடன்பாடு ஏற்படுவதை ஏன் குழப்ப வேண்டும். பொய்யான எதிரணி, டீல் வைத்து மக்களை ஏமாற்ற முயல்கிறது. நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நாம் வாக்களிக்கிறோம்.ஆனால் அடுத்த திட்டம் என்ன என்பதை தெளிவாக சொல்லுங்கள் .நாட்டை மேலும் பள்ளத்தில் தள்ளாதீர்களென்றார்.

இதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ,

பெண்டோரா நடேசனை எனது தாய் சந்தித்ததாக சபையில் குறிப்பிடப்பட்டது. அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. சேறுபூச இடமளிக்காதீர்கள் என்றார்.

## இந்தியா வழங்கிய...

எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் அலி சப்ரி மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நெருக்கடியான நிலையில் ஒருவரையொருவர் நோக்கி விரல் நீட்டாது கொள்கையொன்றின் பிரகாரம் செயற்பட வேண்டுமென தெரிவித்த அமைச்சர், சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை 138 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், 65,000 மெற்றிக்தொன் யூரியாவை இறக்குமதி செய்வதற்கு இந்திய அரசாங்கத்துடன் முதல் கட்ட கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

750 மில்லியன் இரும்பு கொள்வனவு செய்யப் போவதாக பொய்யான வதந்தி பரப்பப்பட்டுள்ளது. கைத்தொழில்களுக்கு தேவையான மூலம் பொருட்கள் பெறுவதற்காக உத்தேசிக்கப்பட்டது. அதில் இரும்பும் அடங்கும்.

பொருளாதார நெருக்கடி இலங்கையில் மட்டுமன்றி பல நாடுகளிலும் காணப்படுவதாகத் தெரிவித்த அலி சப்ரி, இது கொவிட்19 நோயுடன் இந்த நிலை அதிகரித்த்தென்றும் வலியுறுத்தினார்.

காலத்தை வீணடிப்பதற்காகவே எதிர்க்கட்சித் தலைவர் நிலையியற் கட்டளையின் கீழ் கேள்வி எழுப்புவதாகவும் பதிலை செவிமடுக்காமல் மீண்டும் மீண்டும் கேள்வி எழுப்புவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

எதிர்கட்சித் தலைவருக்கும் அமைச்சருக்குமிடையில் கடுமையாக வாதம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.(பா)

1000 பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ்;

# பாடசாலைகளின் அபிவிருத்தி வசதிகளை மேம்படுத்த திட்டம்



ஆயிரம் தேசிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் உள்ள ஏனைய பாடசாலைகளின் அபிவிருத்திக்காக செயற்படுத்தப்படும் கொத்தணி பாடசாலை மற்றும் மும்மொழி பாட சாலைகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு தேவையான பாடசாலை உபகரணங்களை வழங்கும் நிகழ்வு கல்வி அமைச்சர் டாக்டர் ரமேஷ் பத்திரன தலைமையில் கல்வி அமைச்சு வளாகத்தில் (04) நடைபெற்றது.

ராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த டி சில்வா, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே. கபில சீ.கே. பெரேரா, கல்வி சேவைகள் ராஜாங்க அமைச்சின் செயலாளர் கே. எம். எஸ். டி ஜயசேகர ஆகியோரும் கலந்து கொண்டுள்ளதை காணலாம்.

# கிராம மட்ட இளைஞர்கள், யுவதிகளை தேயிலை செய்கையில் ஈடுபடுத்த நடவடிக்கை

## சிறுதோட்ட அபிவிருத்தி அதிகார சபை தெரிவிப்பு

**மாத்தறை தினகரன் நிருபர்**

கிராம மட்டத்தில் இளைஞர், யுவதிகளை தேயிலைச் செய்கையில் ஈடுபடுத்தி தேயிலைத்தோட்டச் செய்கையை அபிவிருத்தி செய்ய சிறுதோட்ட அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. தேயிலைச் செய்கையின் அபிவிருத்திக்கு மனித வளம் மிகவும் குறைவாகக் கிடைப்பதால் இந்த நடவடிக்கை எடுத்ததாக சிறு தோட்ட அபிவிருத்தி அதிகார சபை தெரிவிக்கிறது.

தேயிலைச் செய்கையை அபிவிருத்தி செய்ய தேவையான பழமை வாய்ந்த இயந்திரங்களை நீக்கி நவீன இயந்திரங்களை தேயிலைச் செய்கைக்கு அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேயிலைச் செய்கையில் கவ்வாது வெட்டுதல், பச்சைக் கொழுந்து பறித்தல், கான் வெட்டுதல் போன்ற வேலைகளுக்கு நவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்படும்.

தேயிலைச் செய்கைக்கு திரவ பசளை விசுறுவதற்காக இயந்திரங்களும் வழங்கப்படும். இந்த இயந்திரங்களின் பெறுமதி 05 இலட்சம் ரூபா என தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் பயிற்சிகளும் வழங்கப்படும் என்று சிறுதேயிலைத் தோட்ட அபிவிருத்தி சபையின் மாத்தறை மாவட்ட அலுவலகம் மேலும் தெரிவித்தது.




2022 ஆம் ஆண்டு தரம் ஒன்றுக்கு புதிய மாணவர்களை சேர்க்கும் கல்வி அமைச்சின் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கெக்கிராவ கல்வி வலயத்திலுள்ள மரதன்கடவள அல் அமீன் முஸ்லிம் வித்தியாலயத்தில் தரம் ஒன்றுக்கு புதிய மாணவர்களை சேர்க்கும் நிகழ்வு அதிபர் எஸ்.எம்.கவுஸ் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதன் போது புதிய மாணவர்களை வகுப்பறைக்கு அழைத்து வருதல் மற்றும் தரம் இரண்டு மாணவர்கள் இசை நிகழ்ச்சியில் ஈடுபட்டிருப்பதையும் படத்தில் காணலாம்.

படம்: அநுராதபுரம் தினகரன் நிருபர்

# புத்தளத்தில் கரையோரம் சுத்தம் செய்யும் நிகழ்வு



**புத்தளம் தினகரன் நிருபர்**

உலக ஈர வலய தினத்தை முன்னிட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் புத்தளம் மாவட்ட காரியாலயம் ஏற்பாடு செய்த கண்டல் தாவர நடுகையும் கரையோரம் சுத்தம் பண்ணும் நிகழ்வும் கண்டக்குளி குடாவ பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்றது.

கற்பிட்டி பிரதேச செயலாளர் டி.ஏ.பி.தனன்சூரிய, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் புத்தளம் மாவட்ட பணிப்பாளர் டி.எம்.கே.திசாநாயக்க, கரையோரம் பேணல் கல்பிட்டி பொறுப்பதிகாரி ஏ.ஆர்.எம்.ஹலீம், புத்தளம் மாவட்ட சுற்றாடல் முன்னோடி ஆணையாளர் ஏ.எச்.எம்.எம்.ஷாபி, புத்தளம் தெற்கு கோட்ட சுற்றாடல் முன்னோடி ஆணையாளர் ஏ.வரங்கநாதன், கற்பிட்டி தெற்கு கோட்ட சுற்றாடல் முன்னோடி ஆணையாளர் எச்.எம்.சுஹைப், கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை சுற்றாடல் முன்னோடி தங்கப் பதக்கதாரிகள் மற்றும் மற்றும் வெளிநாட்டு சுற்றாடல் ஆர்வலர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஈரான் கலாசார திரைப்பட விழா கொழும்பில்



ருஸைக் பாருக்

கொழும்பு ஈரான் கலாசார பிரிவு ஒழுங்கு செய்த ஈரான் திரைப்பட விழா புதன் கிழமை 4ம் திகதி முதல் 8ம் திகதி வரை பௌத்தாலோக மாவத்தையில் உள்ள தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன பிரதான கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்திருந்தது. தொடக்க விழாவில் ஈரான் இஸ்லாமிய குடியரசின் தூதர் ஹஷேம் அஷ்ஜாஸ்த்சே பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

ஈரானின் கலாசார பிரிவின் கவுன்சிலர் பஹ்மான் மொஸாமில், ஈரான் தூதரகத்தின் பொருளாதார மற்றும் தூதரகப் பிரிவு பொறுப்பாளர் கே. சோஹைல், திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மதுர வணிகசேகர, பொது முகாமையாளர் ஜி. ஏ. கித்சிறி மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர் தமித் பொன்சேகா ஆகியோரும் கலந்து கொண்டனர்.


## அடகு தங்க ஆபரணங்களின் ஏலவிற்பனை

பிரதேச செயலகத்தினால் அடகு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ள வ/ப களுத்துறை மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிச் சங்கத்தின் இல. 252, காலி வீதி, களுத்துறை வடக்கு, இல. 111 1/1, பிரதான வீதி, களுத்துறை தெற்கு, இல. 13, மத்துகம வீதி, கட்டுகுருந்த மற்றும் இல. 500பீ, காலி வீதி, பாணந்துறை எனும் அடகு நிலையங்களில் 2020-12-31ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு தற்போது வரை மீட்கப்படாத அடகு தங்க ஆபரணங்களை 2022-05-21ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு வ/ப களுத்துறை மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிச் சங்கத்தின் கிளை வளவில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**வ/ப களுத்துறை மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிச் சங்கம்,**
**இல. 252, காலி வீதி,**
**களுத்துறை வடக்கு.**
**தொலைபேசி: 034-2237462**
**034-2237230**
**034-2223233**
**034-2236711**
**038-2245111**

திகதி 04.05.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 4752
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.12,092,800.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.19,681,240.00
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 0 5 4 3 8 0

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1242
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,017,780.00
அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு ரூ. 11,143,887.60
வெற்றி இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 9 7 8 4 9 3

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0061
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,412,280.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,204,969.80
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 01 04 09 19

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 782
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,995,920.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 109,704,225.20
வெற்றி இலக்கினம் F வெற்றி இலக்கங்கள் 23 41 59 78

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1100
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,894,240.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 250,690,286.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
B 12 20 24 28 43

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

## வெலிமட பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட அபிவிருத்தி தொடர்பாக பிரதேச மக்களுக்கு வழங்கப்படும் அறிவித்தல்

**இல. 2199/25 எனும் இலக்கமிடப்பட்ட 2020 ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதியிடப்பட்ட இலங்கை சோஷலிசக் குடியரசு யாப்பின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவுறுத்தலும் இணைக்கப்பட்டுள்ளது.**

அதில் 5.1ஆம் உறுப்புரைக்கமைய வெலிமட பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட 2023ஆம் வருட செலவீனங்களுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு தேவையான அபிவிருத்தி ஆலோசனைகளை 2022.05.23ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், வெலிமட பிரதேச சபை, வெலிமட எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தலைவர்,**
**பிரதேச சபை,**
**வெலிமட.**

## பெறுகை அறிவித்தல்

### சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார

**ஒப்பந்த இல. SNSCA/PRO/ 371/2022**

01. சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார சபையின் உள்ளக விளையாட்டரங்கில் உள்ள நீச்சல் தடாக நீர் சுத்திகரிப்பு வசதிகளுக்கான உத்தேச மேம்படுத்தல் வேலைகள் (Proposed Upgrades for Swimming Pool water Treatment facility in Sugathadasa National Sports Complex Authority) தொடர்பில் 2022-04-10ஆம் திகதிய தினகரன், சிலுமின, Sunday Observer பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விலைக்கோரலுக்கு இயைபாக 2022-05-02ஆம் திகதி திறப்பதற்கிருந்த விலைமனுக்கள் அரசாங்கத்தினால் அன்றைய தினத்தை பொது விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தியதன் காரணமாக மீண்டும் 2022-05-13ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.
02. இதன் பொருட்டு முன்னர் விலைக்கோரல் படிவங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் மீண்டும் விலைமனுக்களை பெற்றுக்கொள்ளத் தேவையில்லை என்பதுடன் அவ்வாறு பெற்றுக்கொண்ட விலைக்கோரல் ஆவணங்கள் மூலம் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம் என்பதோடு, விலைமனுக்கள் திறக்கப்படும் தினம் மட்டும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதாக தயவுடன் அறியத் தரப்படுகின்றது.
03. இதில் ஆர்வம் காட்டுபவர்கள் எழுத்துமூல விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் விலைக்கோரல் ஆவணங்களை 2022-05-09ஆம் திகதி முதல் 2022-05-12ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் வருகை தந்து 16,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை அதிகார சபைக்குச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
04. இந்த விலைக்கோரலுக்கு இயைபான பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
    - EM1 தரத்தின் கீழ் மின்சாரம் மற்றும் பொறிமுறை சேவையின் கீழான பதிவு (EM1 for Electrical and Mechanical Services)
    - C5 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் கட்டிட நிர்மாணத்தின் கீழ் பதிவு (C5 or above for Building Construction)
    - SP1 தரத்தின் கீழ் நீச்சல் தடாக நிர்மாணம் தொடர்பிலான பதிவு (SP1 for Specialized Construction contractors for swimming pool if preferable)
    - குறைந்தபட்சம் 06 வருடத்திற்கான கம்பனி பதிவு
05. விலைக்கோரல் பிணை 810,000.00 ரூபாவாகும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு வர்த்தக வங்கியிலும் பெற்றுக்கொண்ட 119 நாட்களுக்குச் செல்லுபடியாகும் பிணை முறியாகவிருத்தல் வேண்டும். (2022-09-08ஆம் திகதி)
06. விலைமனுக்கள் 2022-05-13ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் நிர்வாகக் கட்டிடத்தில் திறக்கப்படும் என்பதுடன் அன்றைய தினம் அல்லது அதற்கு முன் இயைபுடைய விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
07. இந்த செயற்றிட்டத்திற்கு இயைபான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022-05-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு சுகததாக திறந்தவெளி விளையாட்டரங்கின் நிர்வாகக் கட்டிடத்தில் இடம்பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகார சபை,**
**த.பெ. 2211, ஆர்தர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-13.**
**தொலைபேசி: 0112384385 (நீடிப்பு 120)/ தொலைநகல்: 0112445675 மின்னஞ்சல்: psnsca@yahoo.com**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

## தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ (தம்புத்தேகம கிளை)

### அனுராதபுரத்தில் அமைந்துள்ள முன்பு தம்மணபுரம என அழைக்கப்பட்டு தற்போது தம்மேன்னகுலம என அழைக்கப்படும் இடத்திலுள்ள பெறுமதி மிக்க பொருளின் பகிரங்க ஏல விற்பனை

அனுமதி பெற்ற நில அளவையாளர் N. B. ஏக்கநாயக்க என்பவரால் தாயாரிக்கப்பட்டு 12.09.2017 திகதியிடப்பட்ட நிலவரைப்பட இலக்கம் 2933 இல் லொட் இலக்கம் 01 என குறிக்கப்பட்டு சகலதும் பிரிக்கப்பட்டதும், மீளவும் இது அனுமதி பெற்ற நில அளவையாளர் K. K. சின்னையா என்பவரால் தாயாரிக்கப்பட்டு 25.04.2015 திகதியிடப்பட்ட நிலவரைப்பட இலக்கம் 152/2001 இல் லொட் இலக்கம் 01 என குறிக்கப்பட்டு அத்துடன் அனுமதி பெற்ற நில அளவையாளர் K. K. சின்னையா என்பவரால் தாயாரிக்கப்பட்டு 26.07.2015 திகதியிடப்பட்ட நிலவரைப்பட இலக்கம் 7161 இல் லொட் இலக்கம் 02 (அனுமதி பெற்ற நில அளவையாளர் K. K. சின்னையா என்பவரால் தாயாரிக்கப்பட்ட இலக்கம் 13 இல் லொட் இலக்கம் 1 இல் உள்ள) என குறிக்கப்படும் இடமானது வடமத்திய மாகாணம் அனுராதபுரம் மாவட்டம் நுவரகம் பலத்த கணடற கோறளே எல்லைக்குட்பட்ட நுவரகம் பலத்த - கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இல.241கிராம சேவகர் பிரிவில் முன்பு தம்மணபுரம என அழைக்கப்பட்டு தற்போது தம்மேன்னகுலம என அழைக்கப்படும் கிராமத்தில் அமைந்துள்ளது. இந்தக் காணியானது அனைத்தும் அடங்கலாக, திட்ட இலக்கம் 2933 இல் லொட் இலக்கம் 1 இனால் குறிப்பிடப்பட்டு வடக்கு: வீதி (R D A) மூலமாகவும் , கிழக்கு: வீதி_PS மூலமும், தெற்கு: உபாலி வீரக்கோனின் காணி மூலமும், மேற்கு: நயன கீரத்தி என்பவரின் காணிகள் மூலமாகவும் சூழப்பட்டிருக்கிறது. அநுராதபுர நிலப்பத்திவின் கீழ் கனவளவு/போலியோ LDO D 29/104 இந்த கீழ் பதியப்பட்ட காணியின் பரப்பளவு கட்டிடங்கள், தாவரங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்களாக மூன்று ரூட் பதினெட்டு தசம் ஏழு பூச்சியம் பேர்ச்சேஸ் ஆகும். (A:00, R:03, P:18.70)

குறித்த இடத்தில் உள்ள மின் இணைப்பு விநியோகத்தொகுதி, நீர் விநியோகத்தொகுதி, தொலைத்தொடர்பு மற்றும் குளிரூட்டி என்பன உள்ளடங்களாக தற்போது உள்ள மற்றும் இனிவரும் அசையக்கூடிய தொகுதிகள், இயந்திர பாகங்கள் பொருத்தி, சேவைகள் அனைத்தும் உள்ளடங்களாக.

அநுராதபுர பிரசித்த நொதாரிசு வசன தரங்கனி இருகல்பண்டார அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 27.06.2019 ஆம் திகதியிடப்பட்ட, 803, 805, 807 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் **கிரௌன் பிஸ்கட் கம்பெனி (தனியார்) லிமிடெட் (பெறுனர் 1) மற்றும் பிறமானகே சந்தன உப்புல் குமார ராஜபக்ச (பெறுனர்2) என்பவர்களை கடனாளியாக கொண்டு தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ க்கு** அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.

**தேசிய அபிவிருத்தி வங்கி பி எல் சி எமக்கு வழங்கிய அதிகாரத்தின் அடிப்படையில்**
மேலே உள்ள சொத்துக்களை பொது ஏலத்தில் விற்கிறேன் செவ்வாய்கிழமை 07 ஜுன் 2022 அன்று பி. ப.10.30 மணிக்கு குறித்த இடத்தில் இடம்பெறும்.

**குறித்த இடத்தை அடைவதற்கு:-** அனுராதபுரம் கச்சேரி சந்தியிலிருந்து (D. S. சுற்று வட்டம்) பண்டாரநாயக்க மாவத்தை (விமானநிலைய வீதி) நோக்கி 805 கிலோமீட்டர் தூரம் சென்று (புதிய கண்டி வீதியும் கண்டிவீதியும் சந்திக்கும் சந்தியிலிருந்து 100 மீற்றர் தள்ளி) குறித்த இடத்தை அடையலாம். குறித்த வீதியின் முகப்பில் வலப்புறத்தில் அமைந்துள்ளது

**கொடுப்பனவு செய்யும் முறை: -**
ஏல விற்னையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூார் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்)
(3) (விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்)
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவொர் கட்டணம் 1000 ரூபா
(5) விற்பனை செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் (இருப்பின்)
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி ரூபாய் 2000

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள்,வரிகள், அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்துச் செலுத்தப்படல் வேண்டும்.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்கானும் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு பெற முடியும்.

பொது முகமையாளர் - தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ
இலக்கம்: 255, தம்புத்தேகம பிரதான வீதி
தொலைபேசி. 0252276872, 0252276873
தொலைநகல். 0252276807

- **முன்னறிவிப்பு இன்று ஏல விற்பனையை நிறுத்த வங்கிக்கு உரிமை உண்டு.**
- **சுகாதார அமைச்சின் கோவிட் 19 பாதுகாப்பு சட்ட நடவடிக்கைகள் கடுமையாக பின்பற்றப்பட்டு ஏலம் இடம்பெறும்.**

DK's AUCTIONS To Professionally Serve the Nation

**டல்லஸ் கெலார்ட்**
அங்கீகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்
இல .146/3, காலதேரா கார்டன்ஸ், கீழ் துடுகெமுனு தெரு, கொஹுவல.
தொ.பே: 11 4367467, 11 4367111 | aucslk@gmail.com

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -






முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு:

# மண் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட இடத்தில் தொல்பொருள் எச்சங்கள்





(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் மண் அகழ்வில் ஈடுபடும் போது பாரிய தொல்பொருள் எச்சங்கள் இனம்காணப்பட்டுள்ளன. இதனையடுத்து தொல்பொருள் இடத்தினை அகழ்ந்து தொல்பொருட்களுக்கு சேதம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட மன்னாகண்டல், வசந்தபுரம் கிராமத்தில் நெல்களஞ்சியசாலைக்கான அடித்தளத்திற்கான மண் நிரப்பும் நடவடிக்கைக்காக அருகிலுள்ள வழிபாட்டு இடமொன்றின் பகுதிகளை கனரக இயந்திரம் கொண்டு தோண்டிய போது தொல்பொருள் சிதைவுகள் காணப்பட்டுள்ளன. இதனையடுத்து இவற்றுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் வசந்தபுரம் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் மற்றும் கனரக இயந்திரத்தின் சாரதி ஆகியோர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அப்பகுதிக்கு பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குட்பட்ட மன்னாகண்டல் கிராமத்தில் வசந்தபுரம் கமக்கார அமைப்பிற்கான நெல் காயவிடும் தளம் பிரதேச செயலத்திற்கு சொந்தமான இடமொன்றில் அமைத்துக்கொடுப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு சொந்தமான இடம் என்றும் விவசாயிகளின் நெல் காயவிடும் தளத்திற்காக இது அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. அருகிலுள்ள பகுதியில் மண் தோண்டுவதற்கு அனுமதி கொடுக்கப்படவில்லையென கிராம சேவையாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட கிராம அபிவிருத்தி சங்கதலைவர் மற்றும் கனரக இயந்திரத்தின் சாரதி ஆகியோரை நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

அப்பகுதி தொடர்பில் அறிந்த வயதானவர் ஒருவர் தெரிவிக்கையில், நெல் தளம் அமைந்த பகுதிக்கு அருகில் ஒரு கூழா மரத்தினை கொண்ட சிறு குன்றுபோன்ற பகுதி காணப்படுகின்றது. இதில் காளி கோவில் என கிராமத்தினை சேர்ந்த ஒருவர் வழிபாடுகளை மேற்கொண்டு வந்துள்ளார்.

மரத்தின் கீழ் கற்களைவைத்து நீண்டகாலமாக வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மன்னாகண்டல் என்ற கிராமம் பெயர் வர காரணம் மன்னர் ஆண்ட பகுதியாக காணப்படுவதால் அருகில் கெருடமடு கிராமம் காணப்படுகின்றது. இப்பகுதியில் மன்னர்கள் ஆண்டமைக்கான தடயங்கள் பல இடங்களில் காணப்படுகின்றன. ஆனால், தற்போது தொல்பொருள் இனம்காணப்பட்ட இடம் நீண்டகாலமாக காளி கோவில் என்று மரத்தின் கீழ் கல்வைத்து கற்பூரம் கொழுத்தி வழிபாடுசெய்து வந்துள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பகுதியினை தொல்பொருள் திணைக்களம் மற்றும் படையினர் ஆகியோர் பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியத் துணைத் தூதுவர் யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம்



கரவெட்டி தினகரன் நிருபர்

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதுவராலயத்தின் துணைத் தூதுவர் ஜே. ராகேஷ் நட்ராஜ் நேற்று முன்தினம் புதன்கிழமை (04) காலை மரியாதை நிமிர்த்தமாக யாழ். பல்கலைகழகத்திற்கு விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவை சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்ததுடன் இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் மற்றும் இந்திய அரசாங்கத்தின் புலமைப்பரிசில்கள் தொடர்பிலும் நேற்றைய சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டன.




பூநகரியில் முற்கொம்பன் பகுதியில் வாழும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பமொன்றுக்கு வாழ்வாதாரமாக ரூபா 55,000 பெறுமதியான தையல் இயந்திரமும் அவர்களது 03 பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இதற்கான நிதி உதவியை வேலணையை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்படமாகவும் கொண்ட இராசா பாலேந்திரனின் நிதிப்பங்களிப்பில் பூமணியம்மா அறக்கட்டனையின் இலங்கைக்கான தலைவரும் யாழ் மாநகரசபை உறுப்பினருமான லயன் கலாநிதி நா. தனேந்திரன் தலைமையில் சென்ற குழுவினர் இவற்றை வழங்கினர்.

(படம் வேலணை குறூப் நிருபர்)

# கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டவர் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம் குறூப், யாழ்.விசேட நிருபர்கள்

பொன்னாலை ஊடாக காரைநகருக்கு கஞ்சா கொண்டு சென்றவரை மடக்கிப் பிடித்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுசென்றபோது கஞ்சாவையும் கைத்தொலைபேசியையும் கைவிட்டுத் தப்பிச் சென்றார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (04) புதன்கிழமை மாலை இடம்பெற்றது.

கஞ்சா கொண்டு செல்கின்றார் என பொன்னாலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு கிடைத்த தகவலையடுத்து அவரை வழிமறித்த இளைஞர் விசாரணை நடத்தினார். இதன்போது அவரிடம் கஞ்சா இருந்தமை கண்டறியப்பட்டது. அவரை வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்காக கொண்டுசென்றபோது திடீரென்று அவர் காரைநகர் நோக்கி மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்றார்.

இதுதொடர்பாக வட்டார உறுப்பினர் ந.பொன்ராசாவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவர் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு அறிவித்தார். சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸாரிடம் கஞ்சாவும் கைத்தொலைபேசியும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கைத்தொலைபேசியை வைத்து நபரைக் கைது செய்வதற்காக நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை, பொன்னாலை கரையோர வீதியூடாக கஞ்சா பரிமாற்றம் இடம்பெறுவதாக தகவல்கள் கிடைத்துள்ளமையால் சந்தேகநபர்களை மடக்கிப் பிடிப்பதற்கு எமது பிரதேச இளைஞர்கள் தொடர்ந்தும் விழிப்புடன் செயற்பட்டு வருகின்றனர் என பிரதேச சபை உறுப்பினர் ந.பொன்ராசா தெரிவித்தார்.

# குடிவரவு, குடியகல்வு திணைக்கள செயற்பாடுகள் இடைநிறுத்தம்

## கடவுச்சீட்டினை பெற அதிகளவான மக்கள் கூட்டம்






ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் முன்பாக அதிகளவான மக்கள் கூட்டம் கடவுச்சீட்டினை பெறுவதற்கு நேற்றையதினம் (05) காத்திருப்பதனை அவதானிக்க கூடியதாகவிருந்தது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் நாட்டிலுள்ள பொது மக்களுக்கு தொழில்நுட்ப கோளாறு காரணமாக செயற்பாடு நடைபெறாது என அறிவிப்பை வழங்கியும் மக்கள் கடவுச்சீட்டினை பெறுவதற்கு வவுனியா குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் முன்பாக வரிசையில் காத்திருந்தனர்.

அதன்படி கணனி கட்டமைப்பில் மீண்டும் கோளாறு ஏற்பட்டதன் காரணமாக கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் செயற்பாடு நேற்று தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு பின்னர் வழமைக்கு திரும்பியதாகவும் கொழும்பு தலைமை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்தது. இந்நிலையில் கணனி கட்டமைப்பில் மீண்டும் கோளாறு ஏற்பட்டுள்ளதாக நேற்றையதினம் (05) அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை வவுனியா குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினரால் இச்செயற்பாடு இன்று இடம்பெறாது என வாயிலில் அறிவுறுத்தல் வழங்கியும் மக்கள் கடவுச்சீட்டினை பெறுவதற்கு காத்திருப்பதனை அவதானிக்க முடிந்தது.

# மின்வலு காற்றாலை அபிவிருத்தி திட்டத்தால் மாவட்ட மக்களுக்கு பயனில்லை

(தலைமன்னார் விஷேட நிருபர்)

மன்னார் உயர் மின்வலு காற்றாலை அபிவிருத்தி திட்டத்தால் நன்மைகள் கிடைக்குமெனவும் இதனால் வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும் என்ற எண்ணம் கனவாகவே மாறியுள்ளதாக அரச சார்பற்ற ஒன்றியத்தின் தலைவர் சுதாகர் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் உயர் மின்வலு காற்றாலை தொடர்பாக மன்னார் பிரஜைகள் குழு ஆளுநர் சபையினருடன் அண்மையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரச சார்பற்ற ஒன்றியத்தின் தலைவர் மற்றும் செயலாளரும் கலந்து கொண்டனர்.

இதன்போது அரசசார்பற்ற ஒன்றியத்தின் தலைவர் சுதாகர் இங்கு கருத்து தெரிவிக்கையில், வெளியிலிருந்து ஒரு நிறுவனம் இங்கு வந்து இவ்வாறான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கும்போது மாவட்டத்தைச் சார்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும் என எம்மில் பலர் நினைக்கின்றார்கள்.

நாம் ஒட்டுமொத்தமாக பார்க்கும்போது எந்தவித நன்மைகளும் எமக்கு கிடைக்கப்பெறவில்லை. இதை எம் மக்கள் பலர் இப்பொழுது புரிந்து கொண்டனர்.

ஆகவே மன்னார் மாவட்டத்திலுள்ள அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து இதற்கான நடவடிக்கையை முன்னெடுக்க ஆவன செய்யப்படும் என தெரிவித்தார்.





தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த முல்லைத்தீவு முத்துவிநாயகர் தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

(படம் புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

# தீர்த்தக்கரை கொட்டுருட்டி குளத்தில் ஆணின் சடலம் மீட்பு

மாங்குளம் குருப் நிருபர்

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிலாவத்தை கிராம அலுவலர் பிரிவின் தீர்த்தக்கரை கொட்டுருட்டி குளத்தில் அழுகிய நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று காலை குளத்தில் சடலம் காணப்பட்டதை அவதானித்த கிராமமக்களால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டமையால் சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -





# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான



திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

1 மணித்தியாலம்

**எல்லா வினாக்களுக்கும் 1 மணி நேரத்தினுள் விடை அளியுங்கள். இவ்வினாக்களுக்கான விடைகள் அடுத்த வாரம் புலமைக் கதிரில் வெளியிடப்படும். பகுதி – 2 மாதிரி வினாத்தாள் அடுத்த வாரம் உங்கள் கரங்களில்!**

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1.


i. தாவர உண்ணி, சாது, இரைமீட்டல்
ii. தாவர உண்ணி, மூர்க்கம், இரைமீட்டல்
iii. ஊன் உண்ணி, சாது, இரைமீட்டல்

2.


i. செயற்கை, சுவை, உணவு
ii. இயற்கை, சுவை, சத்துக்கள்
iii. இயற்கை, சுவை, உடல் வளர்ச்சி

3. பின்வருவனவற்றுள் எப்போதும் உண்மையான கூற்று
i. கதிரைகள் மரத்தால் செய்யப்பட்டவை
ii. நாளை அடைமழை பெய்யும்
iii. இலங்கை ஒரு தீவாகும்.


4. நேற்று முன்தினம் திங்கட்கிழமை எனில் நாளை மறுதினம் என்ன கிழமை?
i. வியாழன் ii. வெள்ளி iii. சனி

5. அம்சன் பாடசாலை முடிந்து வீடு திரும்பும் போது அவனது நிழல் அவனுக்கு பின்னால் காணப்பட்டது எனின் அவன் பிரயாணம் செய்யும் திசை யாது?
i. தெற்கு ii. கிழக்கு iii. மேற்கு

6. அடுத்து வரும் இரண்டு இலக்கங்களைக் கூட்டும் போது விடை 7 ஆகும். இவ்விரண்டு இலக்கங்களையும் பெருக்கும் போது விடை 12 ஆகும். எனவே அவ்விரண்டு இலக்கங்களும் யாவை?
i. 5, 2 ii. 3, 4 iii. 6, 1

7. எந்த இலக்கத்தின் எட்டு மடங்கு 72 ஆகும்?
i. 7 ii. 8 iii. 9

8. நானும் எனது நண்பனும் நண்பனின் தங்கையும் எனது பெற்றோரும் கடற்கரைக்குச் சென்றோம் கடற்கரைக்கு சென்றவர்கள் மொத்தம் எத்தனை பேர்?
i. 4 ii. 5 iii. 6

9.




i. 48 ii. 42 iii. 46

10. 5*l* கொள்ளவு உள்ள குளிர்பானத்தை 250ml உள்ள எத்தனை போத்தல்களில் ஊற்றலாம்?
i. 10 ii. 15 iii. 20

11. கூடையொன்றில் 100 பழங்கள் இருந்தன. 15 பழங்களாக 5 தடவைகள் எடுக்கப்பட்டன. மிகுதியுள்ள பழங்கள் எத்தனை?
i. 15 ii. 20 iii. 25


12. ஒரு பெட்டியில் 5 சிவப்பு நிற முத்துக்கள், 7 பச்சை நிற முத்துக்கள், 4 நீல நிற முத்துக்கள் இருந்தன. பெட்டியினுள் பார்க்காமல் பச்சை நிற முத்தை எடுப்பதாயின் ஆகக் கூடுதலான எத்தனை முறை முத்துக்களை எடுக்க வேண்டும்.
i. 10 ii. 12 iii. 13

13. ஒரு புத்தகத்தின் விலை ரூ. 175.00. ஒரு பேனாவின் விலை ரூ. 25.00. ஒரு புத்தகம் வாங்கும் பணத்துக்கு எத்தனை பேனாக்கள் வாங்கலாம்?
i. 6 ii. 7 iii. 8

14.



இங்கு அதிகமாக காணப்படுபவை
i. ஒற்றை எண்கள்
ii. இரட்டை எண்கள்
iii. கூறமுடியாது

15. காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை கடிகார முகத்தில் நிமிட முள் எத்தனை தடைவ சுற்றி வந்திருக்கும்
i. 10 தடவைகள் ii. 11 தடவைகள் iii. 12 தடவைகள்

16.


உருவில் நிழற்றப்பட்ட பகுதியினை பின்னமாக எழுதினால்
i. 2/6
ii. 1/2
iii. 4/6

17. மீற்றர் கோல் ஒன்றின் நீளம் யாது?
i. 100 cm ii. 100 m iii. 10 cm

18. 72 இனிப்புக்களை இருவர் சமனாக பகிர்ந்தால் ஒருவர் பெறும் இனிப்புக்கள் எத்தனை?
i. 31 ii. 36 iii. 38

19. ரூ. 60.00 மதிப்புள்ள நான்கு தொப்பிகள் வாங்க தேவையான பணம் எவ்வளவு?
i. ரூ. 200.00 ii. ரூ. 220.00 iii. ரூ. 240.00


20. இங்கு காணப்படும் திண்ம உருவின் கணிதப் பெயரானது
i. பந்து
ii. கோளம்
iii. வட்டம்



21. 4க்கு அடுத்துள்ள இரட்டை எண்ணை நான்குடன் கூட்டினால் வரும் என்னை உரோம எண்ணாக எழுதினால்
i. X ii. XII iii.XV

22. 8572 என்பதனை விரித்து எழுதினால்
i. 8000 + 500 +70 + 2
ii. 800 + 50 + 70 + 20
iii. 8000 + 50 + 7 + 2

23 ¼ பங்கு நிறம் தீட்டப்பட்ட உரு எது?



i. ii. iii.

24. 3826 என்ற எண்ணுடன் 3011 என்ற எண்ணைக் கூட்டி வருகின்ற விடையை சொற்களில் எழுதினால்
i. ஆறாயிரத்து எண்ணூற்று முப்பத்தேழு
ii. ஆறாயிரத்து எண்ணூற்று முப்பது
iii. ஆறாயிரத்து எண்ணூற்று முப்பத்தொன்று


25. கடிகார முகத்தில் செங்கோண நேரத்தைக் காட்டாத நேரமெது?
i. மூன்று மணி ii. மூன்று முப்பது iii. ஒன்பது மணி

26. 5m துணியொன்றிலிருந்து 2m 20cm துணி வெட்டி அகற்றப்பட்டால் மீதமான துணியின் அளவு யாது?
i. 2m 60 cm ii. 2m 80cm iii. 2m 90cm

27. சரியான முறையில் 300 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால்
i. முந்நூறு ii. முன்நூறு iii. முன்னூறு

28. முற்பகல் 7.25 இதனை 24 மணித்தியால கடிகார முகத்தில் காட்டினால்
i. 19:25 ii. 7:25 iii. 07:25

29. செங்கோணம் உள்ள உருவைத் தெரிவு செய்க.



i. ii. iii.


30. 6 x 4 = 24 இந்த கணித செய்கைக்கு சமனான செயன்முறை எது?
i. 15 + 5 + 4 ii. 3 x 8 + 2 iii. 20 + 4 – 2

31. V + T இந்த இரண்டு உருக்களையும் ஒன்றின் மீது ஒன்று பொருத்தும் போது பெறப்படும் உரு யாது?

i. VT ii.  iii. 

32. வெற்றுக் கூட்டுக்கு வர வேண்டிய இலக்கம் எது?
i. 6
ii. 7
iii. 9

| | | |
|---|---|---|
| 8 | 4 | 7 |
| 2 | 9 | 8 |
| ? | 6 | 4 |

33.



i. 40 ii. 42 iii. 49


34. முக்கோண வடிவக் காணி ஒன்றின் ஒரு பக்கத்தில் இருந்து பார்க்கும் போது 5 தூண்கள் தெரிந்தன எனின் காணியைச் சுற்றி எத்தனைத் தூண்கள் இருக்கும்
i. 12 ii. 13 iii. 15

35. 70ன் அரைவாசியுடன் 60ன் அரைவாசியைக் கூட்டி 10ஐக் கழித்தால் பெறப்படுவது எவ்வளவு?
i. 75 ii. 95 iii. 130

36. ஒரு எண்ணின் 1/3 பங்கு 21 எனில் அவ்வெண் யாது?
i. 42 ii. 63 iii. 65

37. கீதா ஒரு வாரம் முழுவதும் தினமும் தந்தையிடம் ரூ. 50.00 ஐ பெற்றுக் கொண்டு அதில் ரூ. 30.00 ஐ செலவு செய்வாள். ஒரு வார இறுதியில் அவளிடம் மிகுதியாக உள்ள பணம் எவ்வளவு?
i. ரூ. 140.00 ii. ரூ. 350.00 iii. ரூ. 210.00

38. ஒரு இலக்கத்தை அதே இலக்கத்தால் பெருக்கினால் வரும் விடை 36. அந்த இலக்கத்தை 5 ஆல் பெருக்கினால் வரும் விடை யாது?
i. 30 ii. 25 iii. 20

39.



i. 31 ii. 27 iii. 15

40. பின்வருவனவற்றுள் லீப் வருடம் அல்லாதது எது?
i. 2000 ii. 2018 iii. 2020

(10ஆம் பக்கம் பார்க்க)

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -





# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான



திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

(09 ஆம் பக்கத் தொடர்)

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

## வினாத்தாள் ii இற்கான விடைகள் (29.04.2022)


I. 1) மோனலிசா
2) உண்மைத்தன்மை
3) காணப்படுகிறது
4) சித்திரங்கள், நிறங்கள்
5) பொய், அவலட்சணமான
6) இகழப்பற்ற

II. 7) மகிழ்ச்சியடைதல்
8) அகராதி
9) நீர்
10) சொல்லும்

III. 11) அழிந்தது
12) நாங்கள்
13) (i) ழு (ii) ல (iii) ழி (iv) ண
14) (i) "நீ இங்கே வா" என ஆசிரியர் அழைத்தார்.
(ii) சூரியன், சந்திரன், அக்கினி என்பன முச்சுடர்களாகும்.

IV. 15) (i) அவை என்ன?
(ii) நீங்கள் எங்கே வசிக்கின்றீர்கள்
16) (i) பிராஸ்பதிந்தா
(ii) மிரிஸ்

V. 17) (i) 2
(ii)



18) (i) 3 (ii) 5
19) 6
20) இருசமபக்க முக்கோணி
21) (i) இரண்டு தடவை (ii) ஐந்து தடவை
22) 7520
23)



24) 81
25) ரூ. 480.00
26) 30
27) 6
28) 10
29) +
30) 2

| | | | |
|---|---|---|---|
| 31) | 1 | 46) | 2 |
| 32) | 2 | 47) | 2 |
| 33) | 3 | 48) | 1 |
| 34) | 3 | 49) | 1 |
| 35) | 2 | 50) | 2 |
| 36) | 1 | 51) | 3 |
| 37) | 1 | 52) | 1 |
| 38) | 2 | 53) | 2 |
| 39) | 3 | 54) | 3 |
| 40) | 3 | 55) | 2 |
| 41) | 1 | 56) | 3 |
| 42) | 1 | 57) | 1 |
| 43) | 2 | 58) | 3 |
| 44) | 1 | 59) | 2 |
| 45) | 2 | | |

# அநீதிகளுக்கு எதிராக கிறிஸ்தவ மதத் தலைவர்கள் என்ற ரீதியில் குரல் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளோம்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

நாட்டில் எங்கெங்கெல்லாம் அநீதிகள் இடம்பெறுகின்றதோ அதற்கு எதிராக கிறிஸ்தவ மதத் தலைவர்கள் என்ற ரீதியில் குரல் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளோம்.எனவே எமது நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க இறைவழிபாடே தேவை என அருட்தந்தை ஜோன் ஜோசம் மேரி தெரிவித்துள்ளார்.

எனது குருத்துவப் பணியில் 54 வருடங்கள் கழிகின்றன, இக்காலத்தில் நான் பல துன்பியல்களையும், பல நல்ல விடையங்களையும் கண்டுள்ளேன். ஈஸ்ட்டர் குண்டுத்தாக்குதலின் பின்னர் கிறிஸ்த்தவ மதத் தலைவர்கள் வீதியில் பேரணியாகச் சென்றார்கள்.

எமது நாட்டில் இன்று நேற்றல்ல பல்லாண்டு காலமாக அரசியல் ரீதியாக பிரச்சினைகள் இருந்து வருகின்றன.தற்போதைய நெருக்கடியைத் தீர்ப்பதற்காக மதத்தலைவர்களின் அலோசனைகள் எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள தனியார் விடுதியில் வியாழக்கிழமை(05) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.




இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அநீதிகளுக்கு எதிராக எதிர்த்துப் போராட வேண்டும் என்பது எமது திருச்சபையின் கொள்கை. தற்போது அதுதான் எமது நாட்டில் நடைபெறுகின்றது. அநீதிகளுக்கு எதிராக மதத் தலைர்வகள் என்ற ரீதியில் நாங்களும் அமைதியான முறையில் அனைவருக்காகவும் குரல்கொடுக்க வேண்டும். தமிழர், சிங்களவர், இஸ்லாமியர், கிறிஸ்வர்கள் உள்ளிட்ட அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும்.எரிபொருள் இல்லை, உண்பதற்கு ஒன்றுமில்லை, பணமில்லை. இந்நிலையில் நாட்டில் சீனா போன்ற வெளிநாடுகளின் செல்வாக்கும் அதிகரித்துள்ளன. சீனா திபத் நாட்டைக் கைப்பெற்றி புத்த மதத்தை எடுத்துக் கொண்டதுபோல் இலங்கையையும் சீனா கைப்பறிவிடுமோ என்ற பயம் எனக்குள்ளது. எனவே எமது நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க இறைவழிபாடே தேவை என அவர் இதன்போது தெரிவித்தார்.

# தலைமைத்துவ பதவிகளிலுள்ள பெண்களை வலுப்படுத்தல்

கொட்டகலையில் பயிற்சி

**ஹற்றன் விசேட நிருபர்**

பெண் தலைமைத்துவம் குறைந்துள்ளதன் காரணமாக இன்று பெண்களின் உரிமைகள் மற்றும் அவர்களின் தேவைகள் புறக்கணிக்கப்பட்ட நிலையே காணப்படுகின்றது. குறிப்பாக எமது நாட்டில் 55 சதவீத பெண்கள் காணப்பட்டாலும் அவர்களின் 5 சதவீதமே சட்டமியற்றும் பாத்திரத்தினை ஏற்றுள்ளனர். இவ்வாறு சென்றவர்கள் கூட சாதாரண குடும்பங்களில் இருந்து சென்றவர்கள் அல்ல அவர்களின் பின்னணி காரணமாகவே அவர்கள் அந்த இடத்திற்கு வந்துள்ளனர்.

இந்நிலையில் மலையகப் பகுதியில் தலைமைத்துவ பாத்திரங்களில் பெண்களை வலுப்படுத்தும் நோக்கில் பெண் தலைமைத்துவ பயிற்சி செயலமர்வு ஒன்று பிரிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொட்டகலை பிரிடோ நிறுவனத்தின் அலுவலக மண்டபத்தில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்றது.



குறித்த செயலமர்வில் தலைமைத்துவ பாத்திரங்களை பெண்கள் ஏற்காததன் காரணமாக இவர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

அரசியல் ரீதியாக இவர்களின் பங்களிப்பு குறைவாக காணப்படுவதனால் இன்று பெண்களுக்கு ஏற்படும் அசாதாரண நிலைகளின் போது அவர்களுக்காக போதியளவு குரல் கொடுக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் இதனால் மலையகத்தில் மாத்திரமன்றி நாடு முழுவதிலும் பெண்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த வண்ணம் இருப்பதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டன.

பிரிடோ நிறுவனத்தின் செயத்திட்ட இணைப்பாளர் சந்திரசேகரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பெண்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# சமூக சேவை உத்தியோகத்தருக்கான போட்டிப்பரீட்சை நடைபெறவில்லை

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் சமூக சேவை உத்தியோகத்தருக்கான திறந்த போட்டிப்பரீட்சை விண்ணப்பம் கோரப்பட்டு இது வரை பரீட்சை நடைபெறவில்லை என விண்ணப்பதாரிகள் தெரிவிக்கின்றனர். கடந்த வருடம் (2021) போட்டிப் பரீட்சை தொடர்பில் விண்ணப்பம் கோரப்பட்ட நிலையில் தற்போது வரை ஒரு வருடம் கடந்த நிலையில் குறித்த சமூக சேவை உத்தியோகத்தர் நியமனம் தொடர்பிலான எவ்வித அறிவித்தல்களுமோ போட்டிபரீட்சை நடாத்துவது தொடர்பானஅறிவித்தல்களோ முன்வைக்கப்படவில்லை எனவும் பரீட்சார்த்திகள் தெரிவிக்கின்றனர்.

உரிய பரீட்சைக்காக விண்ணப்பித்து சுமார் ஒரு வருடம் கடந்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் நிலவும் வெற்றிடங்களை முன்வைத்து விண்ணப்பம் கோரப்பட்டாலும் பரீட்சை நடத்தப்படவில்லை .திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களில் திறந்த போட்டிப் பரீட்சைக்கே இவ்வாறு சமூக சேவை உத்தியோகத்தருக்கான விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்திற் கொண்டு குறித்த போட்டிப் பரீட்சையை நடாத்தி நியமனம் செய்யுமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.




கல்வி அமைச்சின் வழிகாட்டுதல்களுக்கு அமைவாக முஸ்லிம் அரச பாடசாலைகளில் தரம் 1 க்கு புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு ஏடு துடக்கி வைக்கும் வித்தியாரம்ப விழா நேற்று (05)அக்கரைப்பற்று அல்முனவ்வறா கனிஷ்ட கல்லூரியில் இடம்பெற்ற போது,... படம் அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்

# நாச்சியாதீவு குளத்திலுள்ள மீன்பிடி வலைகள் திருட்டு; மீனவர் கவலை

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுர மாவட்டத்தின் பாரிய நீர்த்தேக்கங்களில் ஒன்றான நாச்சியாதீவு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் மீன்பிடி வலைகளை திட்டமிட்டு திருடிச் செல்லும் இனந் தெரியாத கள்வர் கோஷ்டியொன்று திருடிவிட்டு செல்வதாக இங்குள்ள மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒவ்வொரு நாளும் பி.ப.6.00 மணிக்கு முன்பு மீன்பிடி வலைகளை குளத்தில் இட்டு, வல்லங்கள் பூட்டப்பட்டு மறுநாள் அதிகாலை 5.00 மணியளவிலேயே வல்லங்கள் திறக்கப்பட்டு பின்னர் மீன்களை பெற்றுக் கொள்வதற்காக இங்குள்ள மீனவர்கள் குளத்துக்குச் செல்வது வழக்கம். இந் நேரத்தை பயன்படுத்தியே மீன்பிடி வலைகளை நல்லிரவு நேரம் சென்று இக் கள்வர்கள் குழு திருடுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். சில நாட்களில் வலைகளில் அகப்பட்டுள்ள மீன்களையும் திருடிச் செல்லும் கல்வர்களும் இங்கு வந்து தமது கைவரிசையை காண்பிக்கின்றனர் எனவும் தெரிவிக்கின்றனர்.

மிக அண்மையில் தெமட்டாகம கிராமிய மீனவர்களின் மீன்பிடி வலைகள் திருட்டுப் போன சம்பவமும் இப் பகுதியில் இடம் பெற்றுள்ளதோடு, கலவாடப்படும் மீன்பிடி வலைகளை குறைந்த விலைக்கு வெளியில் சென்று இவர்கள் விற்பனை செய்வதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

DFCC வங்கி, யுஎஸ்எயிட் (USAID) இணைந்து

# பெண் தலைமைத்துவ தொழில் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பு



இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் எமது தேசத்தின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகும். அவை 45% வரையான தொழில் வாய்ப்புக்களை தோற்றுவிப்பதுடன், இலங்கையில் கிட்டத்தட்ட 75% வணிகங்களாக அவை காணப்படுகின்றன. அத்துடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52% வரையான பங்களிப்பையும் ஆற்றி வருகின்றன. எனினும், நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் துறையானது வங்கிகளிடம் இருந்து கடன் வசதிகளைப் பெறும்போது அடிக்கடி சவால்களுக்கு முகங்கொடுக்கின்றன. இது பொதுவாக இந்த வணிகங்களுக்கு போதுமான நீண்ட கால மற்றும் நம்பகமான செயல்பாட்டு சாதனைப் பதிவுகளை கட்டியெழுப்ப போதுமான நேரம் இல்லாததால், இத்துறையில், குறிப்பாக பெண்களுக்கு சொந்தமான மற்றும் அவர்களால் நிர்வகிக்கப்படுகின்ற நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் மத்தியில் அவர்களின் செயல்பாடுகளில் குறைபாட்டிற்கு வழிவகுக்கிறது. இந்த சவால்களைப் புரிந்து கொண்டு, இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் துறைக்கு உதவ முயல்வதன் மூலம், அனைவருக்கும் ஏற்ற வங்கியான DFCC வங்கி, பெண்களின் தலைமைத்துவத்துடனான நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு கடன் வசதிகளை வழங்குவதற்காக The Palladium Group ஆல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் USAID CATALYZE தனியார் துறை அபிவிருத்திச் செயற்பாட்டுடன் ஒரு முக்கிய கூட்டாண்மையை ஏற்படுத்தியுள்ளது. சமீபத்தில், இரு நிறுவனங்களுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் மூலமாக இந்த கூட்டாண்மை உத்தியோகபூர்வமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# மோசமான பொருளாதார நெருக்கடியில் பாகிஸ்தான்

சர்வதேச நாணய சபை எச்சரிக்கை



பாகிஸ்தானின் நிதித் துறை சாராத நிறுவனங்கள், எண்ணெய் விலை அதிகரிப்பு, உக்ரேனிய யுத்தம் மற்றும் கொவிட் பாதிப்பு ஆகியவற்றின் தாக்கம் காரணமாக தமது ஸ்திர நிலையை இழக்கலாம் என சர்வதேச நாணயசபை எச்சரித்துள்ளது. கடந்த வருடம் முதல் பாகிஸ்தான் பொருளாதார வளர்ச்சி மந்தமடைந்துள்ளதால் எரிபொருட்களின் விலையுடன் தானியங்களின் விலைகளும் அதிகரிக்கும் எனவும் இச்சபை தெரிவித்துள்ளதாக பாகிஸ்தானின் சாமா தொலைக்காட்சி நிலையம் செய்தி வெளியிட்டுள்ளது.

பெருந்தொற்றினால் ஏற்பட்ட நிதி அழுத்தங்கள் காரணமாக சிறிய வர்த்தக நிறுவனங்கள் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் இவை திவாலாகக் கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகவும் இது நாடு முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்றும் நாணய சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் காணப்படும் கொருளாதாரச் சவால்கள் தீர்மானிக்கப்பட முடியாதவையாக இருப்பதாகத் தெரவித்திருக்கும் அந்நாட்டின் நிதியமைச்சு, பணவீக்க அதிகரிபபு, வங்கிகளின் வைப்பு நிதியில் காணப்படும் தளர்வு, நிதித்துறையில் காணப்படும் உயர்மட்ட நிதித்தளர்வு, பொருளாதார வளர்ச்சி மந்தம் காரணமாக எதிர்காலம் கடினமாக இருக்கும் எனவும் எதிர்வு கூறியுள்ளது.

# உய்கர் முஸ்லிம்கள் மீது அடக்குமுறை

ஜேர்மனிய பாராளுமன்றம் சீனா மீது அழுத்தம்




சீனாவின் ஸின்ஜியாங் மாகாணத்தில் வாழும் உய்கர் முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டிருக்கும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஜெர்மனிய அரசு சீனாவின் மீது அழுத்தம் கொடுக்கவுள்ளதாகவும் இந்நிலைமை தொடர்பாக ஜெர்மனிய பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து பெர்லினில் உய்கர் சார்பான ஒரு ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இச் சந்திப்பில் சீனாவின் உய்கர் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர், எழுத்தாளர், ஆய்வாளர், அமெரிக்க சட்டத்தரணி என்போர் கலந்துகொண்டிருந்தனர். ஸின்ஜியாங் மாகாணத்தில் உய்கர்களுக்கு எதிரான சினாவின் அடக்குமுறைகள் மோசமடைந்து வருவதாகவும் அம்மகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் சித்திரவதை, மத ரீதியான கட்டுப்பாடுகள், கலாசார அழிப்பு, பலவந்தமான கருக்கலைப்பு மற்றும் மலடாக்குதல் என்பன நிகழ்ந்து வருவதாகவும் அம்மாநாட்டில் எடுத்துரைக்கப்பட்டது.

உய்கர் முஸ்லிம் இனக்குழு என்பது துருக்கிய பின்னணியைக்கொண்ட மத்திய மற்றும் கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் வசிக்கும் இனமாகும். இவர்கள் ஸின்ஜியாங் மாகாணத்தில் செறிவாக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் மீதே அடக்குமுறை பிரயோகிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# ரமழான்– ஓர் மீள்பார்வை கண்ணோட்டம்

ரமழான் மாதத்தை எதிர்பார்த்து அதனை அடைய வேண்டும் என்று ஆசித்து அதனை பயன்படுத்தி நன்மைகள் பலவற்றை அடைய வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருந்த போதே ரமழான் வேகமாக வந்து சேர்ந்தது. அந்த ரமழானை பயன்படுத்தி நோன்புகளை நோற்றோமா? அல் குர்ஆனுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றினோமா? பாவங்களுக்குரிய மன்னிப்பை கோரி அடைந்து கொண்டோமா? அடைந்து கொண்ட ரமழானில் பெற்றுக்கொண்ட நன்மைகளை பாதுகாத்துக் கொள்வதற்கான உபாயங்களை வகுத்துக் கொண்டோமா? இவற்றை மனதளவில் நினைத்துக் கொண்டிருந்த போதே வந்த வேகத்தைவிட வேகமாக அது எம்மை விட்டு சென்று விட்டது.

இந்த நிலையில் ரமழானில் இருந்த நிலையையும் இப்போது உள்ள நிலையையும் ஒப்பிட்டுப் பார்ப்போம். எம்மில் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா என்று சுய விசாரணை செய்வோம். தொழுதோம், இரவில் நின்று வணங்கினோம், தொழுகையில் கண்குளிர்ச்சியை கண்ணுற்றோம். அல்குர்ஆனை அதிகமதிகம் ஓதினோம், அதன் விளக்கத்தை பெற்று கருத்துகளை உணர முனைந்தோம். நோன்பு நோற்றோம், மனிதர்களின் பசியை உணர்ந்தோம். திக்ர் அவ்ராதுகளை செய்தோம், அதிகமாக துஆக்கள் செய்தோம், ஈமானின் சுவையை சுவைக்க முனைந்தோம்.

வறுமையை அஞ்சாது தர்மங்கள் செய்தோம், உறவுகளை பேணிக் கொண்டோம், இறைகட்டளைகளுக்கு கட்டுப்பட்டோம். ஈமானிய சுவையை சுவைத்தோம். நோன்பின் யதார்த்தத்தை உணர்ந்து கொண்டோம், கண்ணீர் வடித்து இறை நெருக்கத்தை அடைய முயற்சித்தோம், ஸஹர் நேரத்திலே இறைவனை நெருங்க முனைந்தோம், அடுத்த மனிதர்களின் பசியை உணர்ந்தோம்.

இப்போது ரமழான் சென்று விட்டது. தொழுகையை விட்டுவிட்டு பொடுபோக்காக இருந்தவன் மீண்டும் அதனை விட்டுவிட்டான் என்றால் ஏற்கனவே புகைத்தவன் புகைத்தலை விட்டு ஒதுங்கியிருந்து விட்டு மீண்டும் அதனை தொடங்கியிருந்தால், மது அருந்துபவன் மீண்டும் தனது வேலையை நோன்பை தொடர்ந்து தொடங்கியிருந்தால், வட்டிக்கு சாப்பிட்டவன் அதனை மீண்டும் ஆரம்பித்திருந்தால், மோசமான, விரசமான காட்சிகளை பார்த்து ரசித்தவன் அதனை விட்டொதுங்கியிருந்து விட்டு மீண்டும் ஆரம்பித்திருந்தால், எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்தாத நோன்பு பசியோடும் தாகத்தோடும் இருந்த வெற்று சம்பிரதாய நோன்பா? இத்தகையதொரு நோன்பு தேவை தானா? நோன்பின் நோக்கங்களை உணர்ந்து அதனை அடையும் விதமான உண்மையான நோன்பை நாம் நோற்றோமா?

நாம் ரமழானை சார்ந்தவர்களாக இருந்தோமா? அல்லது படைத்த இரட்சகனை சார்ந்து இருந்தோமா?

ரமழான் சென்று விட்டது, இரட்சகன் தொடர்ந்திருக்கிறான். அவன் மரணித்து விடவில்லை. ரமழானில் செய்த நற்கிரியைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று ஆறு மாதங்கள் ஸஹாபாக்கள் கையேந்தினார்கள். ரமழானில் செய்ததை தொடர்வது அங்கீகாரத்தின் ஒரு அடையாளமாகும். இவ்வகையில் சிந்தனைக்காக சில முக்கிய விடயங்களின் பால் இச்சமயம் கவனத்தை ஈர்ப்பது பயன்மிக்கதாக இருக்கும்.

### 1. ரமழானில் இருந்து பெற்ற பயன்கள் என்ன?

ரமழானின் அழகான பகல் பொழுதுகளையும் மனமான இரவுகளையும் இழந்து விட்டோம். நாம் அல் குர்ஆனுடனான தொடர்புகளை ரமழானில் வலுப்படுத்திக் கொண்டோமா? இறை செய்திகளை அறிந்து உணர்ந்து தாக்கமுற்றோமா? பொறுமையுடன் இருக்க பழகினோமா? இறையச்சத்தை ஏற்படுத்திக் கொண்டோமா?

ஆன்மாவை பலப்படுத்திக் கொண்டோமா? நாட்டசக்தியை பலப்படுத்திக் கொண்டோமா? மோசமான பழக்கவழக்கங்களை களைந்து தூய்மை அடைந்தோமா? கருணை உணர்வினை ஏற்படுத்திக் கொண்டு தர்மங்களை கொடுத்தோமா? அல்லாஹ்வின் மன்னிப்பை பெற்றுக் கொண்டோமா? நரக விடுதலையை அடைந்து கொண்டோமா?

இப்படியான பல கேள்விகள் பிறக்கின்றன. நோன்பு ஒரு ஈமானிய பாசறை. இது ஆன்மாவை புடம்போடக்கூடிய சந்தர்ப்பம். மின்கலத்திலே (Bettary) மின்னேற்றம் (Charge) ஏற்றப்பட்டு பல மணி நேரங்கள் பயன்படுத்துவது போன்று தான் நோன்பும் ஆகும். அது ஏனைய மாதங்களில் சிறப்பாக செயற்படுவதற்கான சிறந்த பயிற்சியை வழங்குகிறது. இதனை நாம் உணர்ந்து கொள்வோம், இது மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான ஒரு பாடசாலை. எமது செயல்பாடுகள், நடத்தைகள், பழக்கவழக்கங்கள், பண்பாடுகளை மாற்றிக் கொள்வோம்.

### 2. நூலை நூற்று அது நன்கு முறுக்கேறிய பிறகு அதனை துண்டுதுண்டாக பிரித்து விட்டவள் போன்று ஆகிவிட வேண்டாம்.

**(சூரா: நஹ்ல் 92)**

ரமழானிலிருந்து நாம் உண்மையாக பயன் பெற்றிருந்தால் சில பண்பு மாற்றங்கள் எம்மிடம் வந்திருக்கும். சிரமப்பட்டு நூலை நூற்று அது முறுக்கேறிய நிலையில் அதனை பிரித்து சிதறடித்து சின்னாபின்னமாக்குவது புத்திசாலியின் பண்பல்ல.

நோன்பு முடிந்த கையோடு மீளவும் பாவச்செயல்களை நோக்கி செல்வது அல்லது நல்ல காரியங்களை செய்யாது இறைகட்டளைகளை புறத்தொதுக்குவது நூற்ற நூலை பிரித்து விடுவது போன்றது தான். ரமழானில் மாத்திரம் அல்லாஹ்வை அறிந்து, புரிந்து, நெருங்கி, இணைந்து, பிணைந்து இருந்துவிட்டு அது சென்ற கையோடு அல்லாஹ்வை மறப்பவன் எவ்வளவு மோசமானவன்.

ரமழானில் ஸுன்னத்தான தொழுகைகளுக்காக விளித்திருந்து விட்டு ரமழான் சென்றவுடன் பர்ளுகளையே புறக்கணிப்பது, ரமழானில் பாவமன்னிப்பை கோரி அழுது பிரலாபித்து விட்டு ரமழான் முடிந்தவுடன் ஏமாற்றுவது, மோசடி செய்வது, பதுக்குவது, கலப்படம் செய்வது, வாக்களித்து விட்டு மோசடி செய்வது, பொய் பேசுவது, ஏமாற்றுவது, மாறுசெய்வது... இப்படியான மனிதனுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளை வேண்டுமென்றே தவிர்ந்து கொள்வது நிறைய நன்மைகளை இழப்பதற்கோ இழப்பதற்கு நன்மைகள் இல்லாத போது பெரும் பாவசுமைகளை சுமப்பதற்கோ காரணமாய் அமையலாம்.

### 3. நீங்கள் மரணிக்கும் வரை அல்லாஹ்வை வணங்குங்கள்

**(சூரா: ஹிஜ்ர் 99)**

ஒரு நல்ல முஃமின் ரமழான் என்ற இடைக்காலத்தில் மாத்திரம் அல்லாஹ்வை வணங்கி அதன் பின்னர் விட்டுவிட மாட்டான். அவன் ஒரு நல்ல விடயத்தை தொடராக செய்வான். மரணமடையும் வரை அதில் தொடர்ந்திருப்பான்.

'நீங்களும் உங்களோடு பாவமன்னிப்பு செய்தவர்களும் உங்களுக்கு ஏவப்பட்டது போன்றே நிலையாக உறுதியாக இருங்கள். வரம்பு மீறிவிடாதீர்கள். அல்லாஹ் உங்களை பார்த்துக் கொண்டிருக்கிறான் (சூரா: ஹூத் 112)

'நீங்கள் அவனை நோக்கி உறுதியாக இருங்கள், அவனிடமே மன்னிப்பு கோருங்கள் (சூரா: புஸ்ஸிலத் 06)

பர்ளான நோன்புகள் போன்று ஸுன்னத்தான நோன்புகளை நோற்கலாம். கடமையான தொழுகைகள் போன்று ஸுன்னத்தான தொழுகைகளை தொழுது வரலாம்.

ஸகாத்துல் பித்ருக்கு பதிலாக ஸதகாக்கள் கொடுக்கலாம். அல் குர்ஆனை ஓதுவதும், விளங்குவதும், குர்ஆனின் படி வாழ்வை மாற்றியமைப்பதும், குர்ஆனின்பால் மனிதகுலத்தை அழைப்பதும் நோன்புடன் மாத்திரம் சுருக்கிக் கொள்ள வேண்டியவை அல்ல.

### 4. இஸ்திக்பாரை பேணிக் கொள்வோம், நன்றியுணர்வுடன் நடந்து கொள்வோம்

நன்மையான காரியங்களை செய்யும் போது விடுபட்ட குறைகளுக்காக மன்னிப்பு கோருவதும் குறித்த நன்மைகளை செய்ய அவகாசம் கிடைத்தமைக்காக நன்றி பாராட்டுவதும் மிக முக்கியமான பண்புகளாகும்.

உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்ககள், தனது கவர்னர்களுக்கு கடிதம் எழுதுவார்கள். 'நோன்பு முடிவடையும் போது அதிகமாக இஸ்திக்பார் செய்யுங்கள், நிறைய கொடை கொடுங்கள். உங்கள் மூதாதையர்களான ஆதம் (அலை) 'எனது இறைவா எமக்கு நாமே அநீதி இழைத்துக் கொண்டு விட்டோம், நீ எம்மை மன்னித்து அருள்புரியா விட்டால் நாம் நஷ்டவாளிகளாகி விடுவோம்' என்றார்கள். இப்றாஹீம்(அலை) அவர்கள் 'மறுமைநாளில் எனது பாவங்கள் மன்னிக்கப்பட்டிருப்பதுதான் எனது ஆசை' என்றார்கள். மூஸா (அலை) அவர்கள் 'எனக்கு நானே அநீதி இழைத்து விட்டேன். என்னை மன்னித்துவிடு' என்றார்கள் துன்னூன் அவர்கள் 'நீ தூய்மையானவன், நான் ஒரு அநியாயக்காரனாகி விட்டேன்'என்றார்கள் என்றபடி கடிதம் எழுதுவார்கள்.

ஆகவே ரமழான் சென்றுவிட்டது. ஆனால் அல்லாஹ் இருக்கிறான். புனிதமான மாதங்கள், தினங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. புனித இடங்களும் காணப்படுகின்றன. அவற்றை சிறப்பாக பயன்படுத்த முனைவோம்.

**யூ.கே. ரமீஸ்**
எம்.ஏ (சமூகவியல்)

ஆலமுல் இஸ்லாம்
மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# சோதனைகள் குறித்து ஹன்பல் (ரஹ்)

வாழ்க்கையில் பல துன்பங்களையும், சோதனைகளையும் எதிர்கொண்டவர் தான் இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் ஆவார். அதனால் அவர்களிடம் சோதனைகள் குறித்து வினவப்பட்ட சமயம், உங்கள் வாழ்க்கைப் பாதையில் சோதனைகள் தடைகளாக இருக்கவில்லையா? எனக்கேட்கப்பட்டது. அதற்கு இமாம் ஹன்பல் (ரஹ்) அவர்கள், அல்லாஹ்வின் மீது சத்தியமாக, துன்பங்கள் ஏற்படவில்லை என்றால் நான் வழியிலேயே சந்தேகப்பட்டு நின்றிருப்பேன். அல்லாஹ் உம்மை ஏதாவது ஒன்றைக்கொண்டு சோதிப்பதில்லை, அது உனக்கு நன்மையாக மாறுவதற்காகவே தவிர. அதை நீ எதிர்மறையாகக் கருதினாலும் சரியே. உன் உள்ளத்தை அமைதிப்படுத்திக் கொள்.

நபி யூசுப்(அலை) அவர்களை எடுத்துப் பாருங்கள். அவர்களுக்கு சோதனை ஏற்படாமல் இருந்திருந்தால் அவர் தனது தந்தையின் செல்லப்பிள்ளையாக அவரருகேயே இருந்திருப்பார். யூசுப் (அலை) அவர்களுக்கு ஏற்பட்ட சோதனைகளின் காரணமாக அன்னார் எகிப்து நாட்டின் முக்கிய அமைச்சராக மாறினார்கள்.

அதேபோன்று மூஸா (அலை) அவர்கள, தம் உயிருக்கு ஆபத்தான நிலையில் உதவி செய்வோர் யாருமின்றி நாட்டை விட்டு வெளியேறிச் சென்றார்கள். ஆனால் தாயகத்திற்கு திரும்பி வரும் போது அன்னார் நபியாகவே வந்தார்கள்.

மேலும் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள், இறை நிராகரிப்பாளர்களின் எதிர்ப்பு, துன்புறுத்தல்கள் காரணமாக தாம் பெரிதும் நேசித்த மக்காவைவிட்டு பெரும் மனவேதனையுடன் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள். என்றாலும் சொற்ப காலத்தில் மக்காவை வென்றெடுத்தவராக மக்காவுக்குள் அன்னார் பிரவேசித்தார்கள்.

இவ்வாறான இந்நிகழ்வுகளை எல்லாம் அறிந்த பின்னும் மனஅழுத்தத்துடன் இருப்பீரா? மன உறுதியுடன் இருங்கள். உங்களின் பொறுமைக்குப்பின் அழகான பல நற்செய்திகள் உங்களுக்காக காத்துக்கிடக்கின்றன. அவைகள் இப்பொழுது நீங்கள் அனுபவிக்கும் துன்பத்தினால் ஏற்படும் வேதனைகளை மறக்கடிக்கச் செய்யும்' என்றுள்ளார்ககள்.

சோதனைகள் குறித்த இமாம் ஹன்பல் (ரஹ்) அவர்களின் கூற்றுக்கள் முற்றிலும் உண்மையானவையே. அல்லாஹ் மனிதனை சோதிப்பதானது அவனுக்கு நன்மைகளை நாடி இருப்பதற்காகவே அன்றி வேறில்லை. அதனால் சோதனைகளுக்கு முன்பாக பொறுமையோடும் சகிப்புத்தன்மையோடும் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப அல்லாஹ்வை சார்ந்திருக்கும் போது அவன் நாடி இருக்கும் நன்மைகளையும் அருள்களையும் மனிதனால் அடைந்து கொள்ள முடியும்.

# அல் குர்ஆனின் ஒளியில் அல்லாஹ்வின் படைப்புகள்

அல்லாஹ் மூன்று வகையான படைப்புகளை தன் ஆற்றலின் மூலமாக படைத்தான். அவற்றில் முதல் வகை படைப்புகளாக சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் மற்றும் விண்வெளியில் சுற்றிவரும் பிற கோள்கள் விளங்குகின்றன. அடுத்து மலக்குகளும் ஜின்களும் உள்ளனர். மலக்குகளை ஒளியினாலும், ஜின்களை கொழுந்து விட்டு எரியும் நெருப்பு சுவாலைகளாலும் இறைவன் படைத்தான்.

மூன்றாவது, உயிரினங்கள். இதில் மனிதன், விலங்குகள், பறவைகள், தாவரங்கள் என பூமியில் மட்டுமின்றி இந்த பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களையும் அவன் படைத்தான்.

இந்த மூன்று படைப்புகளும் இறைவனின் கட்டளைப்படி அவனை வணங்கி, தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்கின்றன. இதன்படி, அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து, அவனை எந்த நிலையிலும் வணங்குபவர்களாகவும், தொடர்ந்து அவனைப் புகழ்ந்தவர்களாகவும் மலக்குகள் உள்ளனர். அந்த மலக்குகளில் சிறந்த மலக்குகளை அல்லாஹ் தேர்ந்தெடுத்து, சில குறிப்பிட்ட பணிகளை அவர்களிடம் கொடுத்து, அதனை செய்யுமாறு கட்டளையிட்டுள்ளான்.

அந்த வகையில் ஜிப்ரில் (அலை) அவர்கள் நபிமாருக்கு வஹியை (இறைச்செய்தியை) அறிவிக்கும் பணியை செய்தார். மனிதர்களின் உயிரை கைப்பற்றுவதற்காக இஸ்ராயீல் (அலை) அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். மறுமைநாள் ஏற்படுவதை அறிவிக்க சூர் என்ற குழல் ஊதுபவராக இஸ்ராபீல் (அலை) அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். காற்று மழையை கட்டுப்படுத்துபவராக மீக்காயீல் (அலை) அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அன்றாடம் மனிதன் செய்யும் நன்மை தீமைகளை எழுதும் பணிக்காக கிராமுன், காத்திபன் என்ற மலக்குகளும், ஒரு மனிதன் மரணித்த பின் மண்ணறையில் அவனிடம் கேள்வி கேட்கும் பணிக்காக முன்க்ர், நக்கீர் என்ற மலக்குகளும் நியமனம் பெற்றுள்ளனர்.

மலக்குகளைத் தொடர்ந்து அல்லாஹ் ஜின்களை படைத்தான். ஜின்களின் தலைவனாக இப்லீஸ் என்ற ஜின்னை நியமித்து, அவனுக்கு பல சிறப்பு அம்சங்களைக் கொடுத்தான்.

ஜின்களைத் தொடர்ந்து, அவன் முதல் மனிதரான ஆதமை களிமண்ணினால் படைத்தான். அவரின் வழித்தோன்றலாய் ஆண்பெண் கொண்ட மனித இனத்தை உருவாக்கினான். எல்லா மலக்குகளையும், ஜின்களையும் மனிதனுக்கு சிரம் பணிந்து வணங்குமாறு அல்லாஹ் கட்டளையிட்டான்.

அல்லாஹ்வின் ஆட்சியின் கீழ் இருந்த போதிலும், தன் கர்வத்தின் காரணமாக இதை ஏற்க இப்லீஸ் மறுத்தான். இதையடுத்து, அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகி சொர்க்கத்தை விட்டு தூக்கி எறியப்பட்டான்.

இது தொடர்பில் அல் குர்ஆன்,

**'காய்ந்தபின் கன் கன் என்று சப்தம் கொடுக்கக்கூடிய பிசுபிசுப்பான களிமண்ணால், நிச்சயமாக நாமே உங்கள் மூலப் பிதாவாகிய முதல் மனிதனைப் படைத்தோம்'**

**(அல் குர்ஆன் 15:26).**

**'அதற்கு முன்னதாக ஜின்களை கொடிய உஷ்ணமுள்ள நெருப்பிலிருந்து படைத்தோம்'**

**(அல் குர்ஆன் 15:27)**

**'அவ்வாறே வானவர்கள் அனைவரும் அவருக்கு மரியாதை செலுத்த சிரம் பணிந்தார்கள், இப்லீஸைத் தவிர. அவன் சிரம் பணிந்தவர்களுடன் சேர்ந்து சிரம் பணியாது விலகிக் கொண்டான்'**

**(அல் குர்ஆன் 15:30,31).**

**'அதற்கு உமது இறைவன் இப்லீஸை நோக்கி, இப்லீஸே! சிரம் பணிந்தவர்களுடன் சேர்ந்து நீயும் சிரம் பணியாத காரணமென்ன? என்று கேட்டான்'**

**(அல் குர்ஆன் 15:32)**

**'அதற்கு அவன், காய்ந்த பின் சப்தம் கொடுக்க கூடிய பிசுபிசுப்பான களிமண்ணால் நீ படைத்த மனிதனுக்கு, நெருப்பால் படைக்கப்பட்ட நான் சிரம் பணிய தயாரில்லை. ஏனென்றால் நான் அவனை விட மேலானவன் என்று கூறினான்.**

**(அல் குர்ஆன் 15:33).**

தான் என்ற கர்வம், இப்லீஸை அழிவுப் பாதையில் தள்ளியது. இறைக்கட்டளைக்கு மாறு செய்ததால் சைத்தான் என்ற பெயர் அவனுக்கு கிடைத்தது. மனிதர்கள் போன்றே ஜின் வர்க்கத்திலும் நல்லவர்கள், கெட்டவர்கள் உண்டு. மனிதர்களுக்கென பூமியை இருப்பிடமாக படைத்த இறைவன் ஜின்களுக்கென இருப்பிடம் எதனையும் படைக்காமல் மரங்களிலும், மலைகளிலும், வானவெளிகளிலும் சஞ்சரிக்க கூடியதாக அமைத்தான்.

அதே சமயம் மனிதனை விட ஜின்களை அதிக ஆற்றலும், சக்தியும் கொண்டவர்களாக இறைவன் படைத்தான். காற்று, ஒளியை விட மிக விரைவில் தான் விரும்பிய இடங்களுக்குச் செல்லும் ஆற்றலை அவர்களுக்கு அல்லாஹ் அளித்திருந்தான்.

மூஸா (அலை) அவர்கள் காலத்திலும், சுலைமான் (அலை) அவர்கள் காலத்திலும் ஜின்கள் மனிதர்களுக்கு கட்டுபட்டவர்களாகவும், அவர்கள் இடும் கட்டளைக்கு அடி பணிந்தவர்களாகவும் இருந்தனர்.

மூஸா (அலை) அவர்கள் காலத்தில் பரவலாகவும், வெளிப்படையாகவும் ஜின்கள் பற்றிய விவரங்களை மக்கள் அறிந்திருந்தனர். ஆனால், ஜின்களை பயன்படுத்தி தங்கள் எதிர்காலத்தை அறிந்து கொள்ளவே பலரும் முயன்றனர். இறுதியில் அவர்களை தெய்வங்களாக வணங்கவும் முற்பட்டனர். இறை சக்தியில்லாத ஒன்றுக்கு இறைவன் அந்தஸ்தை கொடுத்து இணை வைத்தனர். அதனை அல் குர்ஆன் மிக கடுமையாக கண்டித்தது.

**'எங்கள் இறைவனே, நீ மிக பரிசுத்தமானவன். நீதான் எங்கள் பாதுகாவலன். மாறாக அவர்கள் ஜின்னை வணங்கி கொண்டிருந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள், அந்த ஜின்களையே நம்பிக்கை கொண்டும் இருந்தார்கள் என்று வானவர்கள் கூறுவர்' (அல் குர்ஆன் 34:41)**

ஜின்களிலும் அல்லாஹ்வை அறிந்து கொண்ட நல்லவர்களும், மனித இனத்தை கெடுக்கும் தீமைகளைச் செய்யும் தீயவர்களும் இருந்தனர். அந்த நல்லவர்கள், திருக்குர்ஆன் வசனங்களை செவியுற்று தன் இனத்தாருக்கு அறிவுரை வழங்கியதாகவும் திருக்குர்ஆன் இவ்வாறு அறிவிக்கிறது:

**'நபியே! இந்த குர்ஆனை கேட்கும் பொருட்டு ஜின்களில் சிலரை நாம் உம்மிடம் வருமாறு செய்து, அவர்கள் வந்த சமயத்தில், அவர்கள் தங்கள் மக்களை நோக்கி, நீங்கள் வாய்பொத்தி இதைக் கேட்டுக் கொண்டு இருங்கள் என்று கூறினார்கள். இது ஓதி முடிவு பெறவே தங்கள் இனத்தாரிடம் சென்று அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்ய முற்பட்டனர்.**

**(அல் குர்ஆன் 46:29)**

அதுமாத்திரமல்லாமல், அல் குர்ஆன் உண்மையான வேதம், அதன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் என்று ஜின்கள் தன் இனத்தாருக்கு அறிவுரை வழங்கியுள்ளன.

**'எங்கள் இனத்தாரே, நிச்சயமாக நாங்கள் ஒரு வேதத்தை செவியுற்றோம். அது மூஸாவிற்கும் பின்னர் அருளப்பட்டிருக்கிறது. அது தனக்கு முன்னுள்ள வேதத்தையும் உண்மைப்படுத்துகிறது. அது சத்தியத்திலும் நேரான வழியிலும் செலுத்துகிறது' (அல் குர்ஆன் 46:30)**

**'எங்கள் இனத்தாரே அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவர்களுக்குப் பதில் அவரை நம்பிக்கை கொள்ளுங்கள். உங்கள் பாவங்களை அல்லாஹ் மன்னித்து விடுவான். துன்புறுத்தும் வேதனையிலிருந்து உங்களை காப்பாற்றுவான்' (அல் குர்ஆன் 46:31)**

அல் குர்ஆனை ஏற்றுக்கொண்டு, அதன்படி நடந்து, நல்ல செயல்களைச் செய்யும் ஜின்கள் மற்ற ஜின்களுக்கு இந்த அறிவுரைகளை வழங்கி அல் குர்ஆனை ஏற்றுக் கொண்டு, நேர்வழியில் வருமாறு வேண்டின. ஜின்கள் அல்லாஹ்வை ஈமான் கொண்ட நிகழ்வு சூரா அல்ஜின் என்ற அத்தியாயத்தில் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே அல்குர்ஆனின் ஒளியில் படைப்புகளை அறிந்து கொள்வோம்.

**அப்துல்லாஹ்...**

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# கிழக்கின் குரல்



# பொத்துவில் நகரில் அரச ஒசுசலவை திறக்குமாறு மக்கள் கோரிக்கை

ஒலுவில் விசேட நிருபர்

பொத்துவில் நகரில் அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் (அரச ஒசுசல) கிளை ஒன்றினை திறக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரச ஒசுசல கிளை ஒன்று இல்லாமையினால் தமக்குத் தேவையான மருந்துகளை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

பொத்துவில், லாகுகல, பாணம,கோமாரி ஆகிய பிரதேசங்களில் சுமார் 70 ஆயிரத்திற்கு மேற்பட்ட மூவின மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் அவர்களுக்கு தேவையான மருந்து வகைகளை பெருமளவில் தனியார் மருந்து விற்பனை நிலையங்களிலேயே கொள்வனவு செய்து வருகின்றனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதோடு, அவசரத் தேவைகளுக்கு மருந்துகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு ஆளாகியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

நோயாளிகள் அரச ஒசுசலவில் மருந்தைக் கொள்வனவு செய்வதற்கு சுமார் 40 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள அக்கரைப்பற்று, நிந்தவூர் ஆகிய பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் நோயாளர்கள் பல அசௌகரிகங்களை எதிர்கொள்வதோடு பொருளாதார ரீதியாக பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தும் பொத்துவில் பிரதேசத்தில் அரச ஒசுசல திறக்காமையையிட்டு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பதவியேற்பு



றொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான பி.எச்.என்.ஜயவிக்ரம தமது கடமைகளை நேற்று உத்தியோகபூர்வமாக மாவட்ட செயலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

திருகோணமலை மாவட்டம் என்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாவட்டமாகும். பல்லினங்கள் மற்றும் பல மொழிகளை பேசும் மக்களை கொண்ட மாவட்டமாகும். நாடு அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் தமக்கு இந்நியமனம் கிடைக்கப்பெற்றுள்ளது. தமக்கு வழங்கப்பட்ட இந்நியமனத்திற்கான பொறுப்புக்களை இன, மத, மொழி வேறுபாடின்றி செயலாற்றவுள்ளதாக இதன் போது அரசாங்கஅதிபர்தெரிவித்தார்.

சிறிஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வியாபார நிருவாகமாணி(Bsc Business Administration) விசேட பட்டமாக ஆரம்ப பட்டத்தை பூர்த்தி செய்த இவர் Master of public Management பட்டத்தை இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவனத்திலும், Master of Applied Economics பட்டப்பின் பட்டத்தை பேராதனை பல்கலைக்கழகத்திலும் பூர்த்தி செய்துள்ளார்.

பிரதமர் அலுவலகத்தின் உதவி செயலாளர், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதி கட்டுப்பாட்டாளர், கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் தொழில் முயற்சிகள் ஊக்குவிப்பு திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர், மத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் ஆணையாளர், மத்திய மாகாண விவசாயம், சிறிய நீர்ப்பாசனம், கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி திணைக்களத்தின் செயலாளராகவும் கடமையாற்றி இவர் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட முன்னர் மத்திய மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம்,சமூக நலன்புரி,நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை அமைச்சின் செயலாளராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூர் பஸ்தரிப்பு நிலையத்தின் அவலம்

மாளிகைக்காடு குறூப் நிருபர்




நிந்தவூர் பிரதேச சபைக்குட்பட்ட அக்கரைப்பற்று , கல்முனை பிரதான வீதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பயணிகள் ஓய்வு பஸ்தரிப்பு நிலையத்தை சூழ புற்களும் பூண்டுகளும் வளர்ந்து பற்றைக் காடாக காட்சியளிப்பதுடன் அருகில் குப்பை கூளங்கள் நிறைந்துள்ளதுடன் துர்நாற்றமும் வீசுகின்றது.

இப் பயணிகள் ஓய்வு பஸ்தரிப்பு நிலையம் வயலோரத்திற்கு அண்மையில் காணப்படுவதால்

பாம்பு பூச்சிகளின் நடமாட்டமும் அதிகமாகவே காணப்படுகின்றது.

மழையிலும் வெயிலிலும் பஸ் வரும் வரை ஒதுங்கும் பயணிகள் பயத்தினால் பஸ்தரிப்பு நிலையத்திற்கு வெளியிலேயே காத்திருக்க வேண்டியுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்துமாறு பயணிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



அட்டாளைச்சேனை அல் முனீரா பெண்கள் உயர் பாடசாலையில் வித்தியாரம்ப விழா பிரதியதிபர் ஓ.எல்.எம். றிஸ்வான் தலைமையில் நேற்று (05) நடைபெற்றது.விழாவுக்கு அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.அம்ஜத்கான் பிரதம அதிதியாகவும், பாடசாலையின் அதிபர் ஏ.சீ.நியாஸ் ,ஆசிரிய ஆலோசகர்களான எஸ்.எல்.மன்சூர்,ஏ.எல்.எம்.யூசுப் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். படம் பாலமுனை தினகரன் நிருபர்

# டெங்கு நுளம்பு பரவும் இடங்களை துப்புரவு செய்யும் பணி



மட்டக்களப்பு விசேட நிருபர்

மட்டக்களப்பில் டெங்கின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் மட்டக்களப்பு மாநகரசபையினரால் டெங்கு நுளம்பு பரவும் இடங்களை இனங்கணடு; சுற்றாடலை துப்புரவு செய்யும் பணி நேற்று (05) மட்டக்களப்பின் இதயமெனக் கருதப்படும் அரசடி வட்டாரத்தின் பயனியர் வீதியருகில் முகாமைத்துவம் இன்றி காணப்பட்ட கழிவுகள் துப்புரவு செய்யப்பட்டன.


கோட்டைமுனை, அரசடி மற்றும் தாமரைக்கேணி பிரதேச சுகாதார மேற்பார்வையாளர் எஸ்.மனோகரனின் வழிகாட்டலில் மட்டக்களப்பு சுற்றாடல் அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.கோகுலன், சுகாதார நிலையியற் குழுவின் உறுப்பினர் சிவம் பாக்கியநாதன், பயனியர் விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர்கள் மற்றும் மாநகரசபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் கலந்து கொண்டு சுற்றாடலை துப்பரவு செய்தனர்.

பயனியர் விளையாட்டுக் கழகத்தின் வளாகத்தினுள் வளர்ந்திருந்த புற்செடிகள், வீசப்பட்டிருந்த பிளாஸ்டிக், கண்ணாடிப் போத்தல்கள், பொலித்தீன் கழிவுகள் சேகரிக்கப்பட்டு தரம் பிரிக்கப்பட்டு கழிவுகளை முகாமைத்துவம் செய்யும் திருப்பெருந்துறை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

நகரில் உள்ள மக்களுக்கு நாளாந்தம் கழிவுகளை முகாமைத்துவம் செய்யும் முறைமை தெரிவிக்கப்பட்டும் அதைக் கடைப் பிடிக்காமல் தொடர்ந்து எழுந்தமானமாக கழிவுகளை சுற்றாடலில் வீசுவதால் எமது நாளாந்த பணிகளை முகாமை செய்வது பெரும் சவாலாக உள்ளதாக சுகாதார மேற்பார்வையாளர் எஸ். மனோகரன் தெரிவித்தார்.

# பொத்துவிலில் கஜமுத்துக்களுடன் ஒருவர் கைது





பெரியநீலாவணை விசேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அறுகம்பை பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் கஜமுத்துக்களை விற்பனை செய்ய முற்பட்ட ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் இரவு (04) கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்று முன்தினம் (04) இரவு அறுகம்பை டொப் ரென் வீதியிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் விற்பனைக்காக எடுத்து வரப்பட்ட போது குறித்த பகுதியை சுற்றி வளைத்த விசேட அதிரடிப்படையினர் சூட்சுமமான முறையில் சந்தேகநபருடன் உரையாடி கைது செய்தனர். விசேட அதிரடிப் படையினரின் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் வருண ஜயசுந்தர, அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.ஆர் சேனாதிரா ஆகியோரது அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட கட்டளை அதிகாரி டி.சி வேவிடவிதான வழிகாட்டலில் சோதனை நடவடிக்கையை



மேற்கொண்டனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து யானை கஜ முத்துக்கள் (07) சிற்பி முத்து. (06 ) என்பன மீட்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கில் முஸ்லிம் பாடசாலைகளில் மாணவர்களின் வரவில் வீழ்ச்சி

மாளிகைக்காடு குறூப் நிருபர்

2022 ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக கடந்த புதன்கிழமை பாடசாலை ஆரம்பமான போது கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவாக காணப்பட்டதாக பாடசாலை அதிபர்கள் தெரிவித்தனர்.

புனித ரமழான் நோன்பு விடுமுறைக்காக பெப்ரவரி மாத இறுதியில் முஸ்லிம் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

பாடசாலைக்கு ஆசிரியர்கள் சமுகமளித்திருந்த போதிலும் மாணவர்களின் வரவில் பாரிய வீழ்ச்சி காணப்பட்டதால் கல்வி நடவடிக்கைகளை தொடர முடியாமல் சில பாடசாலைகளிலிருந்து நேரகாலத்துடன் மாணவர்கள் வீடு செல்வதனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

# இறால்குழி பாலத்திலிருந்து ஆணின் சடலம் மீட்பு

கந்தளாய், மூதூர் தினகரன் நிருபர்கள்

மூதூர் பொலிஸ் பிரிவிலுள்ள இறால்குழி பாலத்திலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவிலுள்ள கடற்கரையோரத்தில் மீனவர் ஒருவரின் சடலமொன்று புதன்கிழமை (04) மாலை மீட்கப்பட்டுள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் மூதூர் இறால்குழி பகுதியைச் சேர்ந்த சூசப்பிள்ளை ஜெயராம் வயது (25) என பொலிஸார் தெரிவித்தனர்.

கடலுக்கு மீன்பிடிப்பதற்காக கடந்த திங்கட்கிழமை மாலை சென்ற குறித்த இளைஞன் வீடு திரும்பவில்லை. இதனால் அவரது குடும்ப உறவினர்கள் மூதூர் பொலிஸ் நிலையத்தில் செவ்வாய்கிழமை (03) முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்நிலையில் கடலுக்குச் சென்றோர் சடலமொன்று மிதந்து கொண்டிருப்பதை கண்டு பொலிஸாருக்கும், கிராம மக்களுக்கும் அறிவித்ததையடுத்து காணாமல் போன இளைஞனின் சடலம் கண்டறியப்பட்டது.

குறித்த சடலமானது உருக்குழைந்த நிலையில் காணப்படுவதோடு இளைஞன் கொலை செய்யப்படானா? அல்லது இயற்கை இறப்பா? என்பது இதுவரை கண்டறியப்படாத நிலையில் மூதூர் பொலாஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு, மக்களுக்கு எச்சரிகை விடுப்பு

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேங்களில் சிறியளவிலான திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

துவிச்சக்கரவண்டி,எரிபொருள் திருட்டுச் சம்பவங்கள் அதிகம் இடம்பெற்று வருவதாகவும், மக்கள் அவதானமாகத் செயற்பட வேண்டும் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் வலியுறுத்துகின்றனர்.

வீட்டில் அல்லது வீட்டுச் சூழலில் நிறுத்தி வைக்கப்படும் துவிச்சக்கர வண்டிகள் நுட்பமான முறையில் திருடப்பட்டு வருகின்றன. இரவு, பகல் பாராது இத்திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதேபோன்று,எரிபொருள் திருட்டும் அதிகரித்துள்ளது. வீடு மற்றும்

வயல்வெளிகளில் நிறுத்தி வைக்கப்படும் மோட்டார் சைக்கிள்களிலுள்ள பெற்றோலை உறிஞ்சி, கொள்கலன்களில் எடுத்துச் செல்லும் திருட்டும் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

பெற்றோல் எரிபொருள் விலையேற்றத்தையடுத்து, இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும்ஆ பள்ளியில் நள்ளிரவு திருட்டு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும்ஆ பள்ளிவாயல் அலுவலகம் புதன்கிழமை நள்ளிரவு உடைக்கப்பட்டு அங்கிருந்த பணம் திருடப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர். காத்தான்குடி முகைதீன் மெத்தை பெரிய ஜும்ஆ பள்ளிவாயலுக்குள்ளே பள்ளி வாயல் அலுவலகம் அமைந்துள்ளது.

நள்ளிரவு 12.50 மணியளவில் பள்ளி வாயிலுக்குள் புகுந்து பள்ளி வாயல் அலுவலக கதவு உடைக்கப்பட்டு அலுவலகத்துக்குள் இருந்த 1,93,000 ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாக பள்ளி வாயல் நிருவாகம் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதையடுத்து காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறியின் ஆலோசனையின் பேரில் பொலிஸ் நிலைய குற்ற தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி வை.விஜயராஜன் தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். பள்ளி வாயலுக்கு சென்ற குற்ற தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி வை.விஜயராஜன் தலைமையிலான பொலிஸார் குறித்த இடத்தை பார்வையிட்டு ஆரம்பக்கட்ட விசாரணைகளை நடாத்தியதுடன் சி.சி.ரி.வியையும் சோதனை செய்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -






# சிறந்த கல்வித்திட்டங்களிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது



## அமைச்சர் ரமேஷ் பத்திரன

**அக்குறணை குறூப் நிருபர்**

சிறந்த கல்வித்திட்டங்களிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளதாக பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் கல்வி அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற வைபவமொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாம் மேற்கொள்ளும் சிறந்த கல்வித்திட்டங்களின் வெற்றியின் அடிப்படையில் நாட்டின் எதிர்காலம் தங்கி இருப்பதால் கல்விக்காக மேற்கொள்ளப்படும் முதலீடுகள் முறையாக நிர்வகிக்கப்பட வேண்டும். கடந்த 74 வருட கால ஆட்சியில் கல்வியில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக பாடசாலைகளின் எண்ணிக்கையை மட்டும் எடுத்துக்கொண்டால் அவை சுமார் 3000தில் இருந்து இன்று 10 000 வரை அதிகரித்துள்ளது. மேற்படி வளர்ச்சி பௌதீகரீதியான கட்டடங்களின் எண்ணிக்கை மட்டுமல்ல, அதற்கு சமாந்தரமாக மானிட வளங்கள் உட்பட, தொழில் நுட்பத் துறை போன்ற துறைகள் வளர்ச்சியடைந்துள்ளன. கல்வியில் தொழில் நுட்ப வளர்ச்சியானது 4ஆவது கைத்தொழில் புரட்சிக்கு ஈடுகொடுக்கக் கூடியதாக அமைய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# டயகமவிலிருந்து நடைபவனி

**ஹற்றன் சுழற்சி நிருபர்)**



நுவரெலியா டயகம சந்திரிகாமம் தோட்டத்திலிருந்து நேற்று காலை விலைவாசி உயர்வு, எரிபொருள் தட்டுப்பாடு, தோட்ட தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பளம் உள்ளிட்ட காரணங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து புஷ்பநாதன் தியாகு என்ற இரண்டு பிள்ளையின் குடும்பஸ்தர் அவரது தோட்டத்திலிருந்து நடைபவனியை நேற்று ஆரம்பித்தார்.

தேசிய கொடியை ஏந்தி நடை பயணத்தை ஆரம்பித்தார். இவருக்கு ஆதரவு தெரிவித்த மக்கள் 03 கிலோ மீற்றர் தூரம் கொண்ட டயகம நகரம் வரை பேரணியாக வருகை தந்தனர்.

கொழும்பு நோக்கி பயணம் செய்யும் இவருக்கு ஆதரவாக நகரத்திலுள்ள வர்த்தகர்கள், பிரதேச மக்கள் அமோக வரவேற்பு வழங்கினார்கள். அதேவேளை இவருக்கு மன்றாசி நகரத்திலும் வரவேற்பு வழங்கப்பட்டது.

# மத்திய மாகாணத்தில் ஆசிரிய உதவியாளர்களுக்கு நியமனம் வழங்கல்

**தம்புள்ள தினகரன், மாத்தளை சுழற்சி நிருபர்கள்**



தேசிய கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய டிப்ளோமாதாரிகள் மற்றும் ஆசிரிய உதவியாளர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வுகள், கடந்த செவ்வாய்க்கிழமை கண்டி பல்லேகலயிலுள்ள மத்திய மாகாண சபை பிரதான மண்டபத்தில் வைபவ ரீதியாக இடம்பெற்றன.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே மற்றும் கல்வி மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் துறை அமைச்சர் ரமேஷ் பதிரண ஆகியோரின் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வின் போது தேசிய கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய 544 டிப்ளோமாதாரிகளுக்கும், 357 ஆசிரிய உதவியாளர்களுக்கும் இவ்வாறு 3, 1ஆம் தரத்திற்கான நிரந்தர ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே டிப்ளோமாதாரிகள் மற்றும் ஆசிரிய உதவியாளர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கி வைப்பதை காணலாம்.

# நுவரெலியா பிரதேச சபையில் ஆளும் தரப்பு சுயாதீனமாக செற்பட முடிவு



நுவரெலியா பிரதேச சபையில் ஆளும் தரப்பான இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்கள் உள்ளிட்ட ஆளும் தரப்புக்கு ஆதரவான ஸ்ரீலங்கா பொது பெரமுன கட்சி உறுப்பினர்கள் சபையில் அதே பலத்துடன் சுயாதீனமாக செயற்பட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நுவரெலியா பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நானுஓயாவில் பிரதான சபைக் காரியாலய கூட்ட மண்டபத்தில் தவிசாளர் வேலு யோகராஜ் தலைமையில் நேற்று (05) காலை இடம்பெற்றது.

இதன்போது சபையில் ஆளும் தரப்பு சபை நடவடிக்கைகளில் சுயாதீனமாக செயற்படும் என்ற பிரேரனையை சபை உறுப்பினர்களிடத்தில் தவிசாளர் வேலு யோகராஜ் முன்வைத்தார்.

இதனை நுவரெலியா பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் ஆளும், மற்றும் எதிர்கட்சிகளைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் ஏகமானதாக ஏற்றுக்கொண்டு தவிசாளர் முன்வைத்த பிரேரணைக்கு கைகளை தட்டி ஆதரவு வழங்கினர்.

மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்களின் நலனை கருத்திற் கொண்டு இந்த அரசாங்கத்தின் பங்காளி கட்சியிலிருந்தும், அதன் ஆதரவிலிருந்தும் விலகியுள்ளது.

அத்துடன் மலையக மக்களின் சமகால வாழ்க்கை மற்றும் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்து காங்கிரஸின் பொது செயலாளர் தனக்கு வழங்கியிருந்த இராஜாங்க அமைச்சு பதவியையும் உதறிவிட்டு அரசில் இருந்து வெளியேறியுள்ளதை மக்கள் பாராட்டுகின்றனர்.

இந்நிலையில் நுவரெலியா பிரதேச சபையில் இ.தொ.கா உறுப்பினர்கள் மற்றும் பொது பெரமுன உறுப்பினர்கள் இணைந்த ஆளும் தரப்பு சுயாதீனமாக செயற்பட முடிவெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார். இதை ஆதரித்த ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களையும் சபையில் முன்வைத்து உரையாற்றினர்.

**ஆ.ரமேஸ்**

# அரிசி விற்பனையில் மோசடி

**தம்புள்ள தினகரன் நிருபர்**



தேசிய மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனை தொடர்பில் அண்மையில் வெளியிடப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலை அரசாங்க வர்த்தமானி அறிவித்தலையடுத்து தம்புள்ள, கலேவெல, நாவுல, மற்றும் மாத்தளை ஆகிய பிரதேசங்களில் அரிசிகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோர் கவலை தெரிவிக்கின்றனர்.

வர்த்தமானி அறிவித்தலைக் கவனத்திற் கொள்ளாது தன்னிச்சையாக தான் நினைத்தவாறு வர்த்தகர்கள் அரிசி விற்பனையில் ஈடுபட்டு வருவதால் தாம் அசௌகரியத்திற்கு முகங் கொடுக்க நேர்ந்திருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

சந்தையில் நிலவும் அரிசி விலைகள் தொடர்பில் அரசாங்கம் ஆராயாமல் விலைக்கட்டுப்பாட்டை வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவித்திருப்பதால் அரிசிகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.



அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் பொது மக்களால் எம்பிலிபிட்டியவிலிருந்து கொழும்பு காலிமுக திடலுக்கு பாதயாத்திரையொன்றை நேற்றுமுன்தினம் நடத்தினர்.
படம்: காவத்தை தினகரன் விசேட நிருபர்

# எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்ய உதவுமாறு இந்தியாவிடம் இ.தொ.கா கோரிக்கை!



இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான உதவிகளை செய்வதற்கு இந்தியா தொடர்ந்து முன்வர வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த இந்திய பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவர் கே.அண்ணாமலையிடம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கிணங்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இது தொடர்பில் கலந்துரையாடி, இலங்கைக்கு தேவையான எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுப்பதாக அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாட்டால் பொதுமக்கள் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மின்சாரத் துண்டிப்பும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் பொதுமக்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமாயின் இந்தியாவின் உதவிகள் தொடர்ந்து இலங்கைக்கு கிடைக்க வேண்டுமென்று இ.தொ.கா தலைவர் வலியுறுத்தினார்.

இலங்கை தற்போது முகங்கொடுத்து வரும் பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பில் ஆராய்வதற்காக, இந்திய பிரதமர் நரேந்திர மோடி தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை நியமிக்கப்பட்டுள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது.

# விசேட தேவையுடையவர்களுக்கான கலந்துரையாடல்

தேர்தல் வாக்களிப்பு மத்திய நிலையங்களில், வாக்களிப்பின் போது, விசேட தேவையுடையவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று (5) கண்டி அநாகரிக தர்மபால மாவத்தையிலுள்ள சர்வோதய மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

இதில் கண்டி, கேகாலை, நுவரெலியா, மாத்தளை, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 25 விசேட தேவையுடையவர்கள் கலந்துகொள்ளவுள்ளதாக பெப்ரல் அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் சுஜீவ கயானாத் தெரிவித்துள்ளார். நேற்று காலை 9.30 தொடக்கம் 12.30 வரை இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கண்டி உதவி தேர்தல் ஆணையாளர் சம்பத் பெர்ணான்டோ, பெப்ரல் அமைப்பின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# 23 வருடங்களின் பின் தேயிலை ஏற்றுமதியில் வீழ்ச்சி

உரத்தடை மற்றும் உக்ரைன் போரினால் இலங்கையில் தேயிலை ஏற்றுமதி குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக அண்மைக் கால புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

23 வருடங்களில் மிக மோசமான தேயிலை ஏற்றுமதி பொருளாதார வீழ்ச்சி இதுவென தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரத்தடை மற்றும் உக்ரைன் போரினால் இலங்கையில் தேயிலை ஏற்றுமதி குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் மிகப்பெரிய ஏற்றுமதிப் பொருளாக தேயிலை உள்ளது. தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு முன்னர், ஆண்டுக்கு 1.3 பில்லியன் அமெரிக்க டொலரை இது ஈட்டியிருந்தது.

எனினும் தற்போது 1948 இல் சுதந்திரத்திற்குப் பிறகு மிக மோசமான வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

கடந்த ஆண்டு உர இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டது, நவம்பர் 2021 முதல் பிப்ரவரி 2022 வரையிலான காலகட்டத்தில் உற்பத்தி 18 சதவிகிதம் வீழ்ச்சியடைந்து. இது விவசாயி உற்பத்திகளையும் கடுமையாக பாதித்தது.

# கட்டுகஸ்தோட்டை சாஹிரா ஆண்கள் கல்லூரியில் தரம் ஒன்றுக்கு புதிய மாணவர்களை இணைத்தல்

**மாவத்தகம தினகரன் நிருபர்**



தரம் ஒன்றுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் தேசிய நிகழ்வு கண்டி கல்வி வலயத்திற்கு உட்பட்ட கட்டுகஸ்தோட்டை சாஹிரா ஆண்கள் கல்லூரியில் பாடசாலை அதிபர் கலிலுர்ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை.எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதன் போது அதிபர் அவர்களினால் மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

கண்டி கல்வி வலய ஆசிரியர் ஆலோசகர் எம். ஏ. ஆர். எம். ரிஸ்னி மௌலவி, எம். இப்றாஹீம், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தோட்டதொழிலாளர்களது பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைக்கு உதவ வேண்டும்

## விவசாயத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆர்.எம்.கிருஸ்ணசாமி

பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்டுள்ள மலையக தொழிலாளர்களது பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைக்கு உதவ அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டுமென விவசாயத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆர்.எம். கிருஸ்ணசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத பொருளாதார நெருக்கடி காரணமாக மத்திய தர, வறிய மக்கள் அன்றாட வாழ்க்கையை கொண்டு நடத்துவதில் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர். மலையக பெருந்தோட்ட மக்களின் நிலை பரிதாபகரமாக மாறி வருகின்றது. உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இன்றி மாதாந்தம் 10 தொடக்கம் 15 ஆயிரத்திற்கு இடைப்பட்ட சம்பளத்தை பெற்றுக் கொண்டு குடும்ப செலவையும் கவனிக்க முடியாது. பிள்ளைகளின் கல்வி செலவிற்கு வழி தெரியாது திணறி வருகின்றனர்.

ஒரு குடும்பத்தில் இருந்து 2,3 பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லும் வாய்ப்புகளும் உள்ளன. அவ்வாறான குடும்பங்களிலிருந்து புதிய கல்வியாண்டில் பாடசாலை கற்றலுக்குத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்ய முடியாத நிலை காணப்படுவதால் ஒருவர் மாத்திரமே பாடசாலைக்கு சமூகம் தருவதாக அதிபர்கள் மூலம் அறிய முடிகிறது. அத்துடன் மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகும் வீதமும் அதிகரித்துள்ளது.

அப்பியாசக் கொப்பிகள் உட்பட ஏனைய கற்றல் உபகரணங்களின் விலைகள் இலங்கை ரூபாவின் வீழ்ச்சி காரணமாக இரட்டிப்பாகியுள்ளன.

இதனால் பெற்றோர் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பி கல்வியைத் தொடர வைப்பதில் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் மாணவர்கள் இடைநடுவில் வறுமையை காரணம் காட்டி கல்வியை கைவிடுவது சமூகத்தின் எதிர்கால வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# விலைக்கோரலுக்கான அழைப்பு

## தொல்லியல் திணைக்களம்

### பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரல் – 2022

01. பின்வரும் பாவிக்கப்பட்ட வாகனங்களை அப்புறப்படுத்தப்படுவதற்கு தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வாகனத்தின் வகை | பதிவிலக்கம் | உற்பத்தி வருடம் | பரீட்சித்துப் பார்க்கும் இடம் | வாகன பொறுப்பு அதிகாரி |
|---|---|---|---|---|
| (A) டீசல் கெப் வாகனம்<br>1. TATA சிங்கள் கெப் வாகனம் | LB - 7942 | 2006 | கோட்டே தொல்லியல் நூதனசாலை | உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) - 011-2667113<br>நிர்வாக அதிகாரி - 011-2667155 |
| (B) டீசல் லொறி வாகனம்<br>2. ISUZU லொறி வாகனம் | 41 ஸ்ரீ 7178 | 1987 | பண்டுவஸ்நுவர தொல்லியல் அலுவலகம் | உதவிப் பணிப்பாளர் (வடமேல்) - தொ.பே. 037-2220475 |
| (C) டீசல் கெப் வாகனம் (கழிவுப்பொருள் மதிப்பீட்டு அடிப்படையில்)<br>3. ISUZU கெப் வாகனம் | 50 - 7673 | 1988 | தொல்லியல் திணைக்கள தலைமை அலுவலகம் | உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) - 011-2667113<br>நிர்வாக அதிகாரி - 011-2667155 |
| (E) மோட்டார் சைக்கிள்கள் (கழிவுப்பொருள் மதிப்பீட்டு அடிப்படையில்)<br>4. TVS Scooty Pept<br>5. TVS Victor<br>6. TVS Victor | JP - 0320<br>HR - 2090<br>HQ - 6130 | 2004<br>2003<br>2003 | தொல்லியல் திணைக்கள தலைமை அலுவலகம் | உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) - 011-2667113<br>நிர்வாக அதிகாரி - 011-2667155 |

02. விலைமனுக்கள் கோரல் 2022-05-30ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு நிறைவுறும். கொழும்பு-07, சேர் மார்கஸ் பர்னாந்து மாவத்தை, பிரதான அலுவலகக் கட்டிடத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள தொல்லியல் திணைக்களத்தின் கணக்காளர் (பெறுகை) அலுவலகத்திலிருந்து அல்லது வடமேல் பிராந்திய தொல்லியல் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட பெறுகை மாதிரிப் படிவங்களில் மட்டும் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அந்த மாதிரிப் படிவங்களை 2022-05-10ஆம் திகதி முதல் 2022-05-27ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் மாதிரிப் படிவத் தொகுதியொன்றை மீளளிக்கப்படாத 500.00 ரூபாவைச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம்.
03. மீளளிக்கப்படும் விலைக்கோரல் கட்டணமாக கழிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கு 1000.00 ரூபாவும், ஏனைய வாகனங்களுக்கு 15,000.00 ரூபாவுமாகும். அந்தத் தொகையை தலைமை அலுவலகத்தின் கணக்கிடல் பிரிவின் சிறாப்பருக்கு அல்லது பிரதேச அலுவலகங்களின் சிறாப்பருக்குச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் இயைபுடைய பற்றுச்சீட்டை விலைமனுக்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். (ஒவ்வொரு வாகனத்திற்கும் வெவ்வேறான விலைமனு அனுப்புதல் வேண்டும்)
04. மேற்படி வாகனங்களை 2022-05-10ஆம் திகதி முதல் 2022-05-27ஆம் திகதி வரையான காலத்தினுள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மேற்படி இடப்பரப்பில் இயைபுடைய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பரீட்சித்துப் பார்க்கலாம்.
05. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பணிப்பாளர் நாயகம், தொல்லியல் திணைக்களம், முதலாம் மாடி, தலைமை அலுவலகம், சேர் மார்கஸ் பர்னாந்து மாவத்தை, கொழும்பு-07 எனும் முகவரிக்கு 2022-05-30ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது முதலாம் மாடியிலுள்ள கணக்காளர் (பெறுகைகள்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடல் வேண்டும். மேலும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்காக விலைமனு கோரல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
06. நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. 2022-05-30ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு விலைக்கோரல் முடிவுறுத்தப்படும் என்பதுடன் விலைக்கோரல் நிறைவடைந்த உடனடுத்து கொழும்பு- 07, சேர் மார்கஸ் பர்னாந்து மாவத்தையிலுள்ள தொல்லியல் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலுள்ள கேட்போர் கூடத்தில் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
08. இது தொடர்பான மேலதிக விபரங்களை 0112-694728 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொல்லியல் திணைக்களத்தின் கணக்காளர் (பெறுகைகள்) அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தொல்லியல் பணிப்பாளர் நாயகம்,**
**தொல்லியல் திணைக்களம்,**
**சேர் மார்கஸ் பர்னாந்து மாவத்தை, கொழும்பு-07.**
**தொ.பே. இல. 011-2694728**

# மக்கள் வங்கி – கண்டி கிளை

### 1986 ன் 32 ம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ன் 29 ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29  டீ (29 D) பிரிவின் கீழான பிரேரணை

பின்வரும் பிரேரணையானது 1986 ன் 32 ம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ன் 29 ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டீ (29 D) பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2021.10.29 ந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கண்டி பிரசித்த நொத்தாரிஸ் திருமதி. ஜே. ரத்னாயக அவர்களால் 2016.08.01 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 5115 ஆம் இலக்க ஈட்டு முறி, 2017.12.05 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 5613 ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் திருமதி. டீ.ஜீ.எஸ்.ஜீ. தயாரத்ன அவர்களால் 2018.11.21 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 6061 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் பிரகாரம் இல. 521, பேராதெனிய வீதி, கண்டி எனும் முகவரியில் பிரதான காரியாலயம் அமைந்துள்ள 2007 ம் ஆண்டின் 07 ம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் PV 104104 எனும் பதிவிலக்கம் மூலமாக முறையாக கூட்டிணைக்கப்பட்ட டஷின் என்ட் ஒலிவ் (பிரைவட் லிமிடட்) தனியார் கம்பனி, வீரசேகர முதியன்சேலாகே இந்திக துஷார மற்றும் விஜேகோன் முதியன்சேலாகே அனோமா சோஹானி அவர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட சகல வசதிகளையும் செலுத்துவதற்குத் தவறியமையாலும், 5115 ஆம் இலக்க ஈட்டு முறியின் பிரகாரம் ரூபா. 11,787,535.33 (நூற்றிப் பதினேழு இலட்சத்து எண்பத்து ஏழாயிரத்து ஐந்நூற்றி முப்பத்து ஐந்து ரூபாய் முப்பத்து மூன்று சதம்) மற்றும் ரூபா. 10,120,799.69 (நூற்று ஒரு இலட்சத்து இருபதாயிரத்து எழுநூற்றி தொன்னூற்றி ஒன்பது ரூபாய் அறுபத்து ஒன்பது சதம்)

தொகைக்கு 2021.10.05 ம் திகதியிலிருந்து 17% வட்டியும் ரூபா. 2,387,006.19 (இருபத்து மூன்று இலட்சத்து எண்பத்து ஏழாயிரத்து ஆறு ரூபாய் பத்தொன்பது சதம்) மற்றும் ரூபா. 2,043,811.98 (இருபது இலட்சத்து நாற்பத்து மூவாயிரத்து எண்ணூற்றி பதினொரு ரூபாய் தொன்னூற்று எட்டு சதம்) தொகைக்கு 2021.10.05 ம் திகதியிலிருந்து 17% வட்டியும் 5613 ஆம் இலக்க ஈட்டு முறியின் படி ரூபா. 1,703,758.61 (பதினேழு இலட்சத்து மூவாயிரத்து எழுநூற்றி ஐம்பத்து எட்டு ரூபாய் அறுபத்தி ஒரு சதம்) தொகை வங்கிக்கு அறவிடப்பட வேண்டி இருப்பதாலும், அத்தொகை மற்றும் ரூபா 1,360,000/- (பதின் மூன்று இலட்சத்து அறுபதாயிரம் ரூபாய்) தொகைக்கு 2021.10.05 ஆம் திகதியிலிருந்து வருடத்துக்கு 17% வீதப்படி வட்டியும், மேற்குறிப்பிட்ட 6061 ஆம் இலக்க ஈட்டு முறிக்காக ரூபா. 10,972,420.20 (நூற்றி ஒன்பது இலட்சத்து எழுபத்தி இரண்டாயிரத்து நானூற்றி இருபது ரூபாய் இருபது சதம்) மற்றும் ரூபா. 9,990,000.00 (தொன்னூற்று ஒன்பது இலட்சத்து தொன்னூறாயிரம் ரூபாய்) தொகைக்கு 2021.10.05 ம் திகதியிலிருந்து AWPLR+3.5% உடன் 2% படி அபராத வட்டி மற்றும் ஏல விற்பனை திகதி வரையிலான வட்டியும் வங்கிக்கு அறவிடப்பட வேண்டி இருப்பதனால், மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 எல் (29 L) பிரிவின் கீழ் அறவிட்டுக் கொள்ளக் கூடிய பணம் மற்றும் கட்டணங்களுடன் வேறு ஏதாவது செலுத்தப்பட்ட கட்டணங்கள் இருப்பின் அவற்றைக் கழித்து மேற்படி பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காக உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர் ஷொக்மன் மற்றும் சமரவிக்கிரம கம்பனியினால் கண்டி பிரசித்த நொத்தாரிஸ் திருமதி. ஜே. ரத்னாயக அவர்களால் 2016.08.01 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 5115 ஆம் இலக்க ஈட்டு முறி, 2017.12.05 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 5613 ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் திருமதி. டீ.ஜீ.எஸ்.ஜீ. தயாரத்ன அவர்களால் 2018.11.21 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 6061 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் பிரகாரம் வங்கியில் அடகு வைக்கப்பட்டுள்ள சொத்துக்களும், உடைமைகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென்று 1986 ஆம் ஆண்டின் மக்கள் வங்கிச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் கீழ் தமக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைய மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கின்றது.

**அடகு வைக்கப்பட்டுள்ள சொத்து பற்றிய விபரம்**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் கண்டி மாநகர சபை பிரிவில், கண்டி கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், அனிவத்த - மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஜோர்ஜ் ஈ டீ சில்வா மாவத்தையில் அமைந்துள்ள, ப்ரிம்ரோஸ்ஹில் தோட்டம் என்கின்ற காணிக்கு அதிகாரம் பெற்ற அளவையாளர் திரு. ஜீ.எஸ்.பீ. லெனகல அவர்களால் 21.09.1995 ம் திகதியன்று அளந்து வரையப்பட்ட இலக்கம் 684 உடைய வரைபடத்திலுள்ள 11.5 பேர்சஸ் (00: ஏ. 00 ரூ. 11.5: பேர்) (ஹெக்: 0.0291) பரப்பளவுள்ள தொகுதி இலக்கம் 25 இன் எல்லைகளாவன:- வடக்கு: தொகுதி இலக்கம் 32 உடைய வீதி, வீதியின் சுற்று வட்டாரம், மற்றும் காண், கிழக்கு : 26 ஆம் இலக்க தொகுதி, தெற்கு : தொகுதி இலக்கம் 32 உடைய வீதி, மேற்கு : 24 ம் இலக்க தொகுதி ஆகிய வரம்புகளுக்குட்பட்ட காணி, மரங்கள், பழங்கள் கட்டடங்கள் மற்றும் அதற்குட்பட்டவைகள் அனைத்தும் உள்ளடங்கலாக ஆகும்.

இது கண்டி காணி பதிவுக் காரியாலத்தில் A/585/141 ஆம் இலக்க பக்கத்தில் பதியப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபை உத்தரவுப்படி**
**கையொப்பம் தெளிவில்லை**
**பிராந்திய முகாமையாளர்**

**பதவி முத்திரை : பீ.எஸ். ரணதுங்ககே**
**பிராந்திய முகாமையாளர்**
**கண்டி**

**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமை அலுவலகம்,**
**17, தளதா வீதி, கண்டி.**

கண்டி பிரசித்த நொத்தாரிஸ் திருமதி. ஜே. ரத்னாயக அவர்களால் 2016.08.01 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 5115 ஆம் இலக்க ஈட்டு முறி, 2017.12.05 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 5613 ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் திருமதி. டீ.ஜீ.எஸ்.ஜீ. தயாரத்ன அவர்களால் 2018.11.21 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 6061 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் பிரகாரம் செலுத்துகை மற்றும் வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விபரங்களை பரீட்சித்ததாக இத்தால் உறுதிப்படுத்துகிறோம்.

**கையொப்பம் தெளிவில்லை**
**சட்ட அதிகாரி (கண்டி)**

**பதவி முத்திரை : ஷியாமா தயாரத்ன**
**சட்ட அதிகாரி - மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமை அலுவலகம், கண்டி.**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk
AA+ (lka) Fitch Rating, AA Brand Finance Rating

## ஹல்துமுல்ல பிரதேச சபை - 2023ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் நகல் வரைவிற்கு மூலதன செலவு மதிப்பீடு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பொதுமக்களின் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்ளல்

2023ஆம் வருடத்தில் ஹல்துமுல்ல பிரதேச சபையினால் தயாரிப்பதற்குள்ள வரவு செலவுத் திட்ட நகல் வரைவிற்கு மூலதன செலவு மதிப்பீடு மற்றும் அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு உத்தேசிக்கும் முன்மொழிவுகளை 2022 ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன் எனக்குச் சமர்ப்பிக்குமாறு பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

**எஸ். அஷோக்குமார், 2022-05-04**
**தலைவர்,**
**ஹல்துமுல்ல பிரதேச சபை.**

# மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்

### (அரசாங்க உரிமையுள்ள கம்பனி)

மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்டானது முதற்தர பாற்பண்ணை உற்பத்திகளை ஹைலண்ட் குறியீட்டு பெயரில் உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் கருமங்களை மேற்கொள்ளும் ஓர் அரசுடமை நிறுவனமாகும்.

கீழ்க்காணும் மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கான வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக் கோரல்களை பெற்றுக்கொள்ள "மில்கோ" நிறுவனத்தின் கேள்விக்குழுவின் தலைவரினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

| தொ. இல. | மூலப்பொருள் | முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் இலக்கம் | திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| 01. | கொக்கோ தூள் | SQ/2022/P/156 | 2022.05.19 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |
| 02. | ஸ்டபிலைசர் | SQ/2022/P/157 | 2022.05.19 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |
| 03. | ஜெலடின் | SQ/2022/P/158 | 2022.05.19 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |
| 04. | குளுக்கோஸ் சிரப் | SQ/2022/P/159 | 2022.05.19 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |

**பொதுவான நிபந்தனைகள் :**

- விலைமனுக்கோரல்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் பொருள் விவரக் குறிப்புகள், அனைத்தும் கொழும்பு-03, இல. 345/5, காலி வீதியில் அமைந்துள்ள 'மில்கோ' தலைமையகத்தின் கொள்வனவு பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.
- மேற்கூறப்பட்ட ஒவ்வொரு மூலப்பொருளுக்கான ரூபா 30000.00 பெறுமதியுடைய விலைமனு உத்தரவாத பிணையொன்று 90 நாட்களுக்கு செல்லுபடியானதும், இலங்கையிலுள்ள ஏதேனும் வர்த்தக வங்கியில் பெற்றுக் கொண்டதுமான பிணைமனு வழங்கப்படல் வேண்டும்.
- முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் மேற்புறத்தில் மூலப்பொருளின் பெயர் குறிப்பிடப்படுதலுடன், மூடப்படும் நேரம், காலம் குறிப்பிடப்படல் வேண்டும்.
- அனைத்து விலைமனு விண்ணப்பங்கள் 19.05.2022 மாலை 3.00 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் கீழ் குறிப்பிடப்பட்டள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
- முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 19.05.2022 அன்று மூடப்படுவதுடன், அன்றை தினம் மாலை 3.00 மணியளவில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் திறக்கப்படும். அன்றைய தினம் விண்ணப்பதாரிகள் சுகாதார ஒழுங்கனமைப்புடன் நேரடியாக பங்குபெற முடியும்.
- அனைத்து விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வதற்கும், நிராகரிப்பதற்கும் கேள்விக்குழுமத்தின் உரிமை உண்டு.
- இவ்விலைமனு விண்ணப்பதாரிகளாக மில்கோ ஊழியர்களோ அலர்லது அவர்களின் நெருங்கிய உறவினர்களோ பங்குபெற இயலாது.

011-4500530 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக கொள்வனவு முகாமையாளரிடமிருந்து மேலதிக விபரங்களை, தேவைப்படின், பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - கேள்விக் குழு,**
**மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்,**
**இல.: 345, 5 ஆம் மாடி, காலி வீதி, கொழும்பு-03.**

# பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை - ஹம்பாந்தோட்டை

ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையின் நிர்மாணம், சேவை மற்றும் பராமரிப்பு ஒப்பந்தங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விடயம் | மீளளிக்கப் படாத வைப்பு (ரூபா) | மீளளிக்கப் படும் வைப்பு / வங்கிப் பிணை (ரூபா) |
|---|---|---|---|
| | **சேவை மற்றும் ஒப்பந்தங்கள்** | | |
| 01 | மின் பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் அது தொடர்பான கட்டுப்பாட்டு விசைப்பலகையாகிய Automatic Transfer Switch இன் வருடாந்த பராமரிப்பு வேலைகள் | 1,000.00 | 50,000.00 |
| 02 | தீப் பாதுகாப்பு முறைமையின் சேவை நடவடிக்கைகள் | 1,000.00 | 50,000.00 |
| 03 | மின்சார முறைமையின் பராமரிப்பு வேலைகள் | 1,000.00 | 50,000.00 |
| 04 | மத்திய சலவை அலகில் உள்ள 04 சலவை இயந்திரங்கள், 04 துணி உலர்த்தும் இயந்திரங்கள் மற்றும் அயன் ஒன்றுக்கான வருடாந்த பராமரிப்பு வேலைகள் | 1,000.00 | 50,000.00 |
| | **நிர்மாணம்** | | |
| 05 | மருந்துக் களஞ்சியசாலையை நவீனமயப்படுத்தும் வேலைகள் | 1,000.00 | 50,000.00 |
| | **மருத்துவ உபகரணங்கள்** | | |
| 06 | 01 No. Slide Storing Cabinet | 1,000.00 | 20,000.00 |

பெறுகை மாதிரிப் படிவங்களை 2022-05-09ஆம் திகதி முதல் 2022-05-27ஆம் திகதி வரையான அலுவலக நேரங்களில் ஹம்பாந்தோட்டை புதிய மாவட்ட பொது வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளலாம். உங்களால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2022-05-30ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் சமர்ப்பிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

விண்ணப்பதாரர்கள் தமது விலைகளைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய பெறுகையின் பெயரைக் குறிப்பிட்டு, தலைவர், பிராந்திய பெறுகைக் குழு. மாவட்ட பொது வைத்தியசாலை, ஹம்பாந்தோட்டை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன் நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். மேற்படி செயற்பாடுகள் தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி இல. 047-2256417

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**ஹம்பாந்தோட்டை.**

## 2022/2023 க்கான கள்ளு தவறணை விற்பனை

### மாதம்பே பிரதேச செயலகத்தில் 2022.06.01 முதல் 2023.05.30 வரை

2022.06.01 முதல் 2023.05.30 வரையிலான காலப்பகுதிக்கான கள்ளு தவறணை விற்பனைக்கான டெண்டர்கள் 2022.06.01 காலை 10.30 மணி பெறப்படும். மேலும் விபரங்களுக்கு, 2022.04.29 அன்று இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானியைப் பார்க்கவும்.

**2022.04.25**
**பிரதேச செயலகம்**
**மாதம்பே**

**ஏ.எம்.சி.எம்.பிரேமசூரிய**
**பிரதேச செயலாளர்**
**மாதம்பே**

### கல்கமுவ பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு அபிவிருத்தி திட்டத்தினை ஒழுங்கமைப்பதற்கு கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்காக பொது மக்களுக்கு செய்யப்படும் அறிவித்தல்

கல்கமுவ பிரதேச சபையினால் 2023 ஆம் ஆண்டிற்காக வரவு செலவு திட்டத்தினை ஒழுங்கமைத்தல் இத் தினங்களில் நடைபெறுவதுடன், குறித்த வரவு செலவு திட்டத்தில் மூலதன செலவு மதிப்பீடு மற்றும் எதிர்கால அபிவிருத்தி திட்டத்திற்கு உள்வாங்குவதற்கு இயலுமான வகையில் கல்கமுவ பிரதேச சபை அதிகாரப் பிரிவில் வாழ்கின்ற உங்களது கருத்துக்கள் இருக்குமாயின் அவற்றை எழுத்து மூலம் 2022 ஜூன் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் நேரில் வந்து அல்லது தபால் மூலம் அல்லது மின் அஞ்சல் மூலம் கல்கமுவ பிரதேச சபைக்கு கிடைக்கும் வகையில் "தலைவர், பிரதேச சபை, கல்கமுவ" என்ற முகவரிக்கு அனுப்புமாறு இத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எச்.கே.விமலரத்ன,**
**தலைவர்,**
**பிரதேச சபை, கல்கமுவ.**

**முகவரி - பிரதேச சபை, கல்கமுவ**
**தொலைபேசி இலக்கம் - 0372254081**
**மின் அஞ்சல் - galgamuwaps@yahoo.com**

### 1964 ம் ஆண்டின் 28ம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டம் (அத்தியாயம் 460) 7ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல: வட/என்/எல்ஏ/ஏசிகியூ/எச்ஆர்/1
காணி அமைச்சின் இல : 4-3/18/2018/FH/413

கீழ் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை ஒரு பகிரங்க தேவைக்கு அரசாங்கம் எடுக்க உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு பகுதி -III இல் 2022 ம் ஆண்டு சித்திரை மாதம் 05 ம் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு வர்த்தமானி பத்திரிகை (அதி விஷேசமானது) இலக்கம் 2274/11 பார்க்கவும்

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | யாழ்ப்பாணம் |
| பிரதேச செயலாளர் பிரிவு | வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) |
| கிராம அலுவலர் பிரிவு | பருத்தித்துறை. ஜே/401 |
| கிராமத்தின் பெயர் | பருத்தித்துறை |
| ஆரம்ப வரைபட இல | பிபியா 2909 |
| விஸ்தீரணம் | 0.5840 ஹெக்டயர் |
| காணித் துண்டு இலக்கம் | 1,2,3,4,5,6,7,8,9,10, 11,12,13,14,15,16 |

**ஆழ்வாப்பிள்ளை சிறி**
**பிரதேச செயலாளர்**
**வடமராட்சி வடக்கு**

**பிரதேச செயலகம்**
**வடமராட்சி வடக்கு**
**பருத்தித்துறை.**

# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| | **கார்** | | |
| KS -7XXX | TATA | NANO | 2011 |
| | **முச்சக்கர வண்டிகள்** | | |
| HP -4XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| QB -1XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QQ -5XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| QO -3XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| QR -9XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| QU -6XXX | BAJAJ | AUTO AR4S | 2009 |
| AAK -8XXX | BAJAJ | RE205 | 2013 |
| AAO -8XXX | BAJAJ | RE205 | 2014 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

**மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2022 மே 6ஆம், 9ஆம், 10ஆம், மற்றும் 11ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2022 மே 11ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)**

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

Mercantile Investments and Finance PLC

தொடர்பு:
**ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350**

www.skillsads.com

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29D பிரிவின் கீழான தீர்மானம்

PEOPLE'S BANK

மக்கள் வங்கி

## காணிநிலம், காணியிலிருக்கும் கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக மதிப்பு மிக்க சொத்தின் ஏல விற்பனை

அனுமதி பபற்ற நில அளவையாளர் எஸ். சுப்ரமணியம் என்பவரால் 14.05.2012 இல் தயாரிக்கப்பட்ட நிலவவரப்பட இலக்கம் 1272B இல் லொட் இலக்கம் 1 / 1272B & 1 / 1272C என குறிக்கப்பட்டு சகலதும் பிரிக்கப்பட்ட மாணிக்கந்தோட்டம் எனும் நிலமானது, J/79 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட, இலக்கம் 210, நாவலர் வீதியில் வண்ணார் பண்ணை தென் கிழக்கில், வண்ணார் பண்ணை பரிஸ் பிரிவிற்கு உட்பட்டதாக, யாழ்ப்பாண நகர சபை எல்லைக்குட்பட்ட, யாழ்ப்பாண மாவட்டம், வட மாகாணத்தில் அமைந்துள்ளது. இது லொட் இலக்கம் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணி,

கிழக்கெல்லை : வீதியால்
வடக்கெல்லை : 30.11.2009 திகதியிடப்பட்ட திட்ட இல. 1272 இன் லொட் 1 ஆல்
மேற்கெல்லை : முருகேசு ஆறுமுகம் மற்றும் முருகேசு காசிப்பிள்ளை என்பவர்களின் சொத்தின்
தெற்கெல்லை : திட்ட இல 1272A இன் லொட் 1 ஆல்

மூலமாகவும் சூழப்பட்டிருக்கிறது. 04 Lms V.C & 01 Kls எனும் அளவுடைய இது, எஸ். சுப்ரமணியம் என்பவரால் தயாரிக்கப்பட்ட 25.11.2016 திகதியிடப்பட்ட நிலவரைப்பட இலக்கம் 1272C இலக்க நிலவவரப்படத்துக்கதகற்ப 04 Lm V.C & 02.89 Kls எனும் அளவுடையதாக குறிக்கப்பட்டுள்ளதுடன் இதில் 02 Lms V.C & 08.15 Kls ஆனது 1/1272B ஆக குறிக்கப்பட்டுள்ளது. நில அளவையாளர் எஸ். சுப்ரமணியம் என்பவரால்14.05.2012 இல் தயாரிக்கப்பட்ட நிலவரைப்பட இலக்கம் 1272B இல் லொட் இலக்கம் 1 காணியிலிருக்கும் கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக காணியின் பரப்பளவு 02 Lms V.C & 08.15 Kls ஆகும்.

**மக்கள் வங்கியினால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ்,**
நான் மேலே உள்ள சொத்துக்களை பொது ஏலத்தில்
**திங்கட்கிழமை 06 ஜூன் 2022 அன்று மு.ப 09.30**
மக்கள் வங்கி - 19, ஸ்டான்லி சாலை யாழ்ப்பாணம்

**சொத்துக்கான அனுகல்**

யாழ் நகரிலிருந்து பலாலி வீதியில், இலுப்பையடி சந்தி வரை பயணிக்கவும். அதிலிருந்து இடப்புறமாக நாவலர் வீதியில்150 மீட்டர் தூரம் சென்று, ரயில்வே கடவையை கடக்குமுன்னர், இந்து ஆலயத்தை தாண்டியவுடன், இடப்புறமுள்ள தனியார் வீதியில் திரும்பவும். அங்கு குறித்த இடமானது வலப்புறத்தில் 30 மீட்டர் தூரத்தில், குறித்த இடத்தின் கிழக்கு எல்லை அமைந்துள்ளது. இடத்தினை மோட்டார் வண்டியில் அடைவதற்கு வீதிவரை தார்ப்பாதை அமைந்துள்ளது.

**தீர்மான அறிவிப்புகளுக்காக**

மேலதிக தகவல்களிற்கு 2021 தை மாதம் 8 ஆம் திகதி அரச வர்த்தமானி மற்றும் டெய்லி நியூஸ், தினமின, மற்றும் தினகரன் பத்திரிகைகளை பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை: -**

ஏல விற்னையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பனமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்)
(4) விற்பனை செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் (இருப்பின்)
(5) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம் - யாழ்ப்பாணம் : இலக்கம் 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் செலுத்தப்படல் வேண்டும் .

மேலே குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட பணத்தை செலுத்த முடியவில்லை எனில் ஏற்கனவே செலுத்திய கொள்முதல் விலையின் 10% இனை பறிமுதல் செய்ய வங்கிக்கு உரிமை உள்ளதுடன் சொத்தை மறுவிற்பவன செய்வதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும்.
பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமை அலுவலகம்- யாழ்ப்பாணம்
82, கண்ணதிட்டி சாலை, யாழ்ப்பாணம்
0212 222 473

முன்னறிவிப்பின்றி மேல் குறிப்பிட்ட ஏல விற்பனையை இரத்துச் செய்யவும்/நிறுத்தவும் வங்கிக்கு உரிமை உண்டு.

DK's AUCTIONS
To Professionally Serve the Nation

**டல்லஸ் கெலார்ட்**
அங்கீகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்
இல .146/3, காலதேரா கார்டன்ஸ், கீழ் துடுகெமுனு தெரு, கொஹுவல.
தொ.பே: 11 4367467, 11 4367111 | aucslk@gmail.com

---

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல்

**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களின் போக்குவரத்திற்கான விலைமனுக்கோரல்**

**ஒப்பந்த இலக்கம் - RDA/DPR/SE/GALLE-Bus/2022/25**

01. **வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் குழுவின் தலைவரினால்** வீதி அபிவிருத்தி அதிகார சபைக்காக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வீதிகளில் காலை மற்றும் மாலை நேரங்களில் **"மகநெகும மஹமெதுர"** மற்றும் **"செத்சிரிபாய" கட்டிடத்தொகுதியில் கடமையாற்றும் ஊழியர்களுக்காக இரண்டு வருட (2022-2024)** காலத்திற்கான போக்குவரத்து சேவை வழங்குவதற்காக, **2018 இல் அல்லது அதற்கு பின் போக்குவரத்து திணைக்களத்தில்** பதிவு செய்யப்பட்ட பேருந்துகளை வழங்கும் தகுதியான மனுதாரர்களினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றது.
   - **கராபிட்டிய - காலி - பின்னதூவ - பத்தேகம - குருந்துகஹதெக்ம - கொட்டாவ - பத்தரமுல்லை**
02. **வீதி அபிவிருத்தி அதிகார சபை** பிரதம செயற்படுத்தும் நிறுவனமாக செயற்படும்.
03. மனுக் கோரல் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய செயற்படுத்தப்படும்.
04. மனு ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியிலிருந்து 91 கலண்டர் நாட்கள் வரை மனுக்கள் செல்லுபடியாகும்.
05. மனுக்கள் **ரூ.145,000/-** பெறுமதியுடைய காப்புறுதிப்பிணை இணைக்கப்பட்டிருக்க வேண்டும். **(அனைத்து காப்புறுதிப்பிணைகளும் 2022.09.19 ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.)** காப்புறுதிப்பிணைத் தொகை இணைக்கப்படாத அனைத்து மனுக்களும் நிராகரிக்கப்படும்.
06. மனு ஆவணங்களின் அனைத்து பக்கங்களிலும் மனு தாரர் தனது உத்தியோக பூர்வ முத்திரையுடன் கையொப்பமிட வேண்டும்.
07. **பத்தரமுல்லை, கொஸ்வத்தை, டென்சில் கொபேகடுவ மாவத்தை, இல-216 "மகநெகும மஹமெதுர" 4வது மாடியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் பிரிவில்** எவ்வித கட்டணமும் இன்றி மனு ஆவணங்களை அலுவலக நேரத்தில் இலவசமாக பரீட்சிக்க முடியும்.
08. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2022.05.06** ஆம் திகதியிலிருந்து **2022.05.19** ஆம் திகதி வரை **மு.ப.09.00** மணியிலிருந்து **பி.ப.15.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூ.3,240/- (வட்வரி உள்ளடங்களான)** கட்டணத்தை **இலங்கை வங்கி - கூட்டுறவு கிளை, கணக்கு இலக்கம் 0000001943, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வைப்பிலிட வேண்டும்.** 1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் பதிவாளர் வெளியிட்டுள்ள பதிவு சான்றிதழ் உடன் எழுத்து மூல விண்ணப்பத்தை **பத்தரமுல்லை, டென்சில் கொபேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான "மகநெகும மஹமெதுர" 4 வது மாடியில் அமைந்துள்ள கொள்முதல் பிரிவின் பணிப்பாளர் காரியாலயத்தில்** சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். பூர்த்திசெய்யப்பட்ட மூடிய மனுக்களை **2022.05.20** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும். தாமதமாக கிடைக்கும் மனுக்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
09. முத்திரையிடப்பட்ட மனு ஆவணங்களை பிரதிகளுடன் மேலே குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைக்குமாறு **தலைவர், வீ.அ.அ.ச கொள்முதல் குழு, முதலாம் மாடி, "மகநெகும மஹமெதுர" இல-216 டென்சில் கொபேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நேரில் கையளிக்க வேண்டும். மனுக்கள் அடங்கியுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களுக்கான போக்குவரத்து சேவை - காலி"** எனக் குறிப்பிடப்பட வேண்டும்.
10. **பத்தரமுல்லை, கொஸ்வத்தை, டென்சில் கொபேகடுவ மாவத்தை, "மகநெகும மஹமெதுர" 4வது மாடியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் (கொள்முதல்)** காரியாலயத்தில் மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் சந்தரப்பத்தில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் பங்கேற்க முடியும்.
11. மேலதிக விபரங்களுக்கு **தொலைபேசி இலக்கம் : 011-2884790 ஊடாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளரை (கொள்முதல் பிரிவு)** தொடர்பு கொள்ள முடியும்.

தலைவர்,
**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை.**

---

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

### அறிவித்தல்
### ஆரம்பப் பாடசாலைச் சேவைத் தொழில்

(136ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33(1)(அ)ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சர் அவர்களால் ஆக்கப்பட்டு 2000ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ஆம் திகதிய 1120/3ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமான கட்டளையின் வாயிலாக எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைக் கொண்டு, தொழில் ஆணையாளர், பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி ஆகிய நான், ஆரம்பப் பாடசாலை சேவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள், உதவியாளர்கள் தொடர்பாக கீழ்க் காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த சம்பள அளவினை அக்கட்டளைச் சட்டத்தின் 33(2)ஆம் பிரிவின் கீழ் நிர்ணயிப்பதற்கு உத்தேசித்துள்ளேன் என, அக்கட்டளைச் சட்டத்தின் 28ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2022ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரினால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஒவ்வோர் ஆட்சேபனையும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகிறதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

**பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி**
**தொழில் ஆணையாளர் நாயகம்**

**'மெஹெவரபியெச'**
**தொழில் திணைக்களம்,**
**கொழும்பு- 05,**
**2022ஆம் ஆண்டு 4 மாதம் 29ஆம் திகதி**

**அட்டவணை**

ஆரம்பப் பாடசாலைச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபையினாலாக்கப்பட்டு 2000ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ஆந் திகதிய 1120/3ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரமான அறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே கூறப்பட்டுள்ளனவும், காலத்திற்குக்காலம் மாற்றப்பட்டனவும் 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26ஆந் திகதிய 2138/3ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக மாற்றப்பட்டனவுமான முடிவுகள் பின்வருமாறு மேலும் மாற்றப்படுதல் வேண்டும்.

| முதலாவது நிரல் (பிரதேசம்) | இரண்டாவது நிரல் (தொழில்) | மூன்றாவது நிரல் (ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம்) |
|---|---|---|
| மாநகர சபை எல்லையினுள் | (அ) ஆசிரியர்கள் | ரூபா 16,875.00 |
| | (ஆ) உதவியாளர்கள் | ரூபா 14,375.00 |
| நகர சபை எல்லையினுள் | (அ) ஆசிரியர்கள் | ரூபா 15,937.50 |
| | (ஆ) உதவியாளர்கள் | ரூபா 13,750.00 |
| பிரதேச சபை எல்லையினுள் | (அ) ஆசிரியர்கள் | ரூபா 14,062.50 |
| | (ஆ) உதவியாளர்கள் | ரூபா 12,500.00 |

மேலே (ஆ) குறியீட்டினால் காட்டப்பட்டுள்ள சேவைகளும். மேலே (அ) குறியீட்டினால் காட்டப்பட்டுள்ள சேவைகளுடன் தொடர்புடைய தற்காலிக அல்லது வேறு யாதாயினும் சேவைகள் இருப்பின் அவைகளும் இதில் அடங்கும்.

---

## குளியாப்பிட்டிய நகர சபை

### பெறுகை அறிவித்தல்

குளியாப்பிட்டிய பிரதேச சபைக்குரித்தான அம்பவ உக்கிப்போகாத குப்பை முகாமைத்துவ முற்றவெளியில் சிரிலக் சுரங்க மாதிரியில் 100m3 கொண்ட உயிரியல் வாயு பிரிவொன்றை நிர்மாணிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. (குறைந்தபட்சம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சிரிலக் சுரங்க மாதிரியிலான 50m3 அல்லது அதற்கு மேற்பட்ட அளவிலான 03 உயிரியல் வாயு அலகுகள் நிர்மாணித்திருத்தல் வேண்டும்)

இந்த விலைகளை எம்மால் வழங்கப்படும் ஆவணங்கள் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அந்த ஆவணங்களை 2022-05-06ஆம் திகதி முதல் 2022-05-20ஆம் திகதி வரையில் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா தொகையை குளியாப்பிட்டிய பிரதேச சபையின் பிரதான அலுவலக சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். சகல விண்ணப்பப்படிவங்களும் 2022-05-25ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் பதிவுத் தபாலில் அல்லது பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டுச் சமர்ப்பிக்கலாம். விலைமனுக்கள் 2022-05-26ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு குளியாப்பிட்டிய பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் 037-4947212 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

2022-05-06
**ஈ.எம். விஜயசிரி ஏக்கநாயக்க,**
**தலைவர்,**
**குளியாப்பிட்டிய பிரதேச சபை.**

---

## ஆர்வ வெளிப்பாட்டிற்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**

### நீர்ப்பாசன திணைக்களம்

### உத்தேசிக்கப்பட்டுள்ள கீழ் மாவத்து ஓய செயற்றிட்டத்திற்கான சுற்றாடல் முகாமைத்துவ திட்டத்திற்கான உசாத்துணை சேவைகளை பெற்றுக் கொள்ளல் (EMP)

**Package No.: ID/HO/CT/EMP/2022/02**

1. இங்கே விபரிக்கப்பட்டுள்ள சேவைகளை வழங்குவதற்காக அவர்களின் ஆர்வத்தை வெளிப்படுத்துமாறு தகுதியுள்ள உசாத்துணைக் கம்பனிகளை நீர்ப்பாசன திணைக்களத்தின் சார்பாக திணைக்கள உசாத்துணை பெறுகைக் குழுவானது அழைக்கின்றது. ஆர்வமுள்ள உசாத்துணையாளர்கள் அவர்கள் தேவைப்படுத்தப்பட்டுள்ள சேவைகளை செயற்படுத்துவதற்கான தகைமைகளைக் கொண்டுள்ளதாக (சிறுவெளியீடுகள், நிகரான பணி ஒதுக்கீடுகளின் விளக்கம், நிகரான நிபந்தனைகளில் பணியாற்றிய அனுபவம், பணியாளர்களிடையே பொருத்தமான திறன்கள் இருத்தல் போன்றவை) காட்சிப்படுத்தல் வேண்டும். உசாத்துணையாளர்கள் அவர்களின் தகைமைகளை வலுப்படுத்துவதற்கான ஏனையோருடன் இணைந்து பணியாற்றலாம்.
2. தேசிய பெறுகை முகவரான்மையினால் பிரசுரிக்கப்பட்ட உசாத்துணையாளர்களை தெரிவு செய்தல் மற்றும் வேலைவாய்ப்பிற்கான வழிகாட்டிகளில் வழங்கப்பட்டுள்ள நடைமுறைகளுக்கமைவாக உசாத்துணைக் கம்பனியொன்று தெரிவு செய்யப்படும்.
3. ஆர்வமுள்ள உசாத்துணையாளர்கள் மேலதிக தகவலை கீழேயுள்ள முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

   நீர்ப்பாசன பணிப்பாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகை), ஒப்பந்தக் கிளை, 2 ஆம் மாடி, நீர்பாசன திணைக்களம், பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07. (தொலைபேசி இல.: 011-2582897/ 011-2583305). (தொலைநகல் இல.: 011-2583305). (மின்னஞ்சல்: **dictptirrigation2015@gmail.com**)
4. மேலும், உசாத்துணையாளர்கள் நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகபூர்வ **www.irrigation.gov.lk** என்ற இணையதளத்திலிருந்து நியதிக்குறிப்புக்களை பார்வையிடலாம்.
5. ஆர்வ வெளிப்பாடுகள் பின்வரும் முகவரியில் 2022.05.20 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

   **தலைவர்,**
   **திணைக்கள உசாத்துணை பெறுகைக் குழு,**
   **அறை இல.: 311, (பிரதான நிதியிடல் அலுவலகரின் அறை),**
   **03ஆம் மாடி, நீர்ப்பாசனத் திணைக்களம்,**
   **இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,**
   **கொழும்பு-07.**

**தலைவர்,**
**திணைக்கள உசாத்துணை பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07.**

**திகதி: 06.05.2022**

---

## அறிவித்தல்

2022 பெப்ரவரி 21 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் PV 2045 என்ற கம்பனி பதிவிலக்கத்தைக் கொண்ட ஆனந்தய வாத்துவ (பிறைவட்) லிமிட்டட் ஆனது PB 1192 என்ற கம்பனி பதிவிலக்கத்தைக் கொண்ட லாவ்ஸ் லெஷர் லிமிட்டட் உடன் ஒருங்கிணைக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 242(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் நாம் அறிவித்தலை வழங்குகின்றோம்.

ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனியானது லாவ்ஸ் லெஷர் லிமிட்டட் ஆகும்.

**ஏச்.ஆர்.எஸ்.எஸ். ஹதேகொட**
**கம்பனிச் செயலாளர்.**

---

**வழக்கறிஞரின் அதிகாரத்தை ரத்து செய்வதற்கான அறிவிப்பு**

நான், ஜெரோம் டிராவிஸ் மார்ட்டின் (பாஸ்போர்ட் எண். N7090959 மற்றும் தேசிய அடையாள அட்டை எண் 822030947V) இல. 13, 1வது லேன், அங்குலான ஸ்டேஷன் ரோடு, மொரட்டுவா, இலங்கை, தற்போது B-30-06, நிடோஸ் ரெசிடன்செஸ், No. 22A இல் வசிக்கிறார். 2/125, தேச பெட்டாலிங், 57100, மலேசியாவில் கோலாலம்பூர், 2021 செப்டம்பர் 30 தேதியிட்ட பவர் ஆஃப் அட்டர்னி, தூதரக அதிகாரியும், மலேசியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியுமான அன்னே பெர்னாண்டோவால் சான்றளிக்கப்பட்டது என்பதை சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இதன் மூலம் தெரிவிக்கிறேன். ஜெஹான் கீத் மார்ட்டின் (தேசிய அடையாள அட்டை எண் 861351530V) இலக்கம் 13, 1வது லேன், அங்குலான நிலைய வீதி, மொரட்டுவை 01.04.2022 முதல் ரத்து செய்யப்பட்டது. எதிர்காலத்தில் அவர் செய்யும் எந்த செயலுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

ஜெரோம் டிராவிஸ் மார்ட்டின்

இல. 13, 1வது லேன், அங்குலான ஸ்டேஷன் ரோடு, மொரட்டுவா, இலங்கை
(B-30-06, நிடோஸ் ரெசிடன்செஸ், No. 22A இல் வசிக்கிறார். 2/125, தேச பெட்டாலிங், 57100, கோலாலம்பூர், மலேசியாவில்)

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

அம்பலாந்தொட்ட, லுணாவ தெற்கு, ரஜசரணகம, கிராமோதய மாவத்தை, 351/ஏ என்ற முகவரியில் வசிக்கும் சந்தன திலக்க கமகே (தே.அ.அ. இல. 853601667V) ஆகிய நான் 2018.07.03 ஆம் திகதியன்று நிஷ்யா விஜேசூரிய (சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிஸ், சத்தியபிரமாண ஆணையாளர்) என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 5094 என்ற இலக்கத்தையுடைய விஷேட அற்றோணித்தத்துவத்தின் மூலம் எனக்கு வழங்கப்பட்ட தத்துவத்தை இன்றிலிருந்து இரத்துச் செய்துள்ளேன் என இலங்கை குடியரசிற்கும் இலங்கை பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

**சந்தன திலக்க கமகே**

**2022 மே மாதம் 06 ஆம் திகதியாகிய இன்று.**

---

## 2023ஆம் வருடத்தில் வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு அபிவிருத்தி முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ளல்

பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் 2023ஆம் வருடத்தில் வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல் மற்றும் வரவு செலவுத்திட்ட ஆவணத்திற்கான அபிவிருத்தி முன்மொழிவுகளை பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான அபிவிருத்தி முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதானால் அந்த முன்மொழிவுகளை 2022-06-30ஆம் திகதிக்கு முன் பண்டுவஸ்நுவர பிரதேச சபைக்குச் சமர்ப்பிக்குமாறு பண்டுவஸ்நுவர பிரதேச சபை அதிகாரப் பிரதேச மக்களுக்கு இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

**பீ.எம். தர்மசேன பமுனுசிங்க,**
**தலைவர்,**
**பண்டுவஸ்நுவர பிரதேச சபை.**
**2022-05-04.**

---

## சம்பளச் சபைகள் சட்டளைச் சட்டம்

### அறிவித்தல்
### பற்றிக் தொழில்

(136ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33(1)(அ)ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சர் அவர்களினால் ஆக்கப்பட்டு 1979 ஆண்டு ஓகஸ்ட் மாதம் 03ஆம் திகதிய 48ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையொன்றின் வாயிலாக தொழில் ஆணையாளர் நாயகம் பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி ஆகிய நான் மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 33(2)ஆம் பிரிவின் கீழ் பற்றிக் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு நேர வேலை தொடர்பாக இவ்வறிவித்தலுக்கான அட்டவணையிற் கூறப்பட்டுள்ள ஆகக் குறைந்த சம்பள விகிதங்களை நிருணயிப்பதற்கு உத்தேசித்துள்ளேன் என அக்கட்டளைச சட்டத்தின் 28ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2022ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரினால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகிறதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

**பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி**
**தொழில் ஆணையாளர் நாயகம்**

**'மெஹெவரபியெச'**
**தொழில் திணைக்களம்,**
**கொழும்பு- 05,**
**2022ஆம் ஆண்டு 4 மாதம் 29ஆம் திகதி**

**அட்டவணை**

பற்றிக் தொழிலுக்கான சம்பளச் சபையினால் தீர்மானிக்கப்பட்டதும், 1979ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆந் திகதிய 64/22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளனவும் 2013ஆம் ஆண்டு சனவரி மாதம் 03ஆம் திகதிய 1791/33ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் இறுதியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளனவுமான தீர்மானங்கள் கீழே அட்டவணையில் உள்ளவாறு மேலும் வேறுபடுத்தப்படும்.

| நிரல் I | நிரல் II சாதாரண வேலை நாளொன்றிற்குரிய சம்பள விகிதம் |
|---|---|
| (அ) சித்திரம் வரைவோர், வடிவுருவங் களமைப்போர் | 635.00 |
| (ஆ) வெள்ளாவியிடுவோர், சாயமிடுவோர் | 545.00 |
| (இ) இஸ்திரிக்கையிடுவோர், உருவப் பிரதி செய்வோர், மெழுகிடுவோர் | 500.00 |

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# சம்பியன்ஸ் லீக்: இறுதிப்போட்டியில் ரியல் மட்ரிட் அணி



சம்பியன் ஸ் லீக் கால்பந்து தொடரின் இரண்டாவது லெக் அரையிறுதிப் போட்டியில், ரியல் மட்ரிட் அணி வெற்றிபெற்றுள்ளது.

சாண்டியாகோ பெர்னாபு விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில், ரியல் மட்ரிட் அணியும் மன்செஸ்டர் சிட்டி அணியும் மோதின. பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், ரியல் மட்ரிட் அணி 31 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. இதில் ரியல் மட்ரிட் அணி சார்பில், றொட்ரிகோ 90ஆவது நிமிடத்தில் ஒரு கோலும், 91ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் அடித்தனர்.

மேலும், நட்சத்திர வீரரான கரீம் பென்ஸிமா 95ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி ஒரு கோல் அடித்தார். மன்செஸ்டர் அணி சார்பில், றியாட் மஹரெஸ் 73ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

மொத்தமாக, இரண்டு லெக் போட்டிகளின் முடிவில், ரியல் மட்ரிட் அணி 65 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

முதல் லெக் போட்டியில், 43 என்ற கோல்கள் கணக்கில் மன்செஸ்டர் சிட்டி அணி வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. எதிவரும் மே 29ஆம் திகதி நடைபெறவுள்ள சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் இறுதிப் போட்டியில், ரியல் மட்ரிட் அணி, லிவர்பூல் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

# டுபாயில் அதிரடி காட்டிய சமரி அத்தபத்து

ஐக்கிய அரபு இராச்சியத்தின் டு பாய் நகரில் நடைபெற்று முடிந்திருக்கும் பெயார்பிரேக் (FairBreak) ரி 20 தொடரின் முதல் போட்டியில், வோரியர்ஸ் வுமன் (Warriors Women) அணியினை பேல்கோன்ஸ் வுமன் (Falcons Women) அணி சமரி அத்தபத்துவின் அதிரடி சதத்தோடு 8 விக்கெட்டுக்களால் வீழ்த்தியிருக்கின்றது.

பாலின சமத்துவத்தினை (Gender Equality) வலியுறுத்தும் நோக்கோடு பெயார்பிரேக் (FairBreak) ரி 20 தொடரானது ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நிலையில், இதன் முதல் போட்டி நேற்று முன்தினம் (04) ஆரம்பமாகியது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பேல்கோன்ஸ் அணியின் தலைவி சூஸி பேட்ஸ் முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தினை வோரியர்ஸ் வுமன் அணிக்கு வழங்கினார்.

அதன்படி போட்டியில் முதலில் துடுப்பாடிய வோரியர்ஸ் வுமன் அணி 20 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்கள் எடுத்தது. வோரியர்ஸ் வுமன் அணியின் துடுப்பாட்டம் சார்பில் அவுஸ்திரேலிய வீராங்கனையான ஜோர்ஜியா ரெட்மேய்ன் 61 பந்துகளில் 11 பௌண்டரிகள் அடங்கலாக 80 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காது காணப்பட, ஹெய்லி மெதிவ்ஸ் 35 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் 7 பௌண்டரிகள் அடங்கலாக 58 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் பேல்கோன்ஸ் அணியின் பந்து வீச்சு சார்பில் சொர்னரின் டிப்போச் மற்றும் மேரிகோ ஹில் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 178 ஓட்டங்களை அடைய பதிலுக்கு துடுப்பாடிய பேல்கோன்ஸ் அணிக்கு இலங்கை வீராங்கனையான சமரி அத்தபத்து அதிரடியான சதம் ஒன்றினைப் பெற்றுக் கொடுத்தார்.

தொடர்ந்து இந்த சதத்தின் உதவியோடு பேல்கோன்ஸ் வுமன் அணி போட்டியின் வெற்றி இலக்கினை 18.4 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 178 ஓட்டங்களுடன் அடைந்தது. பேல்கோன்ஸ் அணியின் வெற்றியினை உறுதி செய்த சமரி அத்தபத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்ததோடு வெறும் 55 பந்துகளில் 6 சிக்ஸர்கள் மற்றும் 13 பௌண்டரிகள் அடங்கலாக 107 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.



மறுமுனையில் பேல்கோன்ஸ் வுமன் அணித் தலைவி சூஸி பேட்ஸ் முதல் விக்கெட்டுக்காக 133 ஓட்டங்களை சமரி அத்தபத்துவுடன் இணைந்து பகிர்ந்திருந்த நிலையில், 43 பந்துகளுக்கு ஒரு சிக்ஸர் மற்றும் 8 பௌண்டரிகள் அடங்கலாக 60 ஓட்டங்களை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. வோரியர்ஸ் அணியின் பந்து வீச்சு சார்பில் ஹெய்லி மெதிவ்ஸ் மற்றும் ஈஷா ஓசா ஆகியோர் தலா ஒரு விக்கெட்வீதம் கைப்பற்றியிருந்த போதும் அவர்களது பந்துவீச்சு வீணாகியிருந்தது. போட்டியின் ஆட்டநாயகியாகவும் சமரி அத்தபத்து தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# டெஸ்ட் தரவரிசை: 5 ஆண்டுகளுக்குப் பிறகு அவுஸ்திரேலியா முதலிடம்



டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி 20 அணிகளுக்கான வருடாந்த தரவரிசையை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐசிசி) கடந்த (04) வெளியிட்டுள்ளது. ஐசிசி வெளியிட்டுள்ள வருடாந்த டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் அவுஸ்திரேலிய அணி 119 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இரண்டாவது இடத்தில் உள்ள இந்தியாவை விடவும் (111 புள்ளிகள்) அவுஸ்திரேலிய அணி 8 புள்ளிகள் கூடுதலாகப் பெற்று முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அவுஸ்திரேலிய அணி இவ்வாறு டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் முதலிடம் பிடித்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

பெட் கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி இந்த ஆண்டு ஆரம்பத்தில் ஆஷஸ் தொடரை 4 இற்கு 0 என்ற கணக்கில் வெற்றி கொண்டது. அதனைத் தொடர்ந்து சமீபத்தில் பாகிஸ்தானை 1– 0 என வீழ்த்தி டெஸ்ட் தொடரை வென்றது. இதனால் டெஸ்ட் தரவரிசையிலும், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் புள்ளிகள் பட்டியலிலும் அவுஸ்திரேலிய அணி முதலிடத்திற்கு முன்னேறியது. ஐசிசி வெளியிட்டுள்ள டெஸ்ட் அணிகளுக்கான வருடாந்த தரவரிசையில் 3ஆவது இடத்தில் நியூசிலாந்தும், 4ஆவது இடத்தில் தென்னாபிரிக்காவும், 5ஆவது இடத்தில் பாகிஸ்தானும் உள்ளன. இங்கிலாந்து, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ், ஜிம்பாப்வே ஆகிய அணிகள் கடைசி 5 இடங்களில் உள்ளன. 2019 மே மாதம் முதல் நடைபெற்ற டெஸ்ட் தொடர்களின் அடிப்படையில் இந்தப் புதிய தரவரிசை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒருநாள் போட்டிக்கான தரவரிசையில் கேன் வில்லியம்சன் தலைமையிலான நியூசிலாந்து அணி 125 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. இதில் நடப்பு உலக சம்பியனான இங்கிலாந்து அணி 124 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், அவுஸ்திரேலிய அணி (107 புள்ளிகள்) 3ஆவது இடத்திலும் உள்ளன. இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் ஆகிய அணிகள் 4 முதல் 7 வரையான இடங்களைப் பெற்றுக்கொள்ள, இலங்கை அணி 6 போனஸ் புள்ளிகளைப் பெற்று 87 புள்ளிகளுடன் 8ஆவது இடத்தில் உள்ளது.

இதேவேளை, ரி 20 அணிகளுக்கான பட்டியலில் இந்தியா 270 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது. இரண்டாவது இடத்தில் உள்ள இங்கிலாந்தை விட 5 புள்ளிகள் கூடுதலாக அந்த அணி பெற்றுள்ளது. 2ஆவது இடத்தில் இங்கிலாந்தும், 3ஆவது இடத்தில் பாகிஸ்தானும் காணப்படுகின்றன. தற்போது 6ஆவது இடத்தில் உள்ள நியூசிலாந்தை தென்னாபிரிக்காவும், அவுஸ்திரேலியாவும் பின்னுக்குத் தள்ளியுள்ளன. அதேபோன்று பங்களாதேஷ் மற்றும் இலங்கை அணிகள் முறையே 8ஆவது மற்றும் 9ஆவது இடங்களைப் பெற்றுக்கொள்ள, ஆப்கானிஸ்தான் அணி 10ஆவது இடத்தில் உள்ளது.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Since 1978
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மோபைல் இல. : ..........
SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 07-05-2022 இல. 06

SLT-Mobitel Mobile Non-Stop வொக்கா
நீங்கள் விரும்பும் 9 App இற்கும் வேண்டியளவு data மற்றும் மேலதிகமாக 2GB.
398 ரூபா இற்கு #170#
அழைத்து அல்லது SELFCARE APP ஊடாக இப்போதே அக்டிவ் செய்யுங்கள்.
www.sltmobitel.lk
SLTMOBITEL

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 6ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.